
# யாழ்பாடி

## கலாசாரமலர்-3




யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்.

2019

30 07.2019

# யாழ்பாடி

## கலாசார மலர் - 03

**யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை**

**பிரதேச செயலகம்,**

**யாழ்ப்பாணம்.**

**2019**

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | யாழ்பாடி கலாசார மலர் – 3 |
| பதிப்புரிமை | : | யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். |
| பதிப்பு | : | 2019 |
| பக்கங்கள் | : | xvi + 78 |
| பக்க அளவு | : | B5 |
| பிரதிகள் | : | 300 |
| அட்டைப்பட வடிவமைப்பு | : | கலாபூஷணம் ம. அன்ரன் யோசப் |
| நிதி அனுசரணை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாணம். |
| அச்சப் பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ் 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே : 021 222 8266 / 021 221 4777 |

# யாழ்பாடி

## கலாசார மலர் - 3

**பிரதேச செயலகம்**
**யாழ்ப்பாணம்**

# தமிழ்த் தாய் வாழ்த்து



நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொலுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்து துடைக்கினும் ஓர்
எல்லை அறுபரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம் போல உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணியம் - பெ. சுந்தரம்பிள்ளை

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ் மொழி! வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# யாழ்ப்பாண பிரதேச கலாசார பேரவை

**பதவி நிலையினர்**

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு. எஸ். சுதர்சன் |
| உபதலைவர் | :- | திரு. இரா. செல்வவடிவேல் |
| செயலாளர் | :- | திருமதி. ம. மேர்சி சுஜந்தினி |
| கலைமேம்பாட்டு செயலாளர் | :- | திரு. கி. மா. நெல்சன் |
| பொருளாளர் | :- | திரு. ஜோ. பத்திநாதன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | :- | |

திரு. பி. யூல்ஸ்கொலின்
திரு. ம. அன்ரன் யோசப்
திரு. கு. இராயப்பு
திரு. ந. தனேந்திரன்
திரு. இ. சற்குருநாதன்
திருமதி ந. சேர்ச்சிலம்மா
திரு. தொ. அருள்ராசா
திரு. சா. வி. ஜோண்கலிஸ்ரஸ்
திருமதி க. சுதர்சினி
செல்வி ச. விஜயலட்சுமி
செல்வி. ம. கிருஸ்ணவேணி
திரு. நீ. ம. பாலச்சந்திரன்
திரு. ச. வசன்பேக்
திரு. அ. இயேசுதாசன்
திரு. அ. தயான்
திரு. இ. வினோத்ராஜ்
செல்வி. செ. மேவிஸ் ஜீன்சியா
திரு. பா. வின்சன்ற்
திரு. மீரா லெவ்வை லாபீர்
திரு. நா. சுந்தரராஜா
திரு. சே. நவநீதன்

# யாழ் பிரதேச கலாசார பேரவை கீதம்

வாழிய வாழியவே - எங்கள் யாழ் பிரதேச
கலை கலாசார பேரவை வாழியவே - 02

கடல் படு திரவியம் தரை தரு பயிர் வளம்
ஆயிரம் ஆயிரமே - உடன்
அறிவியலொடு பல கலை வளம் இங்கே
வளர்வதும் ஆனந்தமே

பாணன் கலை பாடி பெற்ற பரிசெங்கள்
யாழ் மண் என மகிழ்ந்ததே - தினம்
நாமும் கலை பாடி பாரில் நிலைபெறவே
பணி பல புரிந்திடுவோம்

வாழி

கூத்தொடு பண்ணிசை நடனமும் வளமுற
வளருது யாமுனிலே - உடன்
சேர்த்துயர் கலைஞர்கள் மனமகிழ்த்தொன்றாய்
உயர்ந்திடும் நாளிதுவே

வாழி

மண்ணின் கலையாவும் விண்ணைத் தொட நின்று
வளர்ந்திடக் கரம் தொடுத்தே - யாழ்
மண்ணின் கலை பாரில் ஓங்கி உயர்ந்திடவே
உறுதியாய் உழைத்திடுவே

வாழி

# யாழ் பிரதேச கலாசாரப்பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்கள்.



இருப்பவர்கள் (இ.வ) : திரு. நா. சுந்தரராஜா, திரு. பி. யூல்ஸ்கொலின், திரு. நா. தனேந்திரன், திரு. இரா. செல்வவடிவேல் (உப தலைவர்), திரு. எஸ். சுதர்சன் (தலைவர், பிரதேச செயலர்), திரு. மீரா லெப்பை லாபீர், திரு. ஜோ. பத்திநாதன் (நிர்வாக கிராம அலுவலர்), திருமதி ம. மேர்சி சுஜந்தினி (கலாசார உத்தியோகத்தர்) திரு. இ. சற்குருநாதன்

நிற்பவர்கள் (இ.வ) : திரு. ம. அன்ரன்யோசப், திரு. க. விஜயரட்னம், திரு. செ. வசன்பேக், திரு. சா. வி. ஜோண்கலிஸ்ரஸ், திரு. சி. எம். நெல்சன் செல்வி. ச. விஜயலட்சுமி. திருமதி ந. சேர்ச்சிலம்மா, செல்வி. ப. தர்மினி, திரு. கு. இராயப்பு

## யாழ்பாடி - 3 மலர்க்குழு உறுப்பினர்கள்.



இருப்பவர்கள் (இ.வ) : திரு. சி. எம். நெல்சன், திரு. நா. தனேந்திரன், திரு. இரா. செல்வவடிவேல், திரு. எஸ் சுதர்சன் (பிரதேச செயலர்) திரு. மீரா லெப்பை லாபீர், திரு. கு. இராஜப்பு. திருமதி ம. மேர்சி சுஜந்தினி (கலாசார உத்தியோகத்தர்)

நிற்பவர்கள் (இ.வ) : திரு. செ. வசன்பேக், திரு. சா. வி. ஜோண்கலிஸ்ரஸ், செல்வி. ச. விஜயலட்சுமி. திருமதி ந. சேர்ச்சிலம்மா, செல்வி. ப. தர்மினி

# மலர்க் குழு

## ஆலோசனையும் வழிகாட்டலும்

**திரு. எஸ். சுதர்சன்**

பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை தலைவரும்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

## இதழாசிரியர்

**திருமதி. ம. மேர்சி சுஜந்தினி**

செயலாளர், கலாசார பேரவை,
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

1. திரு. இரா. செல்வவடிவேல்
2. திரு. கு. இராயப்பு
3. திரு. கி. மா. நெல்சன்
4. திரு. மீரா லெவ்வை லாபீர்
5. செல்வி. ச. விஜயலட்சுமி
6. திரு. நீ. ம. பாலச்சந்திரன்
7. திருமதி. ந. சேர்ச்சிலம்மா
8. செல்வி. ப. தர்மினி
9. திரு. செ. வசன்பேக்
10. திரு. சா. வி. ஜோண்கலிஸ்ரஸ்

# மலரினினுள்ளே....


01. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி ix
02. யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி x
03. சிவலையப்பள்ளி மௌளவியின் ஆசிச் செய்தி xi
04. அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி xii
05. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி xiii
06. பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி xiv
07. பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி xv
08. இதழாசிரியரின் எண்ணத்தில் இருந்து..... xvi
09. மனித விழுமியங்களை வாழ வைப்போம் 01
10. நாளை நமதாகும் நல்லதையே செய்வோம் 04
11. செயலிழக்கும் பாரம்பாரிய கிடுக்குத்தொழிலும் பெண்களின் வாழ்வாதார பாதிப்பும் 07
12. ஆதரவு 12
13. உளவளத்துணை சேவை தொடர்பான ஒரு நோக்கு 17
14. பெண்ணியம் போற்றுவோம் 23
15. யாழ்ப்பாணத் தமிழர் எதிர் சமூக விழுமியங்கள் 24
16. கலை (மன)வலிமை 30
17. குழந்தைகளின் உணவும் ஆரோக்கிய வாழ்வும் 31
18. இன்றைய சமுதாயத்தின் நிலை 35
19. சிறுவர்களின் உடல்நலம், அறிவு மற்றும் ஆற்றல் விருத்திக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்... 36
20. இன்பமொழி 40
21. நானிலம் போற்றிடும் நல்ல வாழ்வுக்கு.....! 42
22. தாய் நாடு 48
23. விழுதுகள் 51
24. குத்தாட்டமாக உருமாறிவரும் கூத்துக் கலைகள் 58
25. தமிழர் இசைக்கருவிகளும் தற்கால பயன்பாடும் 61
26. அன்பால் அணைப்போம் 65
27. உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்தல் 67
28. நாவலும் நாணலும் 70
29. கூட்டுக் குடும்பம் குதூகலமானது 75
30. பெண்ணியம் காத்திடு 78



உ

சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)

ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

25/06/2019



## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு!

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் யாழ்பாடி எனும் கலாசார மலரை வெளியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. கலாசாரப் பேரவையின் பணிகளை வெளிப்படுத்தி 3ஆவது மலராக வெளியிடுவது யாழ்ப்பாணத்தின் அனைத்து மக்களையும் மகிழ்விக்கின்றது. யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை, பண்பாட்டு மரபுகள், கலை இலக்கிய பணிகளை மேலும் வளர்க்கும் நிலையில் கலை சார்ந்த மக்களை ஊக்குவிப்பதாக இப்பணி அமைந்துள்ளது. இசைக்கருவி எனும் யாழை இசைத்து பரிசாகப் பெற்ற மண் யாழ்ப்பாண மண். அனைத்து உயிர்களுக்கும் இசையினால் வசப்படுகின்றன. இசையை ஆதாரமாக கொண்ட இப் பிரதேசத்தில் யாழ்பாடி எனும் நூல் இன்றைய பிரதேச செயலர் எஸ். சுதர்சன் தலைமையில் சிந்தனையான கட்டுரையுடன் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து உள்ளங்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமஸ்சுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீன குருமுதல்வர்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

*Rt.Revd.Dr.Justin B Gnanapragasam*
*Bishop of Jaffna*

*Bishop's House,*
*P.O.Box No. 02*
*Jaffna - Sri Lanka.*
**Tel: +94(0) 21 222 2649(O)**
**Email: gnanamjb48@gmail.com**

# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாண கலாசாரத்தின் பெருமையினையும், சிறப்பினையும் வெளிக்கொணருகின்ற "யாழ்பாடி கலாசார மலர் - 3" என்னும் சிறப்பு மலரினை யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை மீண்டும் வெளியீடு செய்கின்றமையையிட்டு ஆசிகூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பார்கள். அந்த வகையில் பல்துறை சார்ந்த கட்டுரை, கவிதை, சிறுகதை போன்ற எழுத்துப் படைப்புக்களினால் இம் மலர் அலங்கரிக்கப்பட்டுள்ளமை இம் மலரின் சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணத் தமிழர்களாகிய நாமும், நமது எதிர்கால சந்ததியினரும் எமது மண்ணின் அருமை பெருமைகளையும், எமது கலாசாரத்தின் பெறுமதிமிக்க அம்சங்களையும் பேணிப் பாதுகாத்து, அதை வளர்ச்சியடையச் செய்வதும் எமது தலையாய கடமையாகும். அந்த வகையில் இவ்வாறான இலக்கியப்படைப்புக்கள் வெளிவருவது காலத்தின் தேவையுமாகும். அத்தகைய ஒரு மகத்தான பணியினை இம்மலர் வழியாக யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை முன்னெடுப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இந்த மலர் வெறுமனவே ஆவணப்படுத்துகின்ற ஒன்றாக அமையாமல் அனைவரும் வாசித்து, எமது கலாசாரத்தை நன்கு அறிந்து, பிரதிபலித்து, பயனடைகின்ற ஒன்றாக அமைய எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய மகத்தான பணியை முன்னெடுக்கின்ற ஒவ்வொருவரையும் மனதார வாழ்த்தி, இறை ஆசீர் கூறி நிற்கின்றேன்.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள
**பேரருட்திரு. கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**
யாழ் ஆயர்

සමස්ත ලංකා ජම්ඉය්යතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYATHUL ULAMA

(Council of Muslim Theologians) Jaffna, Killinochchi Brabch
(இஸ்லாமிய மார்க்க அறிஞர் சபை) யாழ்ப்பாணம், கிளிநொச்சி கிளை

Sivala Palli Mosqu, Haathi Aboobakar Road, Moor Street, Jaffna.

# ஆசிச் செய்தி



"அளவற்ற அருளாலனும் அன்புடையோனுமாகிய இறைவனுக்கே! எல்லாப்புகழும்"

"அல்ஹம்துலிலாஹ்"

இன்று யாழ் மண்ணிலே விளையும் விளைச்சலாக கலைகலாசார பாரம்பரிய விழுமியங்களை வளர்க்க விதைத்ததோர் சிறுவிதை முளைத்து செடியாகி மரமாகி விருட்சமாக வழிசமைத்துக் கொண்டதற்கமைய "யாழ்பாடி" எனும் நூலை உருமாக்கியுள்ளமை இனமத பேதமற்றதோர் சமுதாய ஒற்றுமையை அழகான அன்பானதோர் வட்டத்தினுள் வரையப்பட்ட சட்டமாக்கி வேற்றுமையை தூக்கி வீசிவிடும் முன்னுதாரணமாகும் என்பது உணரப்படுகின்றது. அத்துடன் எம்மை ஒன்றித்து வாழ்விக்கவும் சகவாழ்வும் சமாதான மும் சாத்தியமாக எடுத்துக்காட்டாய் விளங்கும் கலை இலக்கிய கலாசாரம் சார் படைப்புக்கள் எம்மை ஒன்று சேர்த்து வைப்பது அழகுக்கு அழகு சேர்ப்பது பெருமையாகவும் மகிழ்வாகவும் இருப்பது உண்மையிலும் உண்மை. எனவே சமூக விழுமியங்களை மேன்மைப்படுத்தும் பதிவுகளை முத்தெனப்பதிக்கும் முகஅறிமுகங்களின் ஆக்கங்களை வெளிக்கொணரும் யாழ்பாடி - 03 மலர் காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷம். ஆதலால் அதன் தேவை யாழூருக்குத் தேவை என்பதும் காலத்தின் தேவை.

ஆதலால் இம்மலர் பரந்து விரிந்து பல பல மலர்களாக பூத்துக் குலுங்கிச் சிரிக்கவும் இதற்காக அயராது இரவு பகல் பாராது இன்முகத்துடன் பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும், இதற்காக முயற்சித்தோர், ஆக்கமளித்தோர், ஊக்கமளித்தோர், குறிப்பாக யாழ் பிரதேச செயலக கலாசார நிர்வாக உத்தியோகத்தர் அனைவருக்கும் வள்ள அல்லாஹ் ஆலாவின் அருள் கலைநிறைவும் அவர்களுக்கான நலமும், வேண்டி பிரார்த்தித்து தமிழ்த்தாய் மண்ணின் தமிழ் பேசும் இனம் இந்து கிறிஸ்து முஸ்லிம் மக்கள் ஒற்றுமை உயர்ந்து இம் மலர் இன்னும் உயர்ந்து மணம் பரப்பிட இருகரம் ஏந்தி துவா செய்கின்றேன். ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாம்!

ஈழத்தமிழ் இன கலாசார
பொக்கிஷமே! யாழ்பாடியே!
நீ நீடுழி வாழ்க!!
உனக்குள்ள எதிர்காலம் நீண்டு
சிறந்த கலை இலக்கியத்தால்
நிகழ்காலம் நிரம்பி வாழிய
என் வாழ்த்துக்கள் மன நிறைவாய்!!
அழுது கொண்டே இவ்வுலகுக்கு வந்தோம்
சிரித்துக் கொண்டே சென்றிடசீர் தூக்குவோம்

**அல்ஹாஜ் ஏ.எம்.ஏ அஸீஸ் மௌலவி (காஸிமி)**
யாழ், கிளி மாவட்ட சர்வமத முன்னாள் தலைவர் (ஜே.பி) உலமா சபை

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය / தொலைபேசி / Telephone 021-222 2235
ෆැක්ස් / பக்ஸ் / Fax 021-222 2355

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone 021-222 223 / 021-222 223

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.
E-mail: gajaffna@sltnet.lk

මගේ අංකය / எனது எண் / My No. JF/GA-val/03/2019 | ඔබේ අංකය / உமது எண் / Your No. | දිනය / திகதி / Date 27.06.2019

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளியீடு செய்யப்படும் யாழ்பாடி இதழ் - 3க்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் வதியும் எழுத்தாளர்கள், கலைஞர்களின் ஆக்கங்களை தனதாக்கி வெளிவரும் யாழ்பாடி "இதழ் - 3" "மேம்பட்ட சமூக விழுமியங்களும் வளமான சமூகமும்" என்னும் தொனிப் பொருளில் கலை, ஆன்மீகம், கல்வி, கலாசாரம், போதைப்பொருள் விழிப்புணர்வு, சிறுவர் முதியோர் உரிமையும் பாதுகாப்பும், உளவியல் நெருடல்களை சரிப்படுத்தல், துஷ்பிரயோகங்களை தடுத்தல், பொருளாதார அபிவிருத்தி இலக்குகள். பெண்களின் வளமான வளமான வாழ்வை வழிப்படுத்தல், சிறந்த சமூகத்தை உருவாக்குதல் என்னும் அடிப்படை நோக்கில் அமையும் ஆக்கங்களை தாங்கி வரும் யாழ்பாடி இதழ் - 03 இன்றைய சமதாயத்தின் நிலை தொடர்பாகவும், மனித விழுமியங்களை எடுத்துக் கூறும் அதேநேரம் அழிந்து வரும் கலைகள் உருமாறும் தன்மையினையும் நாம் எமது பண்பாட்டு கலாசார சமூக வாழ்வியலை தொலைத்தமையினால் ஏற்பட்ட நிலையையும் வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு தலைப்புக்களில் ஆக்கங்களாக வெளிவருவது பாராட்டுக்குரியது. யாழ்பாடி யாழ்ப்பாண பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்களின் இருப்புக்கும் அவர்களின் உள்ளக் கிடைக்கையினை அனைவரும் அறிவதற்கும் ஏற்ற கருவியாகவும் அமைகிறது எனலாம்.

இவ் யாழ்பாடி இதழ் - 03 சிறப்புடன் வெளிவர உழைத்த பிரதேச செயலர், கலாசார பேரவையினர் மற்றும் ஆக்கங்களை நல்கிய அனைவரையும் பாராட்டி புதுமெருகெடுக்கும் யாழ்பாடி இதழ் - 03 சிறப்புடன் இசை பரப்ப நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

**திரு. நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை. උතුරු පළාත් සභාව. Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk
e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல / මගේ අංකය / My No. NP/03/09/Cul.Pro/2019 உமது இல / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 2019.07.10

# கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினால் வெளியிடப்படும் "யாழ்பாடி - 03" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, தொல்லியல், புவியியல் மற்றும் மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றை ஆவணப் படுத்தும் விதமாக இம் மலரானது அமைந்துள்ளமை பாராட்டத்தக்க தாகும்.

'மனிதன் ஒரு சமூகவிலங்கு' சமூகம் எனும் சங்கிலியால் இறுக்கமாக கட்டப்பட்டுள்ளான். அச்சமூகத்தின் ஒட்டுமொத்த விடயங்களிலும் மனிதன் உள்ளீர்க்கப்பட்டுள்ளான். எனவே, ஒரு சமூகத்தின் நிலைப்பானது அதன் வாழ்க்கை முறைகளை அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவதில் நிலைகொண்டுள்ளது. நல்ல சமூகமயமாக்கத்தின் மூலமாக சிறந்த மனிதர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எம் அனைவருக்கும் உரியதாகும். எமது எதிர்காலத்தின் சொத்துக்களான பிள்ளைகளை சரியான வழியில் வழிநடத்தி சிறப்புற்று வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பும் எமக்கு உரியதாகும். ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்கள் மற்றும் வரலாறு போன்றன காத்திரமானவை. பிரதேசத்திற்கான சிறப்புக்களும் அதன் விசேட அம்சங்களும் மறைந்திருக்கக் கூடும். அவற்றை வெளிப்படுத்தி அதனைப் பலரும் அறியச்செய்யும் முயற்சியாக இம் மலர் அமையும் என நம்புகின்றேன். இன்றைய காலத்தின் தேவையாக எமது பண்பாடும் எங்களின் தொன்மங்களும் நமது தலைமுறையினருக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு கொண்டது. இப் பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள், வரலாறு, தொல்லியல், புவியியல் நிலமைகள் மற்றும் கலையம்சங்கள் ஆவணப்படுத்தப்படுவது பாராட்டுக்குரிய விடயம்.

இம்மலரானது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. இளங்கோவன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. வடமாகாணம்.

செயலாளர் / ලේකම් / Secretary 021-3202704
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (DSW) 021-3202281 (Plan) 021-3202309 (Acct)
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021-2220794

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை. උතුරු පළාත් සභාව. Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna

Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com


எனது இல / මගේ අංකය / My No. NP/03/09/Cul.Pro/2019 உமது இல / ඔබේ අංකය / Your No. திகதி / දිනය / Date 2019.07.10

# பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் மூன்றாவது தடவையாக வெளியீடு செய்யப்படும் "யாழ்பாடி" கலாசார மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ் மாவட்ட கலைப் பாரம்பரியம் சிறந்து விளங்கும் முக்கியமான நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு விளங்குகின்றது. "மேம்பட்ட சமூக விழுமியங்களும் வளமான சமூகமும்" எனும் தொனிப்பொருளில் கிடைக்கப் பெற்ற ஆக்கங்கள் இம்மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கூத்து, இசை நாடகம், நாடகம் ஆகிய பாரம்பரியக் கலைகளில் சிறந்து விளங்கிய கலைஞர்கள் மிக்க பிரதேசமாக யாழ்ப்பாணம் விளங்குகிறது. இக்கலைகளை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு கலைஞருக்கும் உண்டு.

இந்த வகையில் ஒவ்வொரு பிரதேசத்தினதும் கலை, இலக்கியத்துறை வளர்ச்சிக்காக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற வகையில் பிரதேச மலர் ஆக்கத்திற்காகவும் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் மூலம் நிதி அனுசரணை வழங்கி வருகின்றது. பல்வேறு பயன் தரும் விடயங்களை தாங்கி பரிணமிக்கும் இம்மலரானது வெளிவர உழைத்த பிரதேச செயலாளர், மற்றும் மலர்க்குழு, கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு இம்மலர் சிறப்புறவும் சமூகம் வளம் பெறவும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. அபிராமி பாலமுரளி**
முன்னாள் உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வ.மா.


செயலாளர் / ලේකම් / Secretary 021-3202704
அலுவலகம் / කාර්යාලය / Office 021-3202704 (Admn.) 021-3202568 (DSW) 021-3202281 (Plan) 021-3202309 (Acct)
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021-2220794

பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - යාපනය
Divisional Secretariat - Jaffna

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Divisional Secretary | 021 222 8469 | Asst. Divisional Secretary | 021 221 7386 | Asst. Director of Planning | 021 222 7536 |
| Accountant | 021 222 5425 | Administrative Officer | 021 222 2209 | Grama Niladhari (Administration) | 021 221 7840 |
| Samurdhi Manager (Head Quater) | 021 222 4520 | Addl. District Registrar | 021 221 4103 | General 021 221 7387 | Fax 021 222 1035 |

எனது இல / My No | உமது இல / Your No | திகதி / Date 05.07.2019

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைப்பட்டினமாகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகராகவும் விளங்கும் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவின் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் "யாழ்பாடி - 03" கலாசார மலருக்கு பிரதேச செயலாளர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி" என்பர். அந்த வகையில் இன்றைய காலத்தின் தேவைகருதி "மேம்பட்ட சமூகவிழுமியங்களும் வளமான சமூகமும்" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் எழுத்தாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் ஆக்கங்கள் இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இன்றைய காலவோட்டத்திற்கேற்ப சமூகவிழுமியங்கள் பற்றியும் சமூக மாற்றத்தின் தேவை கருதியும் கட்டுரை, கவிதை, சிறுகதை என கிடைக்கப் பெற்ற ஆக்கங்கள் செய்திகளைக் கூறிநிற்கின்றன. மேலும் காலத்தின் தேவை கருதி எமது பிரதேசத்திலுள்ள ஆவணப்படுத்தப்பட வேண்டிய இடங்கள் கலைச் செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட வெளிக்கொணரப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆக்கங்களை பிரசுரிக்க சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. இந்நூலிலுள்ள ஆக்கங்களைப் படிப்பதனூடாக சமூகம் மாற்றம் பெற்று எதிர்காலத்தில் வளமான சமூகம் உருவாகுதலே இந்நூல் வெளியீட்டின் வெற்றியாகும்.

இம்மலரை அலங்கரித்துள்ள ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்கள், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் மலரை ஆக்க உழைத்த மலர்க் குழுவினருக்கும் இந்நூலாக்கத்திற்கு கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் - 2019ன் கீழ் நிதியினை வழங்கிய வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் மிகக் குறுகிய காலத்தில் அழகுற பதிப்பித்து வழங்கிய குரு அச்சகத்தினருக்கும் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள். "யாழ்பாடி - 3 மலர் சிறப்புற வாழ்த்துவதோடு இம்முயற்சி மேலும் தொடர இறையாசீர் கிடைக்கவும் ஆசித்து நிற்கின்றேன்.

**திரு. எஸ். சுதர்சன்**
பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

116, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். | 116, Old Park Road, Jaffna.
"Efficient public service with zero corruption and bribery"

# யாழ் - பிரதேச கலாசார பேரவை

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## JAFFNA DIVISIONAL CULTURAL COUNCIL

DIVISIONAL SECRETARIART, JAFFNA.

## மலர்க்குழு சார்பாக
## இதழாசிரியரின் எண்ணத்தில் இருந்து.....



யாழ்ப்பாண பிரதேச செயலத்தின் யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடாகிய யாழ்பாடி - 03 கலாசார மலர் வெளியீடு செய்யப்படுவதையிட்டு மலருக்கான மன பதிவுகளை இவ்விடத்தில் பகிர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்பாடி கலாசார மலர் இவ்வருடமும் தொடர்ச்சியாக வெளியீடு செய்யப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இம்மலர் இம்முறை "மேம்பட்ட சமூக விழுமியங்களும் வளமான சமூகமும்"எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாண பிரதேச எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆக்கங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப எமது சமதாயத்தின் இன்றைய நிலைப்பாடுகள் குறித்தும் மேம்பாடடையும் வழிகள், மாற்றங்கள் குறித்தும் செய்திகள் கூறப்பட்டுள்ளன. இந்நூல் இப்பிரதேசத்தின் வரலாற்று ஆவணமாகவும் எமது எதிர்கால சந்ததியினர் மேம்பாடடைவதற்கான கருவியாகவும் அமைவதை நோக்காகக் கொண்டு எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு களம் அமைத்து கொடுத்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இம் மலரிலே பல்பரிமாண நோக்கில் ஆக்கங்கள் மலர்க்குழுவினரால் தொகுக்கப்பட்டு இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இம்மலரிலுள்ள ஆக்கங்களுக்கு படைப் பாளிகளே பொறுப்பாவர்.

இப்பிரதேச மலர் வெளியீட்டிற்கு வழிகாட்டியாய் அமைந்த பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய திரு.எஸ்.சுதர்சன் அவர்கட்கும் ஆசிச்செய்திகளை வழங்கிய மதகுருமார்களுக்கும் வாழ்த்துச் செய்தியை வழங்கிய மாவட்டச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோருக்கும் ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகளுக்கும் ஆக்கங்களை தொகுத்து நெறிப்படுத்த உதவிய மலர்க்குழுவினருக்கும் மலரின் அட்டைப்படத்தினை வடிவமைத்து வழங்கிய கலாபூஷணம் ம. அன்ரன் யோசப் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மலர் வெளியீட்டிற்கு கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2019ன் கீழ் நிதி உதவி வழங்கிய வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் நன்றி தெரிவிப்பதுடன் இம் மலரினை சிறப்பாக குறுகிய காலத்தில் வடிவமைத்து அச்சிட்டு வழங்கிய குரு அச்சகத்தின ருக்கும் மலர் வெளியீட்டிற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய கலாசார பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகள் தெரிவித்து நிற்பதோடு யாழ்பாடி தொடர்ந்தும் பாடிக்கொண்டிருக்க இம் முயற்சி மேலும் தொடர அனைவரினதும் மேலான ஒத்துழைப்புக்களை எதிர்பார்த்து நிற்கின்றேன்.


**திருமதி ம. மேர்சி சுஜந்தினி**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், யாழ்பபாணம்.



**திரு. சாம்பசிவம் சுதர்சன்**

பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண பிரதேச செயலக கிராம அலுவலர் பிரிவுகள்



# மனித விழுமியங்களை வாழ வைப்போம்

Dr.P.ஸ்ரீகந்தநேசன்
கொழும்புத்துறை



மக்கட் பிறப்பு படைப்பின் மணிமுடி "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது..." என்றார் ஔவையார். அத்தகைய அரிதான பிறப்பு முழுமை பெற வேண்டுமாயின் நல் விழுமியங்கள் அவசியமாகின்றன. விழுமியங்கள் என்றால் என்ன என ஆராயுமிடத்து நல்ல பண்பாடு, சீரிய ஒழுகலாறுகள், மனித நேயம், இன்னா பேசாமை, தான தர்மம் செய்தல், தியாக சிந்தனைகள் என வரிசைப்படுத்த முடியும். அதன் மூலம் உயிரினும் மேலான ஒழுக்க வாழ்வின் மூலம் பெறப்பட்ட பண்புகளையும் தலையான பெறுமானங்களையும் விழுமியங்கள் என வரைவிலக்கணப்படுத்த முடியும்.

மானிட விழுமியங்கள் ஆயிரங்காலத்து பயிர்; அன்றுதொட்டு இன்று வரை பல்வேறு கோணங்களில் பிரதிபலித்து நிற்கின்றன. அவை இலக்கியங்கள், சினிமா பாடல்கள், நல்லறிஞர்களின் வாழ்வு, வாக்கு போன்றவற்றில் வெளிப்பட்டு நிற்பதனை நாம் தரிசிக்க முடிகிறது. வாழ்வின் வெற்றியே நாம் கடைப்பிடிக்கும் விழுமியங்களிலேயே தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை". ஒழுக்கம் இல்லாண் கண் உயர்வு இல்லை" என்றெல்லாம் செந்நாதப் போதர் செப்பியமை நம் நீடு வாழ்வை நிர்ணயிக்கவும் விழுமியங்களில் உயர்ந்து விளங்கவுவே ஆகும். அத்தோடு நில்லாது வள்ளுவர் இன்னுமோர் கருத்தையும் கூறியுள்ளார். "பொய்தீர் ஒழுக்க நெறி நின்றால் நீடு வாழ்வார்" என்று. இவற்றின் பொருளை ஆராய்ந்து அணுகுவதன் மூலம் எந்த அளவு மானிட பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளன என அறியமுடிகிறது. மனித விழுமியங்களானவை இன்று மலரும் மணமும் போல ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாது உள்ளது. அவ்வாறு பிரியுமாயின் மனிதன் விலங்கோடு ஒப்பிடப்படுவான்.

பட்டினத்தார் தன் பாடலிலே ".... பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும் நன்றென்றிரு நாடு நீங்காமலே நமக்கிட்டபடி என்றென்றிரு மனமே உனக்கு உபதேசமிதே" என்கிறார். எவ்வளவு அழகான கருத்து இதுவும் மனித விழுமியமே. மண்ணில் நல்ல வண்ணம மானிடர் வாழவும் அவர்களின் துன்பதுயரங்களை மாற்றவும், சந்தேகங்களை நிவர்த்திக்கவும் அறக்கருத்துக்கள் துணை செய்கின்றன. இணையற்ற கவிஞரான பாரதி தன் கவி வரியிலே "சிறியோரை மேம்படச் செய்தால் - பின்பு தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்" இவ்வரிகளின படி நடக்க நிச்சயமாக எம்மால் முடியும். இங்கும் அறமே விதைக்கப்பட்டுள்ளது. மனித வாழ்வு நீர்மேல் குமிழி போலவே நிலையற்றது. ஆனால் ஆன்மாவிற்கு அழிவில்லை. ஆகையால் தர்ம சிந்தனைகளும் ஏதோ ஓர் இடத்தில் எம்முள் மறைந்தே இருக்கும் என்பது தெளிவு. அதை வெளிப்படுத்துவதே சிறந்த மனிதம். இதனை கவிஞர் வைரமுத்து தன் பாடலில் "பலருக்காக

கண்ணீரும் சிலருக்காக செந்நீரும் சிந்தும் மனிதன் எவனோ அவனே மனிதன்..." என எவ்வளவு எழிலாக எடுத்துரைத்துள்ளார்.

விழுமியங்களை ஏழை, பணக்காரன் என்ற பாகுபாட்டில் தான் ஆற்ற வேண்டும் என்பதில்லை. அதற்கு அர்ப்பண சிந்தனை, சமூக நோக்கு, சகிப்புத் தன்மை. சமநோக்கு, நற்பிரஜையாக வாழும் எண்ணம் என்பன இருந்தாலே போதுமானது. இவையே எமக்கு ஏழை, பணக்காரன் எனற பாகுபாட்டை வெளிக்காட்டி நிற்கும். பணமுள்ளவன் பொருளைக் கொண்டு உதவலாம். இல்லாதவன் இல்லாமையை நினைத்து ஏங்காமல் உள்ளத்தால் நல்லதை நினைத்தாலே போதுமானது.

மனிதனை நடமாடும் கோயில் என்பர். மனிதரிடத்தில் அன்பு இல்லாத போது கடவுளிடத்து அன்புடையோன் போல் ஒழுகுவது கேலிக்கூத்து போன்றது என்பர். அன்பு, கருணை நடமாடும் அவனிடமே இருத்தல் வேண்டும். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்கிறது விவிலியம். இவற்றில் பொதிந்துள்ள விழுமியங்கள் மனித மனத்தை ஆட்கொண்டு, நடமாடும் கடவுளாகவே உருவாக்கிவிடும் வல்லமை கொண்டது எனின் அதுமிகையாகாது.

இன்று நம்மிடையே மன்னிக்கும் பண்பு யாரிடமுள்ளது. தீங்கு விளைவிக்கும் ஒருவனை தண்டிக்கவும்,பழிவாங்கவுமே எண்ணங்கள் தோன்றுகின்றன.அவ்வாறு மன்னிக்கும் மனம் இருப்பின் அது மிக அரிதே. யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட போது ஆண்டவரே! இவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். இவர்களை மன்னியுங்கள்! என்று கூறினார். சிறு துன்பம் விளைவிக்கும் எறும்பையே கொல்ல நினைப்பவர்கள் தானே நாம். எவ்வாறு அந்த ஆண்டவரின் குணத்தை பெறமுடியும் என பயனற்ற சிந்தனையை நீக்கி நல்லதை நினைக்க எம்மை தயார்படுத்த வேண்டும். செய்ந்நன்றி, செஞ்சோற்றுக்கடன், ஒழுக்கம், பணிவு போன்ற எண்ணற்ற விழுமியங்கள் சேர்ந்தது தான் வாழ்க்கை. அதை கடைப்பிடிக்கும் மனிதன் உள்ளவரை இவை அனைத்தும் உயிர்பெற்றே இருக்கும். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்றார் கவிஞர் புலமைப்பித்தன். நாம் சேரும் இடமும், வாழும் இடமும் மனித விழுமியங்களை விதைக்கவும் ஏன் அழிக்கவும் முடியும்.

பிறருக்கு உதவுவது என்பது நல்ல சிந்தனை. அதுவே மனித சிந்தனை. அது செயல்படுத்தப்பட்டால் தெய்வீகத்தன்மை அடையும். அத்தகைய தெய்வீக தன்மையை தவறவிடாது நற்பிரஜையாக வாழ்வது கூட விழுமியமே. அன்னை தெரேசாவின் சேவைகள் எண்ணில் அடங்காதவை. அதை எண்ணிப் பார்த்தாலே கல் நெஞ்சம் கரையும். தனக்காக அன்றி பிறருக்காக வாழ்ந்தவர். "துயரப்படும் மக்கள் சமுத்திரத்தோடு ஒப்பிட்டால் அதில் என் சேவை ஒரு துளி மட்டுமே" எனக் கூறியவர் புறக்கணிக்கப்பட்டவர்கள் என யாரும் இருக்கக் கூடாது என பணியாற்றியவர். புத்தராக, காந்தியாக, யேசுவாக, மதர் தெராசாவாக வாழ முடிய்வில்லை ஆயினும் அவர் தம் வாழ்க்கை வரலாற்றை கற்றும் போதனைகளை ஏற்றும் மனிதனாக வாழ முடியுமல்லவா?

அறிவு, அன்பு, ஒழுக்கம் இல்லாத மதங்கள் உலகத்தில் கிடையாது. அறமே வாழ்க்கையின் பூரணத்துவம் என அறிஞர் கூறுவர்.

“ எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே”

“ அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே”

என்கிறார் தாயுமானவர். இக்கூற்றுக்கள் சுயநலத்தை போக்கி பொது நலத்தை வேரூன்ற வழி காட்டுகின்றன. மனத்தில் மாசு இல்லையாயின் மனிதம் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

விஞ்ஞான உலகிலே அதன் வளர்ச்சி பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளது. உலகம் சுருங்கி விட்டது எதையும் இலகுவாக பெற்றுவிட முடிகிறது. இது மகிழ்வை தந்தாலும், உலகம் சுருங்கியதன் விளைவால் மனித மனமும் அல்லவா சுருங்கிவிட்டது. சாலை விபத்துக்களில் துடிப்பவரைக் கூட பார்ப்பதற்கு இன்று மனிதர்கள் மிஞ்சுவதில்லை. உதவி செய்வதற்கு பல்வேறு கோணங்களில் சிந்திக்கின்ற நிலை இன்று மனிதம் கொலை செய்யப்படுகின்றது. “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினோம்” என்றார் வள்ளலார். ஆனால் பயிரைவிட்டு வாடியோர் முகம் பார்க்க கூட மனிதர்கள் இல்லை. “ நீங்கள் அளக்கிற அளவின் படியே உங்களுக்கு அளக்கப்படும் என்கிறது விவிலியம். நீர் மேல் எழுத்து படியே வாழும் காலம். மனித வாழ்வு உயர்வானதும் அரிதானதுமாகும். அத்தகைய வாழ்வின் அருமையை உணர்ந்து வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் விழுமியங்களை பேணுவோம்.



# நாளை நமதாகும் நல்லதையே செய்வோம்

**அபீர்ராஜன் அன்ரனி பீற்றர்**
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்



முன்னைப் பெருமைகளும் மூதறிஞர் கருத்துக்களும்
எம்மை வளர்த்ததினால் நிம்மதியாய் வாழ்ந்து வந்தோம்
பொன்னை உலையிட்டு புதுநகை ஆக்குதல் போல்
மண்ணை வளப்படுத்தி தன்னிறைவு கண்டிருந்தோம்
பின்னர் வந்தநிலை பேரிடராய் மாறியது
வன்முறைகள் புகுந்து வலிகளையும் தந்தது
என்னேயிந்த வாழ்க்கையென ஏங்கின இதயங்கள்
வருத்தங்களும் நோய்களும் வகைவகையாய் வந்தன.

சிற்றாறு ஓடாமல் செந்நெல் விளைந்தன
வெற்றுத் தரையெல்லாம் விவசாயம் செய்தனர்
இயற்கைப் பசளையிலே பயிர்கள் விளைந்தன
இலாபத்துடன் ஆரோக்கிய வாழ்வும் கிடைத்தன
கற்றுவிட்டோம் என்பதினால் கமத்தொழிலை மறந்தோம்
கதிரைகள் தந்தன கைகால் இடுப்புவலி
தொற்றா நோய்களும் பற்றார் இல்லைப்போல்
தோல்விகளும் தொல்லைகளும் தொடராகத் தொடர்கின்றன.

கண்ணின் இருவிழிகள் மண்ணும் மொழியும்
இழந்தால் பெறமுடியாது இதுதான் வரலாறு
பண்பாடு கலாசாரம் படுகுழியில் வீழ்ந்தால்
தன்பாட்டில் அழிந்துவிடும் எவ்வினமும் அறியீரோ?
புண்பட்ட நெஞ்சங்கள் புவியெங்கும் வாழ்ந்தாலும்
புரையோட விடாமல் காப்பது எம்கடனே
பண்பற்ற வாழ்வெதுவும் பலகாலம் நிலைக்காது
துன்பந்தான் துளிர்விட வைக்கும் ஒற்றுமையை.

கல்விதான் எங்களின் அருஞ் சொத்து
கல்லாதார் கருகிவிடும் வெறும் வித்து
எல்லோரும் ஓரினம் ஒன்றாய் விழித்தெழுங்கள்
நில்லுங்கள் சிந்தித்து நன்றாய் முடிவெடுங்கள்

பொல்லாச் சாதிபேதங்கள் நில்லாது பொசுக்கிடுங்கள்
போர்க்களமாய் போனவாழ்வில் புதிய வழி கண்டிடுங்கள்
வில்லில் புறப்பட்ட அம்புகள் போல் வேகமாய்
பரவிவரும் தீமைகள் பறந்தோட விரட்டிடுங்கள்.

மாற்றங்கள் இல்லையேல் மறுமலர்ச்சி இல்லை
மதிநுட்பம் இருந்தால் மாற்றிடலாம் விதியையும்
ஆற்றல்கள் எல்லாமே ஆக்கத்திற்காய் பயன்பட்டால்
ஏக்கங்கள் எல்லாமே வெய்யில் கண்ட பனியாகும்
கற்றறிந்தோர் காலமுணர்ந்து நற்றிட்டம் வகுத்திட்டால்
சூழும் பிரிவினைச் சக்திகள் நாணி மறையும்
நேற்றுவரை எம்வாழ்வு கேள்விக்குறி யானாலும்
தோற்பதில்லை நற்பணிகள் தொடர்ந்திடும் உண்மையிது.

மாற்று வலுவுள்ளோர் போற்றத் தகுந்தவர்கள்
இயலாமையிலும் இயலுமென்ற மனவுறுதி கொண்டவர்கள்
ஆற்றல் நிறைந்தவராய் அச்சமின்றி வாழ்கின்றார்
அவர்களின் நம்பிக்கை இயல்பவர்க்கு சவாலே
ஏற்புடைய செயலை எவர்தான் செய்திடினும்
போற்ற வேண்டும் அதுதான் வெற்றிக்கு வழியாகும்
காற்றுள்ள போதினிலே தூற்றிக்கொள் என்ற மொழி
காத்திருந்தால் கிடைத்திடாது காரியமே வெற்றி தரும்.

கோடான கோடிப் பணம் இருந்தாலும்
கொடுத்துப் பகிர்ந்து வாழ்ந்தால் கேடில்லை
கேடான வழிகளிலே கீழ்த்தரமாய் உழைத்தால்
படாத பாடுபட்டு பறிகொடுத்தோர் எப்படிவாழ்வார்?
நடாத பயிருக்கு நட்டஈடு கேட்பதுபோல்
உழைக்காத உழைப்புக்கு உரிமை கொள்ளலாமா?
மூடாத வாயினால் கேடே வருவதுபோல்
மூடருக்கு உரைத்திடினும் கேடே தேடிவரும்.

முடியாது என்பது முயலாதார் வேதம்
முடித்துக் காட்டுவதே திறமையின் வாதம்
அடியாது பிள்ளையை ஆளாக்கு என்றார்
இடி தாங்கியாக இருக்கின்றார் பெற்றோர்
குடியாலே கேடென்று உணராத இளையோர்
படிதாண்டிப் போதையிலே பாதைமாறிச் செல்கின்றார்

விடியாத இரவாக அவர்வாழ்வு தொடர
விதியென்று விட்டால் கதியென்ன ஆகும்.

இளையோரே இம்மண்ணின் எதிர்காலத் தூண்கள்
எழுந்து வாருங்கள் நம்பிக்கைத் துடுப்பாக
களையுங்கள் பீடித்த சமுதாய இருள்களை
காற்றலையாய் கனிவளமாய் மாற்றிடுங்கள் உம்மை
நாளைய விடியல் உம்கையில் தானுள்ளது
வாளை விட்டெறிந்து வன்மச் செயல்மறந்து
தோளை நிமிர்த்தியே தொடருங்கள் பணியை
காளைகளே ஓரணியாய் கரங்கொடுங்கள் நமதாகும்.

நுகர்வுக் கலாசாரம் நுண்கடன்கள் பெருகுவதால்
அறியாது வாழ்ந்து அவலங்கள் தொடர்கின்றன
அயர்வின்றி உழைத்தால் அடைத்திட முடியும்
அயர்ந்து படுத்திருந்தால் வில்லங்கம் விளையும்
துயரங்கள் தொல்லைகள் வாழ்வினிலே நிறையும்
தூக்கு மேடைகளும் துரத்தியே திரியும்
யார்க்கும் குடியல்லோம் நம்கையே நமக்குதவி
ஊக்கமே ஆக்கம்தரும் உழைப்போம் முன்னேறுவோம்.

வீரம் விளைந்த நிலம் தமிழர் மண்
விளை பொருட்கள் நிறைந்தயிடம் தமிழர்மண்
காரம் செறிந்தவர் கல்வியால் உயர்ந்தவர்
பேரும் புகழுடனும் வாழ்ந்தவர்கள் தமிழர்
வேரும் விழுதுகளும் வெளிநாடு புலம்பெயர்ந்து
வீடும் நிலங்களும் காடாய்க் கிடக்கின்றன
போரும் வன்முறையும் புரட்டி எடுத்திடினும்
ஊரும் உறவுகளும் உயிர்த்திடவே துடிக்கின்றன.

மானம் மரபுண்மை மண்பற்றுக் கொண்டவர்
மரணம் வந்திடினும் மண்ணிலே வாழ்கின்றார்
ஈன உணர்வினர் இனத்துக்காய் வாழாமல்
போனயிடம் புரியாது புகழிலே புரள்கிறார்
ஞானம் இல்லாரையும் எம்மக்கள் ஏற்றிடார்
தான தருமங்கள் எவரையும் கைவிடாது
வீணே விலைமதியாக் காலத்தை தொலைத்திடாது
நாளை நமதாகும் நல்லதையே செய்வோம்.

# செயலிழக்கும் பாரம்பாரிய கிடுகுத் தொழிலும் பெண்களின் வாழ்வாதார பாதிப்பும்



செல்வி. தர்மினி பத்மநாதன்
M.A / M.Phil
9, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

இலங்கையில் குறிப்பாக வடக்கில் பாரம்பரிய மூலதனங்களாக தென்னை மற்றும் பனை வளம் பொருளாதார வளம் மிக்கது. அதன் ஆரம்ப வளர்ச்சியில் மட்டும் தான் கவனம் செலுத்த வேண்டும். பின்பு அது தன்னுடைய பராயத்தில் தரும் வளங்கள் பூரிப்பு மிக்கவை. தென்னை மற்றும் பனை வளங்கள் பலரின் வாழ்வாதாரமாகவும் உள்ளது. அவற்றுள் ஒன்று கிடுகு பின்னுதல் தொழில். கிடுகுத் தொழில் யாழ் மாவட்டத்தில் மணியந்தோட்டம், புங்குடுதீவு, தென்மராட்சி மற்றும் வன்னிப் பெரும் நிலப்பரப்பு ஆகிய தென்னை வளம் மிக்க பிரதேசத்தில் மிக முக்கிய தொழிலாக இருந்து வந்துள்ளது. இத் தொழில் கடந்த 2009 ஆம் ஆண்டின் பின் பாரிய பின்னடைவு நிலைக்குச் சென்றுள்ளது. தென்மராட்சி மற்றும் வன்னி நிலப்பரப்பில் போர்ச் சூழலில் பதுங்கு குழிகளினதும், காப்பரண்களின் தேவைகளுக்காகவும் வெட்டியும் தறித்தவை யும் போக மீதமான தென்னைகள் நச்சுக் குண்டுத்தாக்குதல்களினால் அழிக்கப்பட்டன. இன அழிப்புடன் பாரம்பரிய வளங்களும் அளிக்கப்பட்டமை பல குடும்பங்களை கைநீட்ட வைக்கும் அளவில் வாழ்வாதாரத்தினை பாதிப்புக்குள்ளாக்கி உள்ளது. ஓலையால் வேயப்பட்ட வீட்டுக் கூரைகள் இப்போது தகரங்களும், ஓடுகளும், சீற்றுக்களும் என்று மாபெரும் பயணத்தை தொடக்கி உள்ளன. ஆங்காங்கே சில இடங்களில் தன்னை அடையாளப்படுத்தும் வகையில் கிடுகுகளை கொண்ட கொட்டில்கள், வேலிகள் கண்களில் தெறிக்கின்றன.



இந்நிலையில், 1500 சோடி கிடுகின் தேவையினை கருதில் கொண்டு களப்பயணம் ஒன்றை கடந்த வாரம் மேற்கொண்டேன். கிடுகை எப்படிப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பலரிடம் விசாரித்தோம். அதிகாலை 5 மணிக்கு புத்தூர்ச் சந்தியில் போய் நின்றால் நிறைய லாண்ட்மாஸ்ரரில் கிடுகு வரும். நீங்கள் நேரத்தோட போனால் மறிக்கலாம் என ஒரு பதில் கிடைத்தது. நானும் லக்ஷி டீச்சரும் அதிகாலை 5 மணிக்கு களத்தில் இறங்குவதாக முடிவு செய்தோம். அவாவும் பூநகரியில் இருப்பதால் 5 மணியைத் தவறவிடாது யாழ்ப்பாணத்தில் நண்பியின் வீட்டில் தங்கிக் கொண்டார். சரியாக 5 மணிக்கு முன்பு நாங்கள் பருத்தித்துறை வீதி வழியாக புத்தூர்ச் சந்தியை அடைந்தோம். விடியத் தொடங்கவில்லை. குளிர்ந்த காற்றின் சிலிர்ப்புடன் சேர்ந்த மோட்டார் சைக்கிள் பயணம் அவ்வளவு ரம்மியமாக உடற்சாகம் தந்தது. . சிந்தனை முழுக்க நேரத்தை தவறிவிடக்கூடாது என்பதே. இன்னும் முழுமையாக விடியவில்லை. 5.30 ஆகிவிட்டது. சந்தியில் உள்ள தேநீர்க் கடையில் தேநீர் குடிக்க வருவார்கள் என்றும், அந்த வழியால் பருத்தித்துறை செல்வார்கள் என்பதும் சந்தியில் உள்ளவர்களிடம் விசாரித்தபோது

தெரிந்துகொள்ள முடிந்தது. அந்த வகையில் காத்திருந்தோம். விடியத்தொடக்கி விட்டது யாழ் நகருக்கு பஸ்க்கு செல்ல மக்கள் வீதிக்கு வரத்தொடக்கி விட்டனர். மீண்டும் மீண்டும் வெவ்வேறு நபர்களிடம் கிடுகு விற்பனையாளர் வருகை பற்றி விசாரிக்கையில் எல்லோரும் ஒரே மாதிரியான பதிலை தான் தந்தனர் . ஆனால் 6.30 மணி ஆகிவிட்டது யாரும் வரவில்லை. மட்டுவில் வீதியாகத் தானே வருவார்கள். வீதி வழியாக நகருவோம். வந்தால் மறிப்போம் என்ற எண்ணங்களுடன் பயணிக்க தொடங்கினோம். வழியில் பெரிய இந்து ஆலயம் ஒன்று காணப்பட்டது. பன்றித்தலைச்சி அம்மன் கோவிலாக இருக்குமோ ? என்ற நினைப்பும் வர இருவரும் இறங்கி கால்களைக் கழுவி கோவிலுக்குள் சென்றோம். அந்த விடியற்காலையில் கோயிலில் யாருமில்லை. மிக அமைதியாக இருந்தது. ஆனால் உட்கதவு எங்களுக்காக திறந்து இருந்தது. கோவிலின் பெயரைப் பார்த்தோம் பெயர் இல்லை. ஒரு மூலையில் வயதானவர் ஒருவர் பத்திரிகை வாசிப்பில் இருந்தார். அவரிடம் சென்று கேட்டோம் கோவிலின் பெயரை நாங்கள் நினைத்த கோவில் அதுவாகவே இருந்தது. நீண்ட வருடங்கள் இக்கோவிலைப் பார்க்க வேண்டும் என்று ஆவல். ஒரு போதும் போனதில்லை. இப்படித் தான் அந்த சந்தர்ப்பம் அமைந்தது.

அன்று லக்ஷி டீச்சரின் பிறந்த தினமும் என்பதால் அது இரட்டிப்பு மகிழ்ச்சி. அந்த முதியவரிடம் நாம் ஏன் வந்தோம் என்பதின் ஆரம்பமாக கிடுகு தேடலை கூறினோம். மட்டுவில் பகுதியில் கிடுகு கிடைக்குமா? என்றும், யாராவது இத்தொழில் புரிகின்றரா? என்றும் வினாவினோம். குறித்த ஒருவரின் பெயரைக் கூறிய முதியவர், அவர் தான் யாழ்ப்பாணத்துக்கு கிடுகு கொண்டு போறவர். நான் சொன்ன பெயரை விசாரிச்சு கேளுங்கள், அவரே வாகனத்திலும் கொண்டு வந்து தருவார் என கூறி விபரம் சொன்னதும் சொன்ன வழி தேடி விசாரித்துப் போனோம். தேடிச் சென்ற ஒழுங்கைகள் அரைவாசியும் கிடுகு வேலியிலிருந்து தகர வேலிக்கு மாறிக் கொண்டிருப்பத்தையும் அங்கு காண முடிந்தது. சென்ற இடத்தில் வீட்டை அடையாளம் கண்டோம். மனைவி மகன் நின்றனர். குறித்த நபர் வீட்டில் இல்லை. அவர் கிடுகு அலுவலாக கொடிகாமம் போயிட்டார் என்று கூறியதும் மகனின் உதவியுடன் தொலைபேசியில் உரையாடினோம். ஒரு சோடி கிடுகு 35 ரூபா. தொகையாக என்றால் 30 க்கு கேட்டு வாங்கித் தாறன் ஓம் என்றால் சொல்லுங்கள் என்றவர் கிடுகு இறக்க வேண்டிய முகவரியையும் பெற்றுக் கொண்டார். .

அவர்களிடம் இருந்து விடைபெற்ற நாம் ஏன் நாம் கிடுகு பின்னும் இடத்தை தேடிப் போகக்கூடாது? நாங்களே தேடிப் பிடித்தால் பலருக்கு அறியக் கொடுக்கலாம். எமது தேவைக்கு உரிய அளவினை தேவையின் போது பெற்றுக் கொள்ள முடியும் என்ற சிந்தனைகளுடன் மட்டுவிலில் இருந்து கிளாலி வரை அதாவது தென்னை வளங்கள் நிறைந்த இடங்களுக்கு பயணித்து, இன்று ஒரு முடிவுக்கு வருவோம் என்று தேடலை நீட்டிக் கொண்டோம். அதிகாலை தொடங்கிய பயணம். தேநீர் கூட குடிக்கவில்லை. 10 மணியை தொட்டதும் கொடிகாமம் சந்தியில் புது ஹோட்டலில் தேநீருடன் சிற்றுண்டியும் சாப்பிட்டுவிட்டு முதல் இலக்காக கொடிகாமம் சந்தியிலிருந்து ஊர் மனைக்குள் இறங்கினோம். வீதியில் சென்றோம். சர்வ சாதாரணமாக வீதியில் சென்றவரை மறித்து கிடுகு பின்னும் இடம் இங்கு உண்டா? எங்கு கிடுகு எடுக்கலாம் என்று கேட்டோம்

பூமா (60 - 65 வயது) என்று ஒருவரை கூறி இருப்பிடத்தை கூறினார். குறித்த வீடு சென்றோம். குறுக்கு மணலால் நிரம்பிய அந்த காணி மிக அழகாக கூட்டப்பட்டு இருந்தது.

காணியின் நடுவில் அரைவாசி ஓலையும் அரைவாசி சீற்றும் போட்ட வீடு காட்சியளித்தது. காணியில் அடுக்கி வைக்கப்பட பின்னாத ஓலைகளும் மிக்க குறைந்த அளவில் பின்னிய ஓலைகளும் அடிக்கி வைக்கப்பட்டு இருந்தன. அதன் அருகில் மலை போன்று குவித்து வைக்கோல் பாதுகாப்பிக்கப்பட்டு இருந்தது. சிறிய கூட்டில் பொம்மெரியன் நாய்க் குட்டி எங்கள் வரவை தெரிவித்தது. மிக கந்தலான ஆடையுடன் இருந்து வறண்ட தோற்றத்தில் வாய் நிறைந்த வெற்றிலையுடன் உற்சாகமாய் ஒரு அம்மா வெளியில் வந்தார். எம்மை அறிமுகம் செய்தோம். எம் தேவையை கூறினோம். கிடுகு தேடி இரண்டு பெண்கள் சென்றமையினை அவரால் நம்ப முடியவில்லை. அதிலும் குறிப்பாக ஆயிரத்து ஐந்நூறு (1500) சோடி கிடுகு உடனடியாக தேவை என்பதில் கொஞ்சமும் அவரிடம் நம்பிக்கை இருக்கவில்லை. இருந்தும் இப்ப பிள்ளை கிடுகு எடுக்கிறது கஷ்டம். இவ்வளவு கிடுகு ஒரு கிழமையில் தருவது என்னால முடியாது, விடிய 5 மணிக்கு எழும்பி மாடு கட்டி, வளவு கூட்டி, மடந்தை வெட்டி, மடந்தை நனைச்சு சமையல், சந்தை எண்டு போயிட்டு வந்து, திரும்ப மாட்டுக்கு சாப்பாடு வைத்து நான் நிமிர எனக்கு நேரமே இருக்காது. நான் எனக்கு எப்ப நேரம் கிடைக்குமே அந்த நேரம் தான் ஓலை பின்னுவன். இனி நீங்கள் இண்டைக்கு புதுசு, எங்களுக்கு வாடிக்கையான ஆக்கள் வருவினை . அவங்கள் ஓடர் தந்திட்டு போயிருக்கினம், கிழமைக்கு கிழமை வருவார்கள் உங்களிட்ட தந்திட்டு அவர்களுக்கு நான் ஒன்றும் சொல்ல ஏலாது. ஒரு சோடி 18 ரூபாய்க்கு தான் குடுக்கிறனான், என்னுடைய கணவரும் உழைக்க கூடிய நிலையில் இல்லை. நான் தான் உழைக்க வேணும். நான் பிள்ளைகளிட்ட கை நீட்டி வாங்கிற அளவிலா இல்லை. நான் இருக்கும் வரை நான் தான் உழைச்சு வாழ வேணும் என்ற விருப்பில தான் நான் உழைக்கிறன். ஓலை பின்னுறது அவ்வளவு சுலபம் இல்லை பிள்ளை, ஒவ்வொரு நாளும் இடுப்பு முள்ளந்தண்டு எல்லாம் வலிக்கும். படுத்தால் விடிய எழும்ப ஏலாமல் இருக்கும். அப்பிடித்தான் அந்த தொழில். காலுக்கும் முள்ளந்தண்டுக்கும் தான் வேலை. நின்று எல்லாம் செய்ய முடியாது. இப்போ ஓலை கிடைக்கிறதும் கஷ்டம். நாங்கள் ஓலை வெளியில வாங்கி தான் பின்னுவம். ஒரு மட்டை 5 ரூபாய். அதை வாங்கி இரண்டாய் கிழிச்சு தண்ணியில் ஊறவிட்டுதான் பின்ன வேணும் . ஒரு மட்டையை கிழிக்க ஒரு ருபாய். இதிலையே எங்களுக்கு 6 ரூபாய் போயிடும். கடல் பிரதேசம் இல்லாததால் கிணத்து தண்ணியில தான் ஊறப் போடுவன் எனக் கூறியவர் உறுதியாக எமக்கு கிடுகு தருவதை மறுத்து விட்டார்.

அவர் மறுத்த நிலையில் அவரின் தொழில் அனுபவத்தை பெற்றுக் கொண்ட நாம் அவரது வழிகாட்டலில் அண்மையில் உள்ள நாகேஸ்வரி அம்மாவைத் தேடிப் போனோம். தேடும் பாதைகளில் எல்லாம் சில வீடுகளில் சிறுகச் சிறுக சேமித்த கிடுகுகள் அடுக்கப்பட்டு இருந்தன. அவை முன்பே ஓடர் கொடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. தேங்காய் குவியல்களுடனான காணிகள் பொச்சு மட்டைகள் என்று அந்த கிராமத்தை தென்னை வளங்கள் அழகுபடுத்தி இருந்தன. வீடு வீடாகச் சென்று கிடுகு விசாரித்தோம் . ஒவ்வொரு வீடுகளிலும் பெண்கள் கிடுகு பின்னல் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தனர். அவர்களின் இயல்புகள் அவர்களின் பொருளாதார ஏக்கத்தை காட்டிக் கொண்டு இருந்தது. விசாரிப்புக்களுடன் நாகேஸ்வரி அம்மா வீடு போனோம். குறுக்கு மண்பாதை மோட்டார் சைக்கிள் கொண்டு செல்ல முடியவில்லை. மர நிழல் ஒன்றில் விட்டுவிட்டு போனோம். பரந்த தோட்டம். அதில் உளுந்து, சணல் விதைக்கப்பட்டிருந்தது. தாமரைகள் ஒரு பக்கமும் அல்லி ஒருபக்கமுமாக சிறிய குளம் அந்த வயல் நடுவே இயற்கையுடனான கொளுத்தும் வெய்யலில் அனுபவிக்க முடிந்தது. அந்த ரசனையுடன் நாகேஷ் வயது 55 - 60 அம்மாவிடம் எங்கள் தேவையை உணர்த்தினோம். எமது

தேவைக்கான இடத்தினை புகைப்படமாக காட்டினோம். எமது தேவைக்கான உத்தரவாத நம்பிக்கையை கொடுப்பதற்கு நிறையவே கலந்துரையாடினோம். இரு பகுதியினரிடத்தேயும் புரிதல் நிலையை கொடுத்தோம். அந்த நம்பிக்கையின் பிரகாரம் கிராமத்தில் உள்ள ஏனைய பெண்களிடம் சொல்லி குறித்த தொகையை பகுதி பகுதியாக சேர்த்து தருவதாக கூறினார். எல்லோரும் நாள் கூலியில் உழைப்பவர்கள். அன்றாடம் வரும் பணம் தான் அவர்களுக்கு உணவுக்கானது. யார் வந்து கேட்டாலும் கொடுத்து விடுவார்கள், அவர்களிடம் சேமித்து வைக்கும் அளவுக்கு இல்லை. நீங்கள் முற்பணம் தந்து விட்டு போங்கள். நான் சேகரிச்சு வாங்கி வைக்கிறன். இப்ப பின்னுற தொழில் அருகி வருகிறது. ஓலை இல்லை. தென்னை இல்லை. தென்னை எல்லாம் யுத்தத்தில் அழிக்கப்பட்டுப்போச்சு. பலர் வெளிநாடு என்று போனதும் வீடுகள் சீமெந்து ஆகின்றது. ஓலைகள் ஓடும் சீற்றும் தான். கிடுகு குறைஞ்சு வருகுது. கிடுகு வேலிகளே இப்ப மதில்களாகி போகிறது. இனிவரும் காலம் பிள்ளைகள் கிடுகு பின்னுற அளவுக்கு இல்லை. அவைக்கு பின்னவும் தெரியாது, நான் கலியாணம் கட்டி வந்த இடம் தான் இது. ஆனால் என்னை வேலை செய்ய சொல்லி அவர் சொல்ல இல்லை. நான் தான் சும்மா இருக்கிற நேரங்களில் செய்து பழகி செய்தேன். அது எனக்கு கை உதவியாய் இருக்கு. எனக்கும் ஏலும் வரை நேரம் இருக்கும் போது தான் செய்வன். உங்களுக்கு தேவையான அளவு எடுத்து தாறேன், என்று முழுப்பொறுப்பையும் எடுத்துக் கொண்டார். இப்ப ஓலை எடுப்பது கஷ்டம். பிரச்சனை காலத்தில எல்லா தென்னை வளங்களும் அழிஞ்சிட்டு, இருக்கிற தென்னைகளும் சத்துக் கேட்டுப் போச்சு. தை தொடக்கம் ஆடி வரை ஓலை கிடைக்கிறது குறைவு. ஆடிக்குப் பிறகு நிறைய ஓலை கிடைக்கும். ஆடிக்காத்துக்கு ஓலை தானாகவே விழும். நாங்களும் ஓலை காசு கொடுத்து வாங்கி ஊற வைச்சு தான் பின்னிக்குடுக்கிறம். 20 ரூபாய்க்கு குறையாது என்பதில் அவரும் தனது நேர்மையினை வெளிப்படுத்தி இருந்தார். அன்பான வரவேற்பு புரிதலுடனான பகிர்வு, நேர்மையான பேச்சு மட்டுமன்று அவருடைய ஆளுமையும் ஆளுமைத் தோற்றமும் ஒரு உழைப்பாளிக்கான கெட்டித்தனத்தைக் காட்டியது. நாம் தாமதிக்க யோசித்தாலும் எம்மை தாமதிக்க விடாது குறித்த தவணைக்கு நினைவுபடுத்தி தனது பொறுப்பை எம்மிடம் ஒப்படைப்பதிலும் ஆர்வமாகச் செயற்பட்டதுடன் அவரது கணவர் மகள், பேரனின், அவரது என்று அந்த குடும்பமே எம்முடைய தேவையிலும் எமது நலனிலும் அக்கறை கொணட விதம் மதிப்பிற்குரியது.

இது தவிர எம் தேடல்களின் விளைவாக பல வீடுகளை காணிகளை நாம் அடையாளம் கண்டோம். அந்த வீடுகளின் காணிகளில் சிதைந்தும் சிதையாமல் தொகை தொகையாக ஓலைகள் அடுக்கப்பட்டும் அடுக்கப்படாமலும் கிடந்தன. ஓலை பின்னுவதற்கு ஆட்கள் இல்லை. வாகனக் கூலி கொடுத்து ஏற்றும் அளவுக்கு வசதியும் இல்லை. எங்களால இப்ப இதோட மினக்கெட நேரமும் இல்லை என்றவாறு தனது பலசரக்கு விற்பனை நிலையம் சென்ற யுவதியிடம் இருந்து ஆர்வத்துடன் கருத்துப் பகிர விருப்பு இருக்கவில்லை என்பதனூடாக எதிர்காலத்தில் கிடுகுத் தொழில் மீதான கேள்வியைத் தந்தது. அத்துடன் கச்சாய் போன்ற இடங்களில் கூலிக்கு சென்று கிடுகு பின்னும் சிறுதொழில் கூடங்களை சில இளைஞர்கள் நடாத்தி வருகின்றனர். அவர்களின் தலைமையில் பெண்கள் நாட் சம்பளத்திற்கு சென்று வருகின்றனர். அவர்களின் கிடுகு பெட்டிக் கிடுகு என்று சொல்லப்படுகிறது, அதாவது உடைந்த ஓலையினை ஒன்றுடன் ஒன்று சேர்த்து, லாண்ட்மாஸ்டர் வாகனப் பெட்டியின் அளவுக்கு அது பின்னப்படுகின்றது.

இத்தகைய கிடுகின் பாவனைக் காலம் குறைந்தது என்றும் அறிய முடிந்த அதேவேளை குறித்த கிடுகின் விலை, ஏற்றுக் கூலி வாகனத்தின் விலை, பின்னும் பெண்களுக்கான ஒரு நாள் சம்பளம் போன்ற விடயங்களை அவர்களிடம் இருந்து நேர்மையாக அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டினார்கள். மேலும் கலா என்பவரிடம் நாம் ஓடர் கொடுத்த போது அவர் எம்மிடம் முற்பணம் வாங்கவில்லை. ஆனால் எமக்கு நம்பிக்கை அளிப்பதாக நடந்து கொண்ட அதேநேரம் எம்மை சாட்டி அவர்களது ஓடர்காரர் எமக்கு சேகரித்த கிடுகுகளை பெற்றுக் கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு இந்த கலைப் பயணத்தின் சாராம்சமாக பார்ப்போமாயின் எல்லாமே ஆண்களின் வேலை என நினைத்துக்கொள்ளும் சமூகத்தில் இரண்டு பெண்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிடுகினைக் கொள்வனவு செய்ய யாழ் நகரில் இருந்து வந்துள்ளனர் என்பது அவர்களால் நம்பமுடியவில்லை. யாழ்ப்பாணத்தில் நகர்ப்புறத்தில் கிடுகின் தேவை குறித்த ஆவல், அவர்களிடம் இருந்தது.

போர்க்காலத்துடன் தென்னை வளம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதும், கிடுகு விற்பனை செய்யும் ஏஜென்சிகள் பெண்களின் உழைப்புக்களை ஏமாற்றுவதும் சுரண்டுகின்ற மையும் அவர்களுக்கு தெரியாமலே இடம்பெற்று வருகின்றன. ஓலையில் நம்பிய வாழ்வாதாரம் இன்றி கூலித் தொழில்களைத் தேடும் இப்பெண்கள் எதிர்காலத்தில் பாரம்பரிய தொழிலை கைவிடும் நிலை ஏற்பட்டு வருகின்றது. வீடுகளில் இருந்து குடும்பத்தை கவனித்தபடி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிலையிலிருந்து அவர்கள் இப்போது போதிய வளங்கள் அதற் குரிய பொருளாதாரம் இன்றியும் திண்டாடும் நிலையிலும் உள்ளனர். இன்று நவீன வாழ்க்கை முறை கிடுகு பின்னல் சுயதொழிலினை அழித்து எம் பண்பாட்டு அடையாளங்களை வேரறுக்கத் தொடங்கியுள்ளன எனலாம்.



# ஆதரவு

**சிவபாலன் அஜெந்தன்**
முகாமைத்துவ உதவியாளர்
பிரதேச செயலகம்
யாழ்ப்பாணம்



அழைப்பொலி செவிவழி மூளைக்குள் நுழைந்து தூக்கத்தில் இருந்த ஆரூரனை தட்டி எழுப்பியது. கனவா நனவா என்ற குழப்பம் தீராமலே அலைபேசியை எடுத்தான். மறுமுனையில் இருந்து கிடைத்த செய்தியின் அதிர்வில் சில நொடிகளிலே முழு விழிப்புணர்வையும் அடைந்தான். இருந்தும் திரும்பவும் கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டு அவசர அவசரமாக புறப்பட்டு மோட்டார் பைக்கை எடுத்துக்கொண்டு அன்னை இல்லம் நோக்கி விரைந்தான்.

போகும் வழியெல்லாம் நினைவுகள் அவனை பாடாய்படுத்தின. அவனால் அவன் மனதை அமைதிப்படுத்த முடியவில்லை. கற்பனைகள் தாறுமாறாக ஓடியது. பல குழப்பங்கள் அவன் மனதை அல்லல்படுத்தி அலைக்களித்தது. பின்னோக்கி விரையும் மரங்களோடு அவனது நினைவுகளும் பின்நோக்கி நகர்ந்தது.

முனிவர்களின் தவக்காலம் போல் அது பட்டப்படிப்பு முடித்து வேலைக்காக காத்திருந்த காலம். மனச்சுமைகளோடும் தங்கி வாழ்கின்ற கனத்தோடும் நேரம் போகாமல் கண்டதையும் செய்து பொழுதுபோக்கிய காலம். அன்று காலையும் வழமையான சோம்பலான விடியலாகவே ஆரூரனுக்கு விடிந்தது. எழுந்ததும் செய்வதற்கு ஏதுமில்லை என்ற எண்ணமே அவனை கட்டிலோடு கட்டி வைத்தது. அரைத்தூக்கத்தில் கிடந்தவனின் மனதை நேற்று பின்னேரம் சிவா அன்னை இல்லத்திற்கு போக வேண்டும் என்று சொன்னது நினைவு வரவே சோம்பலை புறந்தள்ளி விட்டு எழுந்து புறப்பட்டு சென்றான்.

அன்னை இல்லம் அழகான அமைதியான சூழலில் அமைந்திருந்தது. அதை பார்த்ததும் இயற்கை விரும்பியான ஆரூரன் உள்ளத்தில் உற்சாகத்தை அள்ளிக் கொடுத்தது. “மச்சான் சிவா, வாழ்ந்த இப்படியான இடத்தில வாழனும்டா, என்ன வாழ்க்கையடா” அவன் சொன்னதை காதில் வாங்காது அவனது கையை பிடித்து இழுத்துக்கொண்டு அன்னை இல்ல பிரதான மண்டபத்திற்கு சென்றான் சிவா.

அங்கு இவர்களை போலவே கழக உறுப்பினர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் மேசையிடப்பட்டு உணவுப்பொதிகள் அடுக்கப்பட்டு இருந்தது. உறுப்பினர் ஒருவர் எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் தமது புகைப்படக் கருவிக்குள் பதிவெடுத்துக் கொண்டிருந்தார். அது போதாதென்று ஆழுக்காள் அலைபேசியை எடுத்து தமது இஸ்டத்திற்கு வெழுத்து வாங்கிக்கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்டதும் கழகத் தலைவர் “என்ன சிவா நீங்க பொறுப்பில்லாம இப்ப வாறீங்க நேரமாச்சுதெல்லோ” கடிந்து கொண்டார். அசட்டு

சிரிப்போடு அவரை சாமாளித்துக் கொண்டு தமது உறுப்பினர்களோடு கலந்து கொண்டு முதியவர்களை அழைத்து வந்து வரிசையில் இருத்தும் பணியில் ஈடுபட்டான்.

அன்றுதான் முதல் முதலாக அங்கு வந்த ஆரூரனுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்சியை கொடுத்தது. இளைஞர்கள் முதியவர்களை அன்போடு அழைத்து வந்து இருக்கையில் இருத்துவதும், அவர்களை பார்த்து அந்த வயதானவர்கள் முகத்தில் மலரும் மகிழ்ச்சியும், பார்க்கும் போதே பரவசத்தை கொடுத்தது. நிகழ்வுகள் வழமைபோல சம்பிரதாயங்கள் நடந்தேறி வாழ்த்துக்கள், கஷ்டங்கள், பெருமைகள், நன்றிகள் பேசப்பட்டு வந்திருந்த முதியவர்களோடும் உணவுப்பொதிகளோடும் இணைந்து புகைப்படம் எடுக்கப்பட்ட பின் கடமை முடிந்த திருப்தியோடு கலைந்து சென்றனர்.

சிவாவின் அழைப்பை ஏற்று ஆரூரனும் அங்கிருந்த முதியவர்களிற்கு உணவுப்பொதிகளை கொடுக்க ஆரம்பித்தான். அப்போது அவன் கொடுத்த உணவுப்பொதியை இரண்டு கைகளாலும் வாங்கி அவனைப்பார்த்து “நன்றி தம்பி றொம்ப நன்றியப்பா நல்ல சுவையான சாப்பாடு தந்திருக்காயப்பா நீ நல்லா இருக்கனும்பா நன்றிப்பா” என்று பாட்டி ஒருத்தி நிற்காத நன்றிப்பெருக்கோடு அவனுக்கு திரும்பத் திரும்ப நன்றி கூறிக்கொண்டிருந்தாள். அது ஆரூரனின் மனதில் சங்கடத்தை ஏற்படுத்தியது. பாட்டிக்கு நல்ல பசிபோல இங்க இவங்கள் ஒழுங்கான சாப்பாடு போடமாட்டாங்கள். என்று எண்ணிக்கொண்டு நகர்ந்தான். எல்லோருக்கும் கொடுத்து முடிந்ததும் அந்த பாட்டியை தேடிச் சென்றான். பாட்டி யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் சாப்பாட்டு பார்சல் பிரிக்கப்படாமலே இருந்தது.

இதை பார்த்ததும் பசியோட இருந்த பாட்டி பார்சலை கூட பிரிக்காம இருக்காவே! என்ற ஆச்சரியத்தோடு “என்ன பாட்டி சாப்பிடலையா? இங்க சாப்பாடெல்லாம் ஒழுங்கா தாறாங்களா?, வசதியெல்லாம் எப்படி?, நல்லா கவனிச்சுக்கிறாங்களா?” அவசர அவசரமாய் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான். அவனைப் பார்த்து சிரித்த பாட்டி “வாப்பா, இப்படி இருப்பா” என்று தான் இருந்த வாங்கில் இடம் விட்டுக் கொடுத்தாள். நகர்ந்து செல்ல முடியாது தயக்கத்தோடு வாங்கின் நுனியில் உட்கார்ந்தான் ஆரூரன்.

மீண்டும் ஒருமுறை நன்றிப் பாவை தொடக்கத்தில் இருந்து பாடி முடித்த பாட்டி ஆறுதலாய் அவன் கேள்விகளுக்கு பதிலளிக்க தொடங்கினாள். “அதெல்லாம் ஒருகுறையும் இல்லப்பா இங்க நல்ல சாப்பாடு போடுறாங்கப்பா, பொழுதுபோக்க ரீவி இருக்கு, புத்தகம் இருக்கு, கிழமைக்கு ஒருக்கா டாக்ரர் வந்து சோதிச்சுட்டு மருந்தும் தந்திட்டு போவாரப்பா நல்லாதான்பா இருக்கன்” என்றாள். ஏதோ ஒரு குறையோடு தான் நிறைவாய் இருப்பதாய் சொல்வது போல இருந்தது அவனுக்கு. அப்போது “ஆரூரன் வாடா இனி சிறுவர் இல்லம் போகனும் நேரமாகுது வாடா” என்று சிவா அழைக்க அவனும் பாட்டியிடம் விடைபெற்றான். அப்போது பாட்டியின் கண்கள் இன்னும் கொஞ்சம் என்கூட இருக்க கூடாதா என கெஞ்சுவது போலிருந்தது அவனுக்கு. அவனுள் ஏதோ ஒரு துக்கம் பரவியது. அவன் உடல் எடை கூடியது போல் உணர்ந்தான். இருந்தும் மறுபடி வருவதாய் பாட்டிக்கு உறுதியளித்து விடைபெற்றான். அப்போது தான் புரிந்தது அங்கிருப்பவர்களிற்கு வயிற்றில் பசியில்லை மனதின் தனிமைப் பசிபோக்க ஆதரவுக்காய் காத்திருக்கிறார்கள் என்பது.

மாலை கழகத்தின் செயற்றிட்டங்கள் நிறைவேற்றிய திருப்தியுடன் திரும்பி சிவாவும் ஆரூரனும் அன்னை இல்லம் வழியாக வரவேண்டி ஏற்பட்டது. அன்னை இல்லத்தை பார்த்ததும் ஆரூரனுக்கு பாட்டியின் ஞாபகம் வந்தது. அவள் கண்களில் தெரிந்த ஏக்கம் அவனை அந்த இடத்தை கடந்து போகாதபடி தடைபோட்டது. "என்ன மச்சி அதுக்குள்ள உனக்கு வயசாகிடிச்சா இங்க வந்து குடியேற நிக்குறாய்" சிவாவின் நையாண்டியை பொருட்படுத்தாது அன்னை இல்லத்துள் பாட்டியை தேடிச் சென்றான் ஆரூரன்.

அங்கு அவன் பார்த்த காட்சி அவனை மேலும் சங்கடப்படுத்தியது. அதேவாங்கில் பிரிக்கப்படாத சாப்பாட்டு பார்சலோடு பாட்டி அவன் வருவான் என எதிர்பார்போடு காத்திருப்பதுபோல் இருந்தது. அவனைக் கண்டதும் கனிவான புன்னகை மலர வாஞ்சையோடு அவனை அழைத்து அருகே இருத்திக்கொண்டாள். "என்னப்பா உங்க வேலை எல்லாம் முடிஞ்சுதாப்பா" வினாவிற்கு மனதில் கனத்தோடு "ம்ம்ம்" கொட்டினான். பாட்டி சிரித்துக் கொண்டே தொடர்ந்தாள். "இங்க உங்களப் போல சின்னப்பிள்ளைகள் லீவு நாட்களில வருவாங்கள் அவங்களை பாக்கும் போது என் பேரப் பிள்ளைகளை பார்க்கிற சந்தோசம் வரும். இல்லன்னா இந்த மரத்தடியும் இங்க சுத்திட்டு இருக்கிற அணிலும்தான் எனக்கு துணை" என கூறி கன்னங்களின் சுருக்கங்களையும் மீறி அழகாய் சிரித்தாள் பாட்டி.

"உங்களுக்கு பிள்ளைகள் இருக்காங்களா பாட்டி?" ஆச்சரியத்தோடு வினா வினான். "ம்ம்ம்" தலையாட்டியபடி ஆழ்ந்த யோசனையோடு பதில் சொல்லத் தயாரானாள். "அவங்கள் எல்லாம் இங்கதான் இருந்தாங்க. இப்ப ஜெர்மன், கனடால இருக்காங்கப்பா. அந்தக்காலத்தில மண்டதீவில பெரிய விவசாயி. சொத்துப்பத்துக்காரர் எங்கட அப்பர். பள்ளிக்கூடம் போறதே பெரிய விசயமா பாக்கப்பட்ட காலத்தில என்னை மானிப்பாய் மகளிர் கல்லூரி கொஸ்டல்ல விட்டு படிப்பிச்சார். கொஸ்டல்லுக்கு போறதுக்கு வண்டில ஏத்தி விட்டுட்டு மண்டதீவு சந்திவரைக்கும் பின்னாலையே நடந்து வருவர் அந்த மனுசன்" ஏக்கம் கண்ணில் மின்ன பெருமூச்சு விட்டாள் பாட்டி. அவளையே உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தான் ஆரூரன்.

"படிச்சு முடிச்சு ரீச்சரா வேலை பார்த்தன். பிறகு கடை வச்சிருக்கிறவருக்கு என்னை கட்டி வச்சாங்க. அவங்க வேலைக்கு போகாம நிப்பாட்டிட்டாங்க. இரண்டு ஆணும் ஒரு பொண்ணுமா மூணு பிள்ளைங்க பிறந்தாங்க. சந்தோசமாதான் இருந்துச்சு தம்பி, இனப்பிரச்சனையும் இடப்பெயர்வும் ஆரம்பிச்சுது எல்லாம் போச்சு. பிள்ளைகளையும் தூக்கிட்டு மாறி மாறி அலஞ்சம். செல்லடியில அவரும் போக சின்னப்பிள்ளைகளை வச்சுட்டு சரியா கஸ்டப்பட்டன். என்ட அண்ணாட உதவியோட வயல் வேலை, கூலி வேலைன்னு செய்து ஒருமாதிரி பிள்ளைங்கள நல்லபடியா வளர்த்திட்டன். கண் முன்னை இல்லாட்டியும் இப்ப எங்கையோ நல்லபடியா இருக்கிறாங்க" பல வருச கஸ்டங்களையும் துயரங்களையும் சில நிமிடத்தில் சொல்லி முடித்து பெருமூச்சு விட்டாள். பாட்டியின் சோகம் தன்னுள் வாங்கி சிலையாக சில நொடி அமர்ந்திருந்த ஆரூரன் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு "ஏன்பாட்டி எல்லாரும் வெளிநாட்டுக்கு போனவை? உங்களோட ஒராளாவது இருந்திருக்கலாம் தானே?" கேள்விகள் தொடுத்தான்.

கனவில் சிரிப்பதுபோல் அசுவாரசியமாக சிரித்த பாட்டி "மூத்த பெடிய சுட்டதால கடசிப் பொடியன் பயத்தில கப்பலால இந்தியாக்கு போய்ட்டான். அவனும் அங்க முகாமில இருக்கேக்க இங்க வயசுக்கு வந்த பெட்டய வச்சுட்டு கல்யாணம் கட்டி குடுக்க அலஞ்சன். இங்கு இருக்கிறவங்க கேக்கிற சீதனம் குடுக்க என்கிட்ட ஏதப்பா வசதி. அப்பதான் கனடால இருந்து சீதனம் வேண்டாம், பொம்பிள்ளை வடிவா இருந்தா போதுமெண்டு சம்மந்தம் வந்திச்சு. ஒருமாதிரி இருந்த காணி, பூமிய வித்து அந்த சம்மந்தத்தை முடிச்சு பெட்டையை வெளிநாட்டுக்கும் அனுப்பி வச்சன். அவள் போய் தம்பியாரையும் கூப்பிட்டாள். அவன் இப்ப ஜேர்மன் பொம்பிளையை முடிச்சு பிள்ளை குட்டியோட நல்ல இருக்குதுகள்" கற்பனையின் சந்தோசம் கண்களில் மின்ன நிமிர்ந்தாள் பாட்டி.

"ஏன் பாட்டி உங்களுக்கு வீடு இல்லையா?" கதைகேட்கும் ஆவலோடு அடுத்த வினாவை தொடுத்தான். "மண்டதீவு வீடு பிரச்சனையளுக்குள்ள தரைமட்டம் ஆச்சு. இங்க மானிப்பாய்ல வாடகைக்கு தான் இருந்தன். பிள்ளையளும் இல்லாம தனியா இருக்க பயமா இருந்திசு. பிள்ளையள்ட சொல்லிட்டு இங்க வந்திட்டன். இல்லத்துக்கு போகப் போறன் எண்டு சொல்லவே பேசினாங்க. புதுசா வீடு வாங்கித்தாறம் நீங்க இருங்கோ என்டாங்க. எனக்கெதுக்குப்பா வீடு. வயசான காலத்தில எங்கள பாக்கிறதே பெரிய பாடா கிடக்கு இதுக்குள்ள வீடு வாசல பராமரிக்க முடியுமோ? நான் வேண்டாமெண்டு பிடிவாதமா வந்திட்டன். கடைசி போனில அழுது கெஞ்சினான். அவன் அழும்போது மனசு கேக்கல அவன் அவளோ பாசம் என்னில். பள்ளிக்கூடம் போகும் போது நானும் அவனோட போய் இருக்க வேணும். பெரிய பொடியனா வளர்ந்தபிறகும் தூங்கிறதுக்கு நான் பக்கதில வேணும் அவனுக்கு. என்னதான் சாப்பிடாலும் நான் சாப்பிடும் போதும் வந்து நிப்பான். என்கையால அவனுக்கு ஊட்டிவிட்ட பிறகுதான் நான் சாப்பிடுவன். ம்ம்ம் என்ன பண்ண, இப்ப அவங்களுக்கும் பிள்ளைங்கள் வளந்திடாங்கள். அதுகளை ஒருமுறை பத்திடனும் தம்பி" கண்கலங்க கண்ணீரை வொயில் சேலை தலைப்பில் ஒற்றி எடுத்தபடி சுருக்கம் விழுந்த உதட்டோரம் லேசாக புன்னகையை வரவழைத்துக்கொண்டு ஆரூரனை பார்த்தாள் பாட்டி.

சிந்தனைகள் அவனை குழப்ப "ஓஓஓ" என்ற அழுத்தமற்ற முனுகலோடு பாட்டியின் வாழ்க்கைக்குள் இருந்து வெளியில் வந்தான். நேரத்தை பார்த்தபடி "நேரமாச்சுப் பாட்டி நான் வெளிக்கிடப்போறேன். அதுசரி உங்க பேரென்ன?" அவசரதோடு எழுந்தவன் பாட்டியின் பெயரை அறியும் ஆவலோடு நின்றான்.கொஞ்ச நேரம் தன்னை மறந்து சிரித்த பாட்டி "சரிதான் மோனே பேர் தெரியாமலா கதச்சனி. அந்த காலத்தில ஊருக்க ஆர் புதுசா வந்தாலும் பரம்பரை வரைக்கும் விசாரிப்பம். இப்ப எங்க உங்களுக்கு நிண்டு கதைக்கவே நேரமில்லையேபா" என்றாள் சிவகாமி பாட்டி.

பாட்டியின் வழியனுப்புதல்களோடு திரும்பவும் வருவேன் என்ற உறுதி மொழியோடும் விடைபெற்றான். அன்றிலிருந்து வாராவாரம் கோயிலுக்கு போவது போல் ஞாயிற்றுக்கிழமைகளில் சிவகாமி பாட்டியை சந்திப்பது ஆரூரனின் வழக்கமாகிப் போனது. பலகதைகள் பேசி அனுபவங்கள் பரிமாறி அன்போடு அவர்களது உறவு பிணைப்பு உருவாகி பாட்டி என்று அழைத்தவன் சிவகாமி என்று ஒருமையில் பாசத்தோடு அழைக்கும் அளவிற்கு இறுக்கமாகி இன்றுவரை தொடர்ந்தும் வருகின்றது.

"எல்லாம் நல்லாத்தானே இருந்திசு போன கிழமை கூட போய் பார்க்கும் போது பாட்டி நல்லாத்தானே இருந்தாங்க என்னாச்சு? நிர்வாகி சீரியஸ் என்று போன் பன்றாங்க. கடவுளே! பாட்டி நல்லா இருக்கனும் வாற மாதம் பிள்ளைகள் வாறம் எண்டு சொல்லியிருக்காங்க அதுவரைக்கும் ஏதும் ஆகக் கூடாது" ஆலயங்களே போய் அறியா ஆரூரனின் பலத்த வேண்டுதல்களோடு அன்னை இல்லத்தை அடைந்தான்.

வாசலில் இறங்கும் போதே அவனது மனம் பதைபதைத்தது. இருதயத் துடிப்பு எகிறியது. நடக்க தடுமாறிய கால்களை கஸ்டப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து வரவேற்பறையை அடைந்தான். அங்கு அவனுக்கு முன்னரே சிவகாமி பாட்டியின் உறவினர்கள் குழுமியிருந்தனர். பலர் அலைபேசியும் கையுமாக அவசரப்பட்டு அலைந்து கொண்டிருந்தனர். கூட்டத்தை விலக்கி பாட்டியின் அறைவாசலை அடைந்தான். அவனை கண்ட நிர்வாகி துக்கம் நிறைந்த குரலோடு "வாப்பா" அழைத்து சென்றார். அங்கு சிவகாமி பாட்டி வாழ்கையின் சோகங்கள் களைந்து நிரந்தரமாய் நிம்மதியான உறக்கத்திற்கு சென்றிருந்தாள் அவளது வலது கையில் பிள்ளைகளின் பழைய புகைப்படம் கசங்கிக் கிடந்தது.

"என்ன எண்டே தெரியல தம்பி சத்தம் சாவடி இல்லாம போய்டா. விடிய துப்பரவாக்க வந்த பிள்ளைதான் செல்லிச்சு பாட்டி ஒருமாதிரி இருக்கானு.நானும் டொக்ரறக் கூப்பிட்டுப் பார்த்தன். சீவன் இரவே போய்ட்டு என்டார்" நிர்வாகி சம்பவத்தை விளக்கிக் கொண்டிருந்தார். எதுவும் ஆரூரனின் காதோடு நின்று கொண்டது மூளையை எட்டவே இல்லை. அவன் மனம் பேரமைதியுள் ஆழ்ந்து போயிருந்தது. அங்கு நிலை கொள்ள முடியாமல் பின்வாங்கி அறையின் வெளியே வந்தான். "தம்பி சொல்லிடான் எல்லாம் நல்லபடியா நடக்கனுமாம். அம்மா ஆசைப்பட்ட மாதிரி ஒரு குறையும் இல்லாம சிறப்பா இறுதிச் சடங்கு இருக்கனும், என்ன செலவானாலும் பறவாயில்லை எண்டுட்டான். என்ன வர மூணுநாள் ஆகுமாம். அதுதான் என்ன பண்றதென்று தெரியல" உறவுகளின் உரையாடல் காதில் விழுந்து வேதனை மிக்க சிரிப்பை உண்டாக்கியது ஆரூரனுக்கு.

அங்கிருந்து மெதுவாக வெளியேறி மோட்டார் பைக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் கண்கள் ஓரத்தில் காயாத ஈரத்துளிகளையும் மனதின் ஆழமான துயரத்தையும் மீறி ஏதோ ஒரு நிம்மதியும் ஆத்ம திருப்தியும் அவனுள் குடியேறி இருந்தது.





# உளவளத்துணை சேவை தொடர்பான ஒரு நோக்கு...



**திருமதி. நி. பெ. லூட்ஸ் கிறிஸாந்தி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
உளவளத்துணைப் பிரிவு
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

மாறிவரும் இன்றைய தொழில்நுட்பவியல் உலகிலே, பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு மனிதர்களாகிய நாம் முகங்கொடுத்து வருகின்றோம். இன்று நாம் எமது சமூகப் பொருளாதார இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அன்றாட வாழ்க்கையில் போட்டி போட்டு ஓடிக்கொண்டிக்கின்றோமே தவிர, எமது ஆரோக்கியமான வாழ்வுக்கான உடலியல், உளவியல், ஆன்மீகத் தேவைகளைக் கவனிப்பதற்கு நேரம் ஒதுக்குவது மிகக் குறைவாகவே உள்ளது.



இருந்த போதும் உடல் சார்ந்த பிரச்சனைகளுக்கு வைத்திய ஆலோசனைகளையும், மருத்துவ சிகிச்சைகளையும் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு, எமது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ள முடியாத உளவியல் சார்ந்த பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எடுக்கும் முயற்சி மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

மேலைத்தேய நாடுகளில் உளவளத்துணை சேவையைப் பெற்றுக்கொள்வது ஒரு முக்கியம் வாய்ந்த சாதாரண செயற்பாடாக காணப்படுகின்றது. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை சுனாமிக்குப் பின்பும், போருக்குப் பின்புமே உளவளத்துணை சேவை தொடர்பான தேவை கூடுதலாக உணரப்பட்ட காலப்பகுதி என கூறலாம். போருக்கு பின்னான மன வடுக்கள், மக்கள் மத்தியில் இன்றும் உணரப்படுவதுடன், திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் மக்களின் தேவைகளில் ஏற்பட்ட மாற்றம், போட்டித்தன்மை மற்றும் ஒப்பீட்டு வறுமை என்பன மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தற்போது மக்கள் மத்தியில் பல்வேறு சமூக விரோத செயல்கள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போதைய காலப்பகுதியில் ஒவ்வொரு தனியனும் பல்வேறு பிரச்சனைகளுக்குள்ளாகி, அதன் எதிர்விளைவுகளாக கால ஓட்டத்தில் உளவியல் சார் பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றான். ஆகவே இவ்வாறான பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு தற்போது உளவியல் உளவளத்துணை சேவையின் தேவை உணரப்படுவதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு மக்கள் மத்தியில் உளவளத்துணை சேவையைப் பெற்றுக்கொள்பவர்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் தன்மை காணப்பட்டது.

(உதாரணமாக உளவளத்துணை சேவையைப் பெறுபவர்களை லூசு, பைத்தியம், மூளை சுகமில்லாதவன், மண்டை பழுதானவன்) என்ற பெயர்களால் அழைத்து வந்ததுடன், இவ்வாறான சேவையைத் தாம் பெறும்போது, தமது தனிப்பட்ட மற்றும் குடும்ப கௌரவம் பாதிக்கப்படும் எனும் கண்ணோட்டத்தில், சேவையைப்பெற்றுக் கொள்வதற்கு தயக்கம் காட்டிவந்தனர்.

ஒரு தனிநபருக்கு ஏற்படக் கூடிய மிதமான உளவியல் பிரச்சனைகளுக்கு உளவளத்துணை சேவையைப் பெற்றுக்கொள்ளும் போது, பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இவ்வாறான மிதமான பிரச்சனைகள் தீர்க்கப்படாது பல மாதங்களாக வருடங்களாக தொடரும் போது அதன் நோய்நிலை தீவிரத்தன்மை அடைந்து, உளநோயாக மாறுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக காணப்படுகின்றது. இன்று எமது சமூகத்தில் உளநோய்க்குரிய அறிகுறிகள் ஒருவரில் தென்பட்ட பின்பே, குறிப்பிட்ட நபரை குடும்பத்தார் தம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் போது உளவளத்துணை சேவைக்காக பரிந்துரை செய்வது அதிகமாக காணப்படுகின்றது.

இவ்வாறான உளநோய்க்குரிய அறிகுறிகள் தென்படும் போது, அவர் தன்னை தான் கவனிக்க முடியாத நிலையில் காணப்படுவார். அவ்வாறானவர்களை உளவளத்துணை சேவைக்கு உட்படுத்த முடியாது. இவர்கள் எதையும் கேட்கவோ, புரிந்து கொள்ளவோ முடியாத நிலையில் காணப்படுவதுடன், அவ்வாறானவர் முதலில் சிகிச்சை உளவியலாளரின் ஆலோசனை மற்றும் சிகிச்சை உளவியலுக்கு உட்படுத்தப்படுவதுடன், நோய்நிலை தரப்படுத்தல் அடிப்படையில் உள வைத்தியரிடமும் ஆற்றுகை செய்யப்படுவர். ஆகவே எம் மத்தியில் காணப்படும் உளவளத்துணை சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான, தவறான கண்ணோட்டம் களையப்படுவது அவசியமாகக் காணப்படுகிறது.

சாதாரணமாக தனது அன்றாட வாழ்க்கையை முகாமை செய்யக்கூடிய ஒரு தனியன், இன்றைய போட்டிமிக்க உலகமயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் செயற்பாடுகளுக்கு மனிதன் முகங்கொடுக்கும் வேளையில் பல்வேறு உளம் சார்ந்து ஏற்படக்கூடிய நம்பிக்கைத் துரோகம், அவமானம், அபாண்டமாக பழிசுமத்தப்படுதல், தப்பாகப் புரியப்படுதல், பாரபட்சமாக நடாத்தப்படுதல், காதல் தோல்வி, அன்பானவர்களின் இறப்பு, விவாகரத்து, வாழ்க்கைத் துணையாளர் கைவிட்டு செல்லுதல் அல்லது பிரிந்து வாழுதல் அல்லது இன்னுமொரு திருமணம் செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், வன்புணர்ச்சி, இளவயதுக் கர்ப்பம், அங்க இழப்பு, சொத்திழப்பு, கொடிய வறுமை, கடனைத் திருப்பி செலுத்த முடியாமை, பரீட்சை முடிவு ஏமாற்றம், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமை, வேலையின்மை போன்ற பாதிப்பு அனுபவங்களுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலானோர் அதில் இருந்து மீண்டெழுந்து ஒளிமயமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்கின்றனர்.


சிலர் இவ்வாறான பிரச்சனையில் இருந்து மீள முடியாமல், அவர்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் காரணமின்றி அடிக்கடி அழுதல், நித்திரைக் குறைவு அல்லது குழப்பநிலை, பயங்கரக் கனவுகள், அளவுக்கு மீறிய பதற்றம், நடுக்கம், பயம் மற்றும் கவலை, உணவு உட்கொள்வதில் பிரச்சனை, முரண்பாட்டு நிலைமை, கடுமையான களைப்பு, உள நெருக்கீடு, ஓய்வின்மையும் அமைதியின்மையும், சமநிலையற்ற மனவெழுச்சி, படுக்கையை நனைத்தல், காரணமின்றி தலைவலி, முதுகு வலி, வயிற்றுக் கோளாறு போன்ற மெய்பாட்டு

அறிகுறிகள் காணப்படல், அதிகமாக ஒதுங்கி தனிமையில் இருத்தல், மனதை ஒழுங்குபடுத்த முடியாமை, தன்னிலும் பிறரிலும் நம்பிக்கையின்மை, ஞாபகக் குறைவு, பரீட்சை பற்றிய பயம், எதிர்மறையான சிந்தனைப் போக்கு, ஓர் வேலையைப் பூரணப்படுத்த முடியாமை, தொடர்ச்சியான சோம்பல் சுறுசுறுப்பின்மை, அளவுக்கு மீறிய எதிர்காலம் பற்றிய பயம், உளக் குறைபாடுகள், மற்றவரில் தங்கி வாழுதல் போன்ற உளநலக் குறைபாடுகளுக்கு உள்ளாகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒருவர் தன்னால் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சனைகளை தனக்குத் தெரிந்த அனுபவம் உள்ள பெரியவர் ஒருவரிடம் அல்லது பொருத்தமான ஒருவரிடம் கதைத்து தீர்மானம் எடுக்கும் நல்ல பழக்கம் எமது முன்னைய சமூகத்திடம் காணப்பட்டது. எனினும் தற்போதைய நவீனகால நகரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மயமாக்கல் உலகில் நாம் அனைவரும் ஓய்வின்றி வாழ்வதோடு பிறரின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளாமலும் மேலும் மேலும் பிரச்சனைக்குள்ளும், தனிமைப்படுத் தலுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

ஆகவே எம்மால் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சனைகளை சாதாரணமாக மற்றவர்களுடன் கலந்துரையாடும் போது மேலும் மேலும் பிரச்சனை சிக்கலாகி கடினமாகு வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. ஆகவே வாழ்வில் முகங்கொடுக்கும் சிக்கல்களுக்கும், தனியாக தீர்வு காணமுடியாத பிரச்சனைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு, உகந்த கல்வியறிவும், பயிற்சியும் பெற்ற அனுபவமுள்ள உளவியல் உளவளத்துணையாளரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதே சிறந்த வழியாகும். ,தனூடாக தம் வாழ்வை நேர்மனப்பான்மையோடும், தன் பிரச்சனையைத் தெளிவாக உணரவும், அதனை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு தேவையான சக்தியையும், திறமையையும் தன்னுள் வளர்த்துக்கொள்வதற்கும் துணை செய்கின்றது.

உளவளத்துணை என்பது "நாளாந்த வாழ்வில் மனிதன் முகங்கொள்ளும் எதிர்பாராத விடயங்களில் ஏற்படும் பல்வேறுபட்ட உளப் பிரச்சனைகளை முகங்கொள்ள இயலுமான வகையில் மனித ஆளுமையை விருத்தி செய்வதும், தளம்பல் நிலையிலான உளநிலையினைத் தடுத்தலும் மற்றும் தேவையான போது உள சிகிச்சையினைப் பெற்றுக் கொடுப்பதுமே" உளவளத்துணை எனலாம். வேறு வகையில் கூறுவதாயின் "மனிதர்கள் முகங்கொள்ளும் பலதரப்பட்ட உளவியல் (Psychological), நடத்தை (Behavioral), மற்றும் ஆளிடை உறவுகள் (Interpersonal Relationship) போன்ற பிரச்சனைகளை உளவியல் விஞ்ஞான ரீதியில் அணுகி



அவற்றைத் தீர்ப்பதற்கு வழிகாட்டல் (Guidance), தீர்மானம் எடுக்க உதவுதல் (Helping to Decision making), வசதி வாய்ப்புக்களைச் சிகிச்சையளித்து (Facilitating), கற்றுக்கொடுத்தல் (Educating), சுகமளித்தல் (Therapy/ Treatment) மற்றும் தேவையான போது நிபுணத்துவ சேவைகளுக்கு வழிப்படுத்தல் (Referring) என்பதே" உளவளத்துணையாகும்.

ஆகவே ஒரு தனிமனிதன் அன்றாட வாழ்வில் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாத போதும், தனது நடைமுறை வாழ்க்கை தொடர்பான முடிவுகளை எடுக்க முடியாத போதும் எமது பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மக்கள், பிரதேச செயலகம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமூகப் பராமரிப்பு நிலையத்தின் உளவளத்துணை பிரிவின் ஊடாக தமக்கான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அந்த வகையில் பிரதேச செயலக உளவளத்துணை பிரிவினூடாக தனிநபர், குடும்ப, குழு உளவளத்துணை மற்றும் கிராம, பாடசாலை மட்டங்களில் உளவளத்துணை விழிப்புப்புணர்வு நிகழ்வுகளையும் நடாத்தி வருகின்றோம். அத்துடன் மாணவர்கள்,பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூக மட்ட குழுக்களான சிறுவர் இளைஞர்கள், முதியோர், பெண்கள் சங்கங்களுடன் இணைந்து அவர்களுக்கான உள சமூக ஆரோக்கியம் தொடர்பான கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றோம்.



* விசேடமாக பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவம், செவிமடுத்தல் திறன், கற்றல் குறைபாடுகள், பரீட்சைக்கு தயார்படுத்தும் முறைகள், மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய உளசமூக பிரச்சனை தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் மாணவர்களின் விலகல் நடத்தை தொடர்பாகவும் தனிப்பட்ட மற்றும் குழு உளவளத்துணை அமர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

* பெற்றோர்களுக்காக நடிபங்கு தொடர்பான உள கல்வி வழங்கல், ஆரோக்கியமான குடும்ப உறவு, பெற்றோருக்கான திறன் விருத்தி மற்றும் குடும்ப ஆதரவு பெற்றுக்கொடுத்தல், குடும்ப உளவளத்துணை வழங்குதல்

* அதிபர், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல், உளசமூகப் பிரச்சனைகள் தொடர்பான கலந்துரையாடல்களை நடாத்துதல்.

* அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான நெருக்கீட்டு முகாமைத்துவம், திருமணத்திற்கு முன்னான உளவளத்துணை, உளசமூகப் பிரச்சனைகளை கையாளுதல், புத்தாக்க சிந்தனையுடனான மனப்பாங்கு விருத்தி, ஆரோக்கியமான ஆளிடைத்தொடர்பாடல் தொடர்பாக கலந்துரையாடல்களையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல்.

* சமூக மட்டத்தில் முதியோருக்கான உளசமூகப் பிரச்சனைகள் தொடர்பான விழிப்புணர்வு, ஆளிடைத் தொடர்பாடல் மற்றும் ஆரோக்கியமான முதுமை போன்ற கருத்தரங்குகளுடன் தனிப்பட்ட குழு உளவளத்துணை சேவைகளையும் வழங்குதல்.

* பெண்கள் அமைப்புகளுக்கான உளசமூகப் பிரச்சனை தொடர்பான உளகல்வி வழங்கல், பெண்களை வலுப்படுத்தல், ஆளிடைத்தொடர்பாடல் மற்றும் சந்தோசமான குடும்ப வாழ்க்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளையும் தனிநபர், குழு, குடும்ப உளவளத்துணை சேவைகளையும் வழங்குதல்

* சிறுவர், இளைஞர் கழகங்களுக்கான ஆளுமை விருத்தி, தலைமைத்துவம், செவிமடுத்தல் திறன், தொடர்பாடல் திறன், திருமணத்திற்கு முன்னான உளவளத்துணை போன்ற நிகழ்வுகளும் நடாத்தப்பட்டு வருகின்றது.

* மேலும் தற்போதைய சூழலில் மேலோங்கிக் காணப்படும் பிரச்சனைகளான மது போதைப்பாவனை, தற்கொலை முயற்சிகள், குடும்ப பிரிவுகள், மாணவர்களின் விலகல் நடத்தை போன்ற பல்வேறு பிரச்சனைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் குழு, தனிநபர் உளவளத்துணை அமர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் சிறுவர் நீதிமன்ற தாபரிப்பு வழக்குடன் தொடர்புடைய துணைநாடிகளுக்கான குடும்ப உளவளத்துணை வழங்குதல் மற்றும் சமூதாய சீர்திருத்ததிற்கு உட்படுத்தப்படும் தவறாளர்களுக்கான குழு உளவளத்துணை சேவையும் சமூதாய சீர்திருத்தப் பணிமனை யுடன் இணைந்து வழங்கப்பட்டு வருவதுடன், முதியோருக்கான ஆரோக்கிய மான முதுமை தொடர்பான உளவளத்தணை சேவையும் முதியோர் இல்லதிற்கு சென்று வழங்கி வருகின்றோம்.

எம்மிடம் சேவை பெற்றுக்கொள்ள வருகை தரும் துணைநாடிகள் தமது சொந்த முடிவின் அடிப்படையிலும், சுகாதாரத்துறை, கள உத்தியோகத்தர்கள், சமூதாய, சமய அமைப்புக்கள், சட்டத்துறை, கல்வித்துறை, குடும்ப உறவினர்கள், காவல்துறை ஊடாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இருந்த போதும் எமது பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு உளவளத்துணை சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான விழிப்புணர்வு தேவையாகவே உள்ளது.


மனிதனின் அறிவு விரிந்து காணப்படும் காலப்பகுதியில், மனிதனால் மனிதன் போன்ற றோபோக்களை உருவாக்க முடிந்ததே தவிர மனிதனின் மனதைப் போன்று உருவாக்க முடியவில்லை. உலகப் படைப்புகளில் மனிதன் முதன்மையானவன் என்பதை உணர முடிகின்றது. ஆதலால் குறுகிய ஆயுள் வட்டத்தினுள் மனிதனின் உள்ளம் எதிர் கொள்ளும் அசாதாரண விளைவுகளை உரிய முறையில் கற்றுக்கொள்ள வேண்டியவனாக உள்ளான். “காலத்தின் தொடக்கத்திலிருந்து மனிதன் முன்னேறுவதை படிப்படியாக நான் காண்கின்றேன் ” (ஜோண் கிறிம்லிப் விட்டியர்) எனக் கூறுகின்றார்.

ஆகவே உள நலப்பாதிப்பு என்பது ஒருவனது ஆளுமையை முற்றாக மாற்றி அவனது வாழ்க்கையை அழித்துவிடும். ஆகையால் நாம் விழிப்பாக இருப்பதுடன், தற்போது இவ்வாறான பிரச்சனைகளுக்கு எமது நாட்டில் உளவளத்துணையாளர்கள், சிகிச்சை உளவியலாளர்கள், உள மருத்துவர்கள் போன்றோரை அணுகுவதன் மூலம் எமது உளநலனை விருத்தி செய்து கொள்ள முடியும். “ அமைதியான மனதைக் குழப்ப முடியாது, புயலின் போது

கடிகாரம் ஓடுவது போல் அந்த மனமும் அதிஸ்டத்திலும், துரதிஸ்டத்திலும் ஓடிக்கொண்டே இருக்கும்". (ராபட் லூயி ஸ்டீபன்சன்)

தற்போது நிகழ்த்தப்பட்ட ஆய்வின்படி உலக மக்கள் தொகையில் 35 கோடிபேர் மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளதாகவும், 10 இலட்சம் பேர் மனஅழுத்தத்தினால் தற்கொலை செய்து கொள்வதாகவும், தினம் ஒன்றிற்கு சராசரியாக மூவாயிரம் பேர் இறப்பதாகவும், இந்த எண்ணிக்கைக்கு மேலாக 20 மடங்கான தற்கொலை முயற்சிகள் இடம் பெற்றுள்ளதாகவும் அவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2012 - 2030 நோய்களுக்கான பெரிய காரணங்களாக மனஅழுத்தம் இருக்கும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் இவ்வாறான உளவியல்சார் பிரச்சனைகள் நாட்கள் செல்லச்செல்ல மெய்பாட்டு முறைப்பாடுகளாக அதாவது உடல்சார்ந்த நோவுகள் ஏற்படுவது போல் மனிதனை உணரச்செய்கின்றது.

எனவே ஆரோக்கியமான மனித வாழ்க்கைக்கு உடல் உள ஆரோக்கியம் முக்கியமானதாகும். ஒருவர் தனது உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூகத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையாதது உளநலமாகும். உளநலமுள்ளவர் ஒத்திசைவும், நல்லிணக்கமும் கொண்டவராய் இருப்பார். ஆகவே சமூக சக்தி மாறும் தன்மை கொண்டமையால் சகிப்புத்தன்மை, பொருத்தப்பாடு, வளர்ச்சி போன்றவற்றை உள்ளடக்கிய நல்லிணக்கத்திலிருந்தே உளநலம் உருவாகின்றது. ஆகவே எமது அன்றாட வாழ்வின் ஆரோக்கியமான இருத்தலுக்கு உளஆரோக்கியத்தைப் பேணுவோம்.



# பெண்ணியம் போற்றுவோம்

கி. கிறிஸ்ரின் டிஷானி
மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

முத்தான நல் வாழ்வின்
சொத்தான பெண் அவளை
நித்தமும் நிந்திப்பதன்
நியாயமென்ன கூறாயோ?
சுற்றமும் சூழ்ந்து பெண்மை
சோதிப்பதேன் சொல்லாயோ?

ஆளப் பிறந்த பெண்ணை - அடக்கி
ஆளல் தகுமோ இங்கு
மாளச் செய்யும் உந்தன்
கோழைச் செயலும் நீக்கி
வாழப் பிறந்த மங்கை - துயர்
மீளச் செய்யாயோ நீயும்

அந்தரங்க ஆசை காண
அந்த அந்த பருவம் உண்டே
தொந்தரவு செய்து பெண்மை
தொலைந்து போக செய்கிறீரே
இச்சைக்காய் கொச்சையாக்கும்
இழிவுநிலை வேண்டாமே இங்கு!

அவளுக்கும் உணர்வுண்டு
ஆண்வர்க்கம் அறிவீரே - அவள்
ஊன் உடல் உன்பாதி
உண்மைதனை நீ அறிந்தால்
வீண்வதை நீங்கிப் பெண்
தேவதை யென் றாவாளே!

சரிநிகர் சமம் என்று
உரிமை நீ அளித்துப்பார்
வரிசையிலே வளங்கள் கூடும்
வாரிப் புகழும் சேரும்
வையகம் வாழ்த்துச் சொல்ல
வாழ்வாங்கு வாழ்வோம் நாமே!



# யாழ்ப்பாணத் தமிழர் எதிர் சமூக விழுமியங்கள்

**திரு. இ. திலகரட்ணம்**
முன்னாள் தவிசாளர்
யாழ்ப்பாண மத்தியஸ்த சபை



யாழ்ப்பாணத் தமிழர்கள் பூர்வீக தென்குமரிக் கண்டத்தின் பூர்வீக குடிகளின் எச்சங்களாக இருக்கலாம் என்பது ஒரு துணிவு. ஆனால் அவர்களால் பேசப்படும் தமிழ்மொழி இன்று உலகில் வழக்கத்தில் இருக்கும் மொழிகளில் முதன்மையானது என்பது உலகம் ஏற்றுக்கொண்ட உண்மை. இவர்கள் தனித்துவமான சமூக விழுமியங்களைக் கொண்டிருந்தனர். இறுக்கமான குடும்ப அமைப்பு, ஒப்புரவான சமூக கட்டமைப்பு, கடுமையான உழைப்பு நீதி நேர்மையை நிலைநாட்டுவதில் நாட்டம், சேமிப்பு, இரக்கம் கடவுள் பயம் என்று விரிந்து சென்றன. காலப்போக்கில் மற்றவர்களின் ஊடுருவலால் சமூகவிழுமியங்கள் அச்சுறுத்தப்பட்டன. ஆயினும் தமிழ்மொழி மொழியாக மட்டுமன்றி அறமாக தரப்பட்டதால் சமூக விழுமியங்கள் தாக்குப்பிடித்தன. ஆனால் இன்று பெரிய அச்சுறுத்தலை எதிர் கொள்கின்றது.

தற்போதைய சமூகவிழுமியங்கள் எவ்வாறு இருக்கின்றது என்பதை நான் சுட்டிக் காட்டத் தேவையில்லை. நாளந்த உள்ளூர் தினசரிகளும் சமூக வலைத்தளங்களும் சான்று பகர்கின்றன. சமூக ஆர்வலர்கள் தம் ஆதங்கத்தை அவ்வப்போது வெளிப்படுத்தினாலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இல்லை. யாழ் பிரதேச செயலக கலை கலாசார பிரிவினர் தமது 2019ஆம் ஆண்டுக்கான மலருக்கு "மேம்பட்ட சமூக விழுமியங்களும் வளமான சமூகமும்" என்ற கருப்பொருளை எடுத்துக்கொண்டமை ஒரு ஆதங்க வெளிப்பாடே எனலாம்.

**அறிமுகம்**

யாழ் பிரதேச செயலகப் பிரிவுக்கான யாழ் நகர மத்தியஸ்த சபையின் உறுப்பினராக கடந்த பதினைந்து வருடங்கள் கடமையாற்றி கடந்த மூன்று வருடங்கள் சபையின் தவிசாளராக கடமையாற்றி முகம்கொடுக்கப்பட்ட சமூகப்பிணக்குகளின் தன்மையை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது சமூக சீரழிவுகள் தலைக்கு மேல் வெள்ளம் வந்த நிலைதான். திரௌபதி மானம் காக்க கிருஸ்ணனை நோக்கி கைகளை உயர்த்திய நிலைதான். அனால் சிலர் கிருஷ்ணன் வந்ததாகவும் திட்டமிட்ட நம்பிக்கை மோசடியால் உயிர் விட்டதாகவும் நம்புகின்றனர் ஆயினும் பலர் அவ்வாறு கூறுவது கேட்டும் கேளாதவர் போலவும் எடுத்த வழிமுறைகள் பிழையானவை என வாதிடுவதும், இனி ஒன்றுமே செய்ய முடியாது என்று கைவிரிப்பதும் எமக்கு பழகிப்போன சமாதான வார்த்தைகள். இந்த நிலைமை மேலும் சாதகமாகிப் போனதினால் மதுபாவனை, போதைப்பொருள் பயன்பாடு, களவான கருக்கலைப்புக்கள், கற்பழிப்புக்கள், வயது அடையாதோர் திருமணங்கள், பலதார பழக்கங்கள், பிரிந்து வாழும் முறைமைகள், களவு, கொலை, வாள்வெட்டுக் குழுக்கள், சிறுவர் துர்நடத்தைகள், இளையோர் அடாவடித்தனங்கள், முதியோர் அபத்தங்கள், துறவறத்தோர் துன்புறுத்தல்கள் என அடையாளங்கள் நாளந்தம் ஊடகங்களால் பகிரப்படுகின்றன.

இருப்பினும் சமுகத்தால் ஏற்கப்பட்டு புதிய விழுமியங்களாக நடைமுறையில் இருக்கும் நடத்தைக்கோலங்களான சாதாரண தனிநபர் அடைவுகளை அவரது குடும்பத்தவர் ஊடகங்களில் பாராட்டுவது குடும்ப நிகழ்வுகளுக்கு ஊடகங்களில் அழைப்பு விடுவது, உத்தியோக நிகழ்வுகளின் மாலை மரியாதை, பொன்னாடை போர்ப்பு நிகழ்வுகளை தனி மனித அடைவுகளாக காட்ட முனைவது, கையூட்டு ஊடாக காரியங்களை சாதிப்பது, உழைப்பை தவிர்த்து ஊதியத்தை நாடுவது பொறுப்பு ஏற்காமல் அதிகாரத்தைக் கையாளுவது, விரயங்கள் பற்றி பெருமை கொள்வது, நோய்க்கான மருத்துவத்தை பெருமையாக எடுப்பது என்பன வேறு ஒரு மட்ட சமூகத்தினரின் இயலாமையை தூண்டுவதாக அமைந்து விடுகின்றது.

இங்கு சமூக விழுமியங்கள் காலப்போக்கில் மாற்றமடைவது தவிர்க்க முடியாததே. ஆனால் யதார்த்த சூழலுக்கு ஏற்புடையதாக, குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் என்ற இருப்பை பேணுவதாக தமிழ் மொழிவழிச் செழுமையை பாதுகாப்பதாக இருக்கவேண்டும். ஆனால் நிலைமை அவ்வாறில்லை. பொதுவாக சமூகச்சீரழிவு என்று மற்றவரை குறித்துக்காட்ட பழகிவிட்டோம். ஆனால் உண்மை சமூகச் சீரழிவுக்கு நாம் ஒவ்வொருவரும் நேரடியாக அல்லது மறைமுகமாக பங்களிப்பு செய்கின்றோம். ஒரு விரல் நீட்டும் போது ஏனைய விரல்கள் நம்மைச் சுட்டுகின்றன என்பதை உணரவேண்டும். உன்னைத் திருத்திக்கொள் உலகம் திருந்திவிடும் என்றார் ஒரு மகான். இந்த நோக்கில் எமது பங்களிப்பின் தன்மையை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சமூக விழுமியங்கள்**

சமூக விழுமியங்கள் வாசித்து, அல்லது கேட்டு அறிவதற்கான ஒரு விடயம் அல்ல. அது உயிரணுக்களால் கடத்தப்பட்ட நடத்தை. உள்ளுணர்வுகளால் ஒன்று கலந்த உயிர் குறிப்பாக தமிழர்களுக்கு மொழியால் ஊட்டப்பட்ட அமுது. ஏனெனில் தமிழ்மொழி அன்பு, இரக்கம், அறமாகவே வழங்கப்பட்டிருக்கின்றது. இருப்பினும் தமிழ்மொழிக்கும் தமிழருக்கும் எதிராக ஆதிக்க சக்திகளால் நீணடகாலத் திட்டத்துடன் எடுக்கப்பட்ட முனைப்பும், இம் முனைப்பு சார்பாக எம்மவர் பாரா முகமும், சிலரின் விட்டுக்கொடுப்பும் சுயநலப்போக்கும் நிலைமையை சிக்கலாக்கிவிட்டது. இதற்கு அனுசரணையாக நீண்டகால யுத்தக் கெடுபிடிகள், அரசியல் வறுமை அல்லது வெறுமை வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மை, நிர்வாக அதிகாரத்தில் இருப்போர் தீர்மானம் எடுக்கமுடியாத அழுத்தம், தொழில்திறன் இழப்பு, தொழிலின்மை போதிய வருமானமின்மை போன்ற காரணிகள் பங்களித்துள்ளன.

சமூகச்சீரழிவுகள் பொதுவான மனித நடத்தைக்கோலம் அல்ல தெரியாமல் நிகழ்பவை என்றும் கூறக்கூடியது அல்ல. உண்மையில் சமூக ஏற்புத் தன்மை கொண்டதாகவே காணப்படும். இதனால் சமூக சீரழிவுகளுக்கு முழு சமுகமும் பொறுப்பு ஏற்க வேண்டும். ✓ ஒவ்வொரு சமூகத் தொகுதியினரும் தமக்கே உரிய நடத்தையால் பங்குகொள்வர். இந்த நோக்கில் யாழ்ப்பாணத் தமிழர் தொகுதியினரை கீழ்வருமாறு தொகுக்கலாம்.

எல்லைப்படுத்தப்பட்டு பின்தள்ளப்பட்டு பசியின் கொடுமை, ஏழ்மையின் தாக்கம், இயலாமையின் வெதும்பல், தோல்வியின் பரிகாசம், தன்னை இழந்து விட்ட நிர்ப்பந்தம் காரணமாக ஒன்றுமே செய்யமுடியாது என்ற கையறு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் விழுமியங்களுக்கு தாக்குபிடிக்க முடியாதவர்களே. மேலும் இவர்கள் ஆதிக்க எதிரியின் தந்திரோபாயங்களுக்கு இலகுவாக வசப்படக் கூடியவர்கள்.

எதிரியின் தந்திரோபாயங்களுக்குள் அள்ளுப்பட்டு புது விளக்கம் கொடுத்து, தமது வருமானத்தைத் திடப்படுத்திக்கொண்டவர்கள் விழுமியம் சார் சிந்தனையை அடக்கியே வாசிக்கப் பழகிக் கொண்டனர்.

இந்த தந்திரோபாயம் சார் அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட்டவர்கள் அதிகாரத்தை கையகப்படுத்த மக்களுக்கு அந்தப்பக்கம் அந்தப்பக்கம் காட்டி, தம்மை முதன்மைப்படுத்தி, வியர்வை சிந்தாது குளிரூட்டப்பட்ட வாகனங்களில் கரைவேட்டி கலையாது, மாலை மரியாதைகளுக்கும் பொன்னாடை போர்ப்பவர்களுக்கும் தலையாட்டி தலைகுனிந்து வாழ்பவர்கள் பல சந்தர்ப்பங்களின் சமூகத்தின் இந்த அவல நிலையை தமது அரசியலுக்கு பயன்படுத்துகின்ற வகையில் புதிய விழுமியங்களை அறிமுகப்படுத்துகின்றனர்.

இந்த தந்திரோபாயங்களை வென்று தம்மை விடுவித்து புதிய சூழலுக்கு ஒப்புரவாக உலக அரங்குவரை பேசுபொருளாக்கி தமது சுகபோகத்தை அனுபவிப்பார்கள் அடையாளப்படுத்தக் கூடிய பல விழுமிய வெப்புசாரங்களை அறிமுகப்படுத்துகின்றனர்.

எனவே சமூகச்சீரழிவுக்கான விதைகளை அவரவர் தொகுதியின் தன்மைக் ஏற்ப விதைத்து விடுவது, பேசுபொருளாக்கி குளிர் காய்வது ஒரு புறமிருக்க உலகமயமாதல் சூழலுக்கு இசைவாக வர்த்தக விளம்பரங்கள், பிரச்சாரங்கள், மக்களின் நுகர்வுப் பழக்கவழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியமையால் திருப்திகரமான வருமானமட்டத்தை கொண்டிராதவர்களுக்கு சமூகவிழுமியங்கள், பேசுபொருள் மட்டுமே தவிர அடிப்படை மனித உரிமை நியமங்கள். மாறுபட்ட எல்லா நடத்தைக்கோலத்தையும் அடிப்படை உரிமையாக பார்ப்பதால் சமூகச் சீரழிவுகளும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இந்த சிக்கலான நிலைமையில் புரையோடிப்போன பாராமுகங்கள் அல்லது பழகிப்போன நடத்தைகள் சமூகச்சீரழிவுகளை நீருற்றி வளர்க்கின்றன.

**நிர்வாக/ அதிகாரம் வசிப்போர்**

இன்றைய சமூக ஒழுங்கமைப்பு அரசாங்க பொறுப்பாகும். அரசாங்க சேவைகள் வளர்ச்சி அடைந்து சமூக அசைவின் எல்லா நிலைகளிலும் தனது மேற்பார்வையை வழி நடாத்தலைக் கொண்டிருக்கின்றது. குழந்தை சிசுவாகியது முதல் கர்ப்பிணி அவதானிக்கப்பட்டு குழந்தை, சிறுவர், மாணவர், இளையோர், குடும்பத்தினர், தொழிலாளர், மதத்தினர், நோயாளர், மாற்றுத்திறனாளிகள், முதியவர், ஏழைகள், இல்லிடமற்றோர் அனாதைகள் அகதிகள் என அவதானித்து மேற்பார்வை செய்யப்படுகின்றது தவிர அவர்களது வாழ்வில் செல்வாக்கு செலுத்தும் சங்கங்கள், கழகங்கள் மததாபனங்கள் சமூகக்குழுக்கள் என்பன வழி நடாத்தப்பட்டு மனித இயற்கை அனர்த்தங்களில் பாதுகாத்து வாழ்விடங்கள் வளங்கள், சூழல்கள்,

இதரசேவைகள், தொழிவ்வாய்ப்புக்கள் என அனைத்தையும் உறுதிசெய்யும் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. இந்நோக்கில் சமூகவிழுமியங்களும் அரச பொறுப்பிலேயே இருக்கின்றது. இருந்தும் சமூகசீரழிவுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன என்றால் அரசாங்க சேவையில் எங்கோ ஒரு ஒழுக்கு ஏற்பட்டுள்ளது என்றே பொருள் பொருள்கொள்ளப்படல் வேண்டும். வேறு கருத்தில் கூறுவதாயின் சமூக முரணிகளின் செயற்பாட்டிற்கு பக்கபலமும் ஆதரவும் சமூக கட்டமைப்பில் காணப்படுவதாகவே கொள்ளப்படும்.

இந்த நிர்வாக/ அதிகார ஒழுங்கு கருத்தில் கொள்ள முடியாத ஒரு சூழல், உருமறைப்புச் செய்யப்பட்ட சூழல் காணப்படுவதால் இவை வெளிப்படுவதில்லை. பல சந்தர்ப்பங்களில் அதுவும் புதிய நடத்தைக் கோலமாக எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அரச நியமங்கள், ஒதுக்கீடுகள் பல விடயங்களுக்கு காரணமாகி விடுகின்றது. அல்லது மேல்மட்ட தொகுதியினரின் செல்வாக்கிற்குள் உள்வாங்கப்பட்டு விடுகின்றது. குறிப்பாக எல்லைப்படுத் தப்பட்ட மக்களுக்கு நிர்வாக/ அதிகாரம் கையாளவோ நம்பிக்கைக்கு உரியவராக இருத்தல் அவசியம். அரச நிர்வாக அதிகாரம் வகிப்போர் மனிதாபிமானம் கொண்டு விடயங்களை அணுக வேண்டும். குறிப்பாக முற்கால சமூகக்கட்டமைப்பில் அன்னசத்திர நிலையங்கள் ஏழ்மையைக் கையாண்டனர். ஆனால் இன்றைய காலகட்டத்தில் மண்டபங்கள் விடுதிகளில் நடக்கும் தனிப்பட்ட கொண்டாட்டங்களில் ஏற்படும் விரயத்தையோ, அல்லது சமய திருவிழாக்களில் வேடிக்கை வெடிகொளுத்தும் கொண்டாட்டங்கள் சார்ந்த செலவினங்களையோ எவரும் கண்டு கொள்வதில்லை. விரயங்கள் போது ஏழ்மையின் பிடியில் இருந்து எல்லைப்படுத்தோரை விடுவிக்க யார் மணி கட்டுவது? எனவே உள்ளுர் அதிகார சபைகள், அரசாங்க சேவையாளர்கள் எல்லா நிர்வாக மட்டத்திலும் பொறுப்பேற்று அதிகாரங்களைக் கொண்டு மக்கள் சேவையாக பிரயோகிக்க முன்வந்தால் சமூகசீரழிவுகள் ஒரு கட்டுக்குள் வந்துவிடலாம்.

**சமூக விழுமிய நிலையங்கள்**

பொதுவாக இன்றைய சமூக கட்டமைப்பில் பாடசாலைகளுக்கு விழுமியங்களை அறிமுகப்படுத்தும் பொறுப்பு உண்டு என ஏற்கப்பட்டுள்ளது. இதனால் தான் ஒரு பாடசாலை பூட்டப்பட்டால் பத்து சிறைச்சாலைகள் திறக்கப்படலாம் என நம்பினர். சமூகமும் இன்று வரை அவ்வாறே பாடசாலைகளை நம்புகின்றனர். அரசும் தனது பங்கிற்கு பல தரமட்ட பாடசாலைகள், மேலாக கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட கல்வி நிர்வாகிகளைக் கொண்டு பெரும் பணச்செலவில் கல்வி நிர்வாகத்தை முன்னெடுக்கின்றது. ஆனால் விழுமிய மதிப்பீடு மாற்றமடைந்து பெற்றோர் பெரும் கல்விச்செலவினத்தை மேற்கொள்ள தள்ளப்பட்டுள்ளனர். தவிர தமிழ்மொழி கடைசித் தெரிவாக மாற்றப்பட்டுவிட்டது. பாடசாலைக் கல்விமுறை பட்டம் பெறுவதை நோக்கி மக்களின் தற்துணிவை வளர்க்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க தமிழ்மொழியின் பின்னடைவு அறத்தின் பின்னடைவாகவே கொள்ளத்தக்கது. குறிப்பாக பாலர்பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் தமிழ் அறிவு பற்றி எவரும் அக்கறை கொள்வதாக தெரியவில்லை. கற்பித்தல் கல்வி நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழான தொழில் என எடுக்கப்பட்டதால் மாணவர் பொறுப்பேற்பு மருவிப்போயிற்று. இந்த நிலைமை தங்கி வாழ்தலை, குனிந்து வாழ்தலை திணித்து விடுவதால் சமூகச்சீரழிவுகள் தலைதூக்கி விடுகின்றன. சில பாடசாலைகளில் சமூகச்சீரழிவுகள் ஆசிரியர்களினால் முன்னெடுக்கப் படுகின்றது என்று கூறும் அளவுக்கு விழுமிய மாற்றங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. தனியார்

கல்வி நிலையங்கள் சாதிப்பதாக காட்ட முழுசமூகமுமே தயாராகிவிட்டது. எனவே பாடசாலை நிர்வாகம் தனது பொறுப்பேற்றலை சீர்செய்ய இனியாவது முன்வரவேண்டும். ஆசிரியரை கல்வி நிர்வாக அலகின் ஒரு அதிகாரியாக எடுக்காது மாணவர்களின் வழிகாட்டியாக, முன்னுதாரணமானவராக நம்பிக்கைக்கு உரியவராக, தேடலுக்கு வழிகாட்டுபவராக எடுக்காத வரை நிலைமை மாற்றமடையாது.

**சமூக விழுமிய முன்னோடிகள்**

இன்றைய சமூகத்தில் விழுமியங்களின் முன்னோடிகளாக வர்த்தகர்கள் வியாபாரிகளைக் கூறலாம். இவர்களது கவர்ச்சிகரமான விளம்பரங்கள், பிரச்சாரங்கள் மக்களது நுகர்வு நாட்டத்தில் பாரிய செல்வாக்கு செலுத்துகின்றன. இதனால் நுகர்ச்சிப் பொருளாதாரம் வலுப்பெற்று மக்கள் சந்தைகளை நம்பியே வாழவேண்டியவராக மாறிவிட்டனர் தவிர மக்களின் தேவை முன்னுரிமைகளை இவர்கள் தீர்மானிக்கின்றன மதுபானம், போதைப்பொருள், கையடக்கத்தொலைபேசிகள், சமூகவலைத்தள ஊடகங்கள், வாகனங்கள் வீட்டுப் பாவனைப் பொருட்கள் வானொலி தொலைக்காட்சிச் சாதனங்கள், உணவு வகைகள், உடுப்புக்கள் என்பன பெரும் எடுப்பில் மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்தப்படுவதால் வருமானப் பற்றாக்குறை உள்ளவர்கள் பெரும் உளநெருக்கீடுகளுக்கு உள்ளாகின்றனர்.

இந்த தேவைகளை ஈடுசெய்கின்ற நோக்கில் பல அவலங்கள் நடந்தேறுகின்றன. நுகர்வு பற்றி நடத்தையை வழிப்படுத்த அல்லது அறிவூட்ட எந்த ஒரு அமைப்பும் முன்வருவதில்லை குறிப்பாக சமூக அமைப்புக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமயம் சார்ந்த சபைகள் இது பற்றி கவனம் எடுப்பதில்லை. இதனால் வர்த்தக வியாபார விளம்பரங்களால் போலியான பொருட்கள் இலகுவாக சந்தைப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக ஏமாற்றப்பட்ட மக்கள் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதை உணராத வகையில் அவர்கள் கவனத்தை திருப்ப சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் கையாளப்படுகின்றன.

நிலைமை இவ்வாறிருக்க வியாபார நிலயங்களுக்கு அனுமதிவழங்கும் உள்ளூர் அதிகார சபைகள் அல்லது அரசாங்க அலுவலகங்கள் வியாபார செயற்பாடுகளை கட்டுப்படுத்த முறையான திட்டம் வகுத்திருக்கவில்லை. இதனால் சந்தைப்படுத்தல் பொருளாதார கட்டமைப்பின் விகாரங்கள் மக்களின் சமூக நடத்தைகளில் பாதிப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகிற்று.

**சமூக விழுமிய நெறியாளர்கள்**

ஒரு சமூக கட்டமைப்பில் விழுமியங்களின் நெறியாளர்களாக ஊடகத்துறையினர் இருந்தனர். மக்கள் செய்திகளை அறிவதன் ஊடாக தம்மை தயார்படுத்திக் கொண்டனர். ஊடகத் தர்மமாக ஏற்கப்பட்ட விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஊடகம் நீதி நேர்மையாக தராசு கோல் போல் செயற்பட்டது. மக்களுக்கு எது தேவை, எது தேவையில்லை, எவ்வாறு சொல்லப்பட வேண்டும் என்பன கூடிய கவனத்தில் கொள்ளப்பட்டது. இதனால் மக்களை நெறிப்படுத்தி வழிநடாத்தும் பொறுப்பினை ஊடகம் ஏற்று இருந்தது.

ஆனால் இன்றைய போட்டிச் சந்தையில் தினசரிகள், சமூகவலைத் தளங்கள் சந்தைப் பொருளாதாரத்தின் விற்பனைப் பொருளாக எடுக்கப்பட்டதினால், சந்தைப்படுத்தல் மட்டுமே கருத்தில் எடுக்கப்படுகின்றது. தினசரிகள் சமூக வலைத்தளங்கள் மலினப்பட்டு கவர்ச்சிகரமானதும் விகாரமானதுமான செய்திகளை பிரசுரிப்பதால் முரணிகளும் ஏற்கனவே குறித்துக்காட்டிய விகாரமான உளநெருக்கீடுகளுக்கு உட்பட்டவர்களும் தமது நடத்தைக் கோலத்தை மாற்ற முற்படுகின்றனர். குறிப்பாக புதிய விழுமியங்களாக அறிமுகப்படுத்தும் விடயங்கள் ஊடகங்களின் ஊடாகவே நடந்தேறுகின்றன. இவ்வாறான போக்கினால் சில சந்தர்ப்பங்களில் சமூகக்குழுக்கள் இவற்றை முன்னுதாரணமாகவும் எடுத்து விடுகின்றன இதனால் ஊடகத்தின் தூய்மையை நிலைநிறுத்துவது சமூகச் சீரழிவுக்கு எதிரான மிக முக்கிய நடவடிக்கையாகும்.

**முடிவுரை**

இத்தகைய பின்னனியில் சமூகச்சீரழிவு ஒரு தொடர் கதையாகவே இருக்கப் போகின்றது. அதிலும் வன்முறைத் தொடர்பாடல் கலாசாரத்திற்கு பழக்கப்பட்டுப்போன சமூக கட்டமைப்பில் எதையும் எவரும் கேட்க முன்வருவதில்லை தவிர வன்முறை விலைபோகும் என்பதை உணர்ந்து கொண்ட மக்கள் குறிப்பாக இளையோர் தம்மை மாற்றத்துக்கு உட்படுத்த மாட்டார்கள். மறுபுறம் நிலைமைகளை சாதுரியமாக கையாளுதல் என்ற கருத்தில் பெரும்பான்மையினர் மௌனிகளாக வாழ விரும்புகின்றனர். அவர்கள் மௌனமாக நிகழ்வுகளை, நிலைமைகளை சாதுரியமாக கையாளுதல் என்ற கருத்தில் பெரும்பான்மையினர் மௌனிகளாக ஜீரனித்துக்கொள்வது சீரழிவுகள் அவர்களது ஆதரவை பெற்றதாகவே கொள்ளப்படுகின்றது.

எனவே யாழ்ப்பாண தமிழர் சமூகம் தம் முன் வலுவுடன் வியாபித்திருக்கும் இந்த சமூகச்சீரழிவுகளுக்கு ஒன்றிணைந்து முகம்கொடுக்க முன்வரவேண்டும். குறிப்பாக மறைமுகமாக சமூகசீரழிவுகளுக்கு நான் காலாக கூடாது என்ற விழிப்புணர்வைப் பெறவேண்டும். வெளியில் இருந்து சிறிய நகர்விலும் நேர்மையாக நீதியாக அறம் சார்ந்து வாழ முயல்வோம்.

# கலை (மன)வலிமை

**புயல் ஸ்ரீகந்தநேசன்**
கொழும்புத்துறை



மது என்னும் சமூக விரோதி வாய்க்குள் போனால், மாது,மாமிசம் தேடும். ஆண் வர்க்கத்தைப் பொறுத்த வரை அதில் உண்மை உண்டு. அன்று மதுமிதா அவ்வளவாக குடிக்கவில்லை என்றாலும் வார மாத குடியால் மதுஷனைத் தொல்லைபடுத்தினாள்.

பெண்ணுக்குச் சமூகம் என்னதான், சுதந்திரம் அளித்தாலும் உடல் உறுப்புக்கள், உணர்வுகள், சிந்தனைகள் மென்மையானவை. இந்த இயற்கையை மாற்றப் போனால், அவள் சமூகத்தில் மூன்றாம் நபர் இவ்வாறே மதுமிதாவை, மதுஷன் எண்ணியிருந்தான். கலை உணர்வோடு அனைத்தும் நோக்கும் பௌவியம் அவனைச் சமூகத்தில் இருந்து வேறுபடுத்திக்காட்டியது. இருவருக்கும் இடையிலான தொடர்பு கல்லூரியில் படிக்கும் போது, காதலாக மலர்ந்து இன்றுவரை மூன்று வருடங்களாக படர்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவளை, அவன் அவ்வளவு மோஷமாக காணவில்லை வீட்டினதும் சமூகத்தினதும் எதிர்ப்பின் மத்தியிலும் வழி தவறி செல்லும் தனது காதலியை வெறுக்கும் மனோபவம் அவனுக்குத் தோன்ற வில்லை. குடும்பங்களில் பணத்துக்காகவும் பதவிக்காகவும் போலி கௌரவத்துக்காகவும் எதிர்பார்ப்புக்காகவும் தனது பரம்பரைக்காகவும் முதலைக் கண்ணீர் வடிக்கும் பெண்களை விட அவள் அவனுக்கு மேன்மையாகத் தெரிந்தாள். கலையில் ஞானம் பெற்று முதிர்நிலை அடைந்திருந்த அவன், அவளை வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தான்.

ஜெயக்காந்தனது “அக்கினிப்பிரவேசம்” “புதுச்செருப்புக் கடிக்கும்” ஆகிய சிறுகதை பிரதிகளுடனும் “சில நேரங்களில் சில மனிதர்களும்” என்னும் நாவல் புத்தகத்துடனும் மதுமிதாவின் தொல்லையைப் பொருட்படுத்தாமல், முதலில் புதுச் செருப்புக் கடிக்கும் சிறுகதையை உரத்து வாசிக்கத் தொடங்கினான். அவளது செவிகளை ஊடறுத்தது. சில நிமிடங்களின் பின்னர் அவனது கைகளில் உள்ள புத்தகமும் பிரதிகளும் கை மாறின. மதுவில் மூழ்கியிருந்த மதமிதா விருப்பத்துடன், மீதி என்ன விடயம் என்பதை அறிய அவற்றைப் பறித்தெடுத்தாள். அன்றைய பொழுது மௌனமாக விடைபெற்றார்கள். வீதியின் எதிர் திசைகளில் பயணித்த இருவரும் அன்று ஒரே திசையில் விடை பெற்று செல்வதைப் பார்த்துப் பறவை கூட்டம் பொறாமை கொள்கின்றது. சனக்கூட்டம் நிரம்பி ஓடுகின்றது. மதுமிதாவின் நடன அரங்கேற்றமும் அவனின் தமிழ்ச்சிறுகதை ஆய்வு நூல் வெளியீட்டு விழாவும் இனிது நடக்கின்றது. அவர்களது மகளின் “கலையால் மீண்டெழுவோம்” என்னும் தலைப்பில் பேச்சு நேரம் வந்தது அரங்கே அமைதி அவனது குரல் ஓங்கி ஒலித்தது.

மதுமிதாவை சமூக விரோதி என தூற்றிய அதே சமூகம் வாழ்த்துப்பா பாடியது. அவனது கலை மீதான நம்பிக்கை வீண் போகவில்லை. வாசிப்பும் ஆய்வுகளும் பன்மடங்கு பெருகின. தன்னுடைய தலை பணியாக ஓய்வு நேரங்களில் கலையை அனைத்து மனிதனும் இரசித்தால், கட்டாயம் வாழ்வின் பயனை அடையலாம் என்னும் தலைப்பின் கீழ் ஊர் ஊராக பிரசங்கம் செய்தான். மதுமிதா இப்போது சமூகத்தில் பெண்கள் சீர்திருத்த அமைப்பின் தலைவி, மகன் சிறந்த பேச்சாளனும் வைத்தியனுமாக வலம் வந்தான்.

# குழந்தைகளின் உணவும் ஆரோக்கிய வாழ்வும்

**Dr.(Mrs) Vidhya Milano prasad**
Lecturer,
unit of siddha medicine,
University of Jaffna.



ஒரு மனிதனின் ஆயுட்காலம் எவ்வளவு? என யாரேனும் உங்களிடம் கேட்டால், உங்கள் பதில் என்னவாக இருக்கும்? நூறு ஆண்டுகளா?, எண்பது ஆண்டுகளா?, அறுபது ஆண்டுகளா? அல்லது சொல்ல முடியவில்லை என்பதா? உங்கள் பதில் உண்மைதான், இன்றைய மனிதனின் ஆயுட்காலம் சரியாக தீர்மானிக்க இயலாமல் இருக்கிறதல்லவா. இக்கால மனிதனுக்கு இருபது வயதிலேயே தொற்றாத நோய்கள் வந்து விடுகிறது. ஆரோக்கியம் இல்லாமல் ஆயுள் மட்டும் இருப்பதால் நன்மை ஒன்றும் இல்லை.

எமது ஆராக்கியம் இவ்வாறு அழிவுற்றதற்கு முக்கிய காரணம் எதுவாக இருக்கும் என சிந்தித்துப் பார்த்தீர்களானால், அதற்கு காரணம் "நாம்தான்" என்ற பதில் கிடைக்கும். எமது முன்னோர்கள் எமக்கு கூறிய அருமையான நாகரிகம், பண்பாடு, உணவு பழக்க வழக்கம் ஆகியவற்றை, நவீன கலாசாரம் என்ற பெயரில் நாம் குழி தோண்டி புதைத்ததுதான் அதற்கு காரணம். "நாங்கள் ஒன்றும் செய்யவில்லையே" என யோசிப்பவர்களுக்கு இவ் அக்கம் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்.

முதலில் நவீன கலாசாரம் என்ற பெயரில் நாம் எமது இயற்கையை தொலைத்து, செயற்கையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பல விடயங்களில் எமது வாழ்க்கை முறை மாற்றமடைந்துள்ளது. இதில் முக்கியமான ஒன்று எமது உணவு பழக்க வழக்கங்களில் நாம் கையாளும் மாற்றம். தமிழரின் பாரம்பரிய உணவுகளில் முழுத்தனியங்களான உணவுப் பாவனை அதிகமாக காணப்பட்டது. உதாரணமாக கைக்குத்தரிசி, வரகு, தினை, கம்பு, சோளம், குரக்கன், பாசிப்பயறு, நார்ப்பொருள் அடங்கிய உணவுகள், தினசரி உணவில் முக்கிய இடம் வகித்தன. தற்காலத்தில் இம்முறை உணவுக்கூறுகள் பாவனை அருகி விரைவுணவுகளின் (Fast Food) ஆதிக்கம் அதிகரித்து வருவதால் தான் உடற்பருமன், நீரிழிவு, புற்றுநோய், மலச்சிக்கல், இருதயநோய் போன்ற தொற்றா நோய்கள் எமது சமூகத்தில் அதிகரித்துள்ளது.

எமது முன்னோர்கள் சில உணவுப் பழக்கவழக்கங்களை நாம் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக சில சடங்குகளை, சம்பிரதாயங்களை ஏற்படுத்தி வைத்தனர். உதாரணமாக குழந்தை பிறந்து முதன் முதலில் பல் வரும்போது "பல்லு கொழுக்கட்டை கொட்டுதல்" எனும் வழக்கம் எமது முன்னோர்கள் கூறியுள்ளனர். நாம் அன்றாடம் சோறு, பிட்டு, இடியப்பம் போன்ற உணவுகளையே உண்கிறோம். அப்படியென்றால், பல் முளைத்த குழந்தைகளுக்கு பிட்டு கொட்டுதல், இடியப்பம் கொட்டுதல் என்று சடங்கு வைத்திருக்கலாமே? ஏன் கொழுக்கட்டை தான் கொட்ட வேண்டும் என்றார்கள். இதற்கு காரணம்

என்னவென்றால் பல் முளைத்த குழந்தைகளுக்கு நிறையுணவு வழங்க வேண்டும் எனும் செய்தியை வலியுறுத்தவே இந்தச் சடங்கை எம் முன்னோர்கள் கையாண்டனர்.

இன்றைய நவீன உலகம் நிறையுணவை பற்றி அதிகம் கூறுகிறது. நிறையுணவு என்றால் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விட்டமின்கள், கனியுப்புக்கள், நார்ப்பொருட்கள், நீர் இவற்றை உள்ளடக்கி இருக்கும். ஒரு மனிதனின் ஒருவேளை உணவு, இவற்றை உள்ளடக்கிய நிறையுணவாக இருந்தால் மட்டுமே, மனிதன் நோயின்றி தகுந்த வளர்ச்சியுடன் ஆரோக்கியமாக இருக்க முடியும்.

இத்தகைய செய்தி அறியப்படாத நாட்களிலேயே எம் முன்னோர்களுக்கு நிறையுணவு எது என்பது தெரிந்திருக்கிறது. கொழுக்கட்டையில் உள்ள அரிசிமா, ஒரு சிறந்த காபோவைதரேற்று, தேங்காய்பூவில் கொழுப்பு இருக்கிறது. பயறில் விட்டமின்கள், கனியுப்புக்கள், நார்ப்பொருட்கள் உள்ளது. மற்றும் பயறு ஒரு சிறந்த புரதக்கூறு, சர்க்கரையிலும் அவ்வாறே காபோவைதரேற்று மற்றும் சிறு அளவில் புரதம், கொழுப்பு, இரும்பு, மக்னீசியம் இருக்கிறது. இவற்றை நீரில் அவித்து எடுக்கிறோம். அனைத்து கூறுகளும் அடங்கிய ஒரு நிறையுணவுதான் கொழுக்கட்டை. எனவே தான் கொழுக்கட்டை கொட்டுதல் மூலம் நிறையுணவு கொடுக்க வேண்டும் என்ற செய்தியை கட்டாய சடங்காக வைத்தனர் எம் தமிழ் முன்னோர்கள்.

இன்று நாம் என்ன செய்கின்றோம்? எம் முன்னோர்கள் கூறிய செய்தியை மறந்து, இவற்றை ஒரு சடங்காக (Function) மட்டுமே செய்கிறோம். எனது சிறு அனுபவத்தை இத்துடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். எனது தோழி, தன் குழந்தைக்கு பல் கொழுக்கட்டை கொட்டும் சடங்குக்கு என்னை வரவேற்றிருந்தார். நானும் சென்றிருந்தேன். அங்கு நடந்த சம்பவம் எனக்கு மிகவும் மனவருத்தத்தை அளித்தது. அது என்னவென்றால், கொழுக்கட்டை கொட்டும் முன், அந்தக் குழந்தை அமர்ந்த இடத்தை சுற்றி பேனா, புத்தகம், காசு என பல பொருட்களை நிரப்பி வைத்திருந்தனர். கொழுக்கட்டையை கொட்டியவுடன் அந்தக் குழந்தை கொழுக்கட்டையை நோக்கி தவழ்ந்து வந்து அதை எடுக்க முயற்சித்தது. உடனே என் தோழி, அக் குழந்தையின் கையை தட்டிவிட்டு பேனாவை எடு, புத்தகத்தை எடு எனக் கத்தினார். குழந்தை பயந்து, அழத்தொடங்கி விட்டது. இந்த சந்தர்ப்பம் சொல்லும் உண்மை என்னவென்றால், கொழுக்கட்டை கொட்டும்போது குழந்தை கொழுக்கட்டையைதான் எடுத்து சாப்பிட வேண்டும். இதை வலியுறுத்துவதற்கே இச்சடங்கு நடைபெறுகிறது. ஆனால் நாம் பிழையாக விளங்கி கொண்டு கொழுக்கட்டையை தவிர வேறு ஏதாவது எடுக்க வேண்டும் என நினைக்கிறோம். பேனாவை எடுக்கும் குழந்தை எழுத்தாளர் ஆக எதிர்காலத்தில் உருவாக போவதில்லை புத்தகத்தை எடுக்கும் குழந்தை விஞ்ஞானி ஆக உருவாக போவதில்லை. ஒரு குழந்தை எந்த துறைக்கு வர வேண்டுமோ அது பெற்றோரின் அரவணைப்பில், ஊக்குவிப்பில் மட்டுமே தங்கி இருக்கிறது. இதை பெற்றோர்கள் உணர வேண்டும். நம் முன்னோர்கள் கூறிய சடங்குகளின் அர்த்தங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

அனுதினமும் குழந்தைகளுக்கு நிறையுணவு வழங்க வேண்டும். ஆனால் இன்றைய பெற்றோர்கள், தம் குழந்தைகளுக்கு கடைகளில் கிடைக்கும் பொதி செய்யப்பட்ட உணவுகளை "ஏதாவது குழந்தை சாப்பிட்டால் போதும்" என்ற எண்ணம் தவறானது கொடுக்கிறார்கள். இதனால் ஏற்படும் தீமைகளை பற்றி சற்று ஆராய்வோம்.

நீங்கள் கடைகளில் பொதி செய்யப்பட்ட பொருட்களை வேண்டும் போது அந்தப் பொதியின் மேலுறையில் இருக்கும் காலாவதி திகதியை கவனிப்பீர்கள், விலையை பார்ப்பீர்கள் வேறு ஏதாவது பார்க்கின்றீர்களா? ஆம், என்பது உங்கள் பதிலாக இருக்க வேண்டும். கட்டாயம் பார்க்க வேண்டிய விடயம் ஒன்று உள்ளது. அது தான், சேரும் பொருட்கள் (Ingredints) இதை கவனித்து பார்த்தீர்கள் என்றால், அதில் Enumbers, அதாவது ஐரோப்ப யூனியனின் Code numbers அல்லது INS (international numbering system)ற்கு அமைவான சில எண்கள் காணப்படும். இவை பின்வருவனவற்றை குறிக்கிறது.

E 100 - 199 - Colours (நிறங்கள்)
E 200 - 299 - Preservativen (பாதுகாப்புக்கள்)
E300-399-Antioxidants xacidity reguaturs
(ஆக்ஸிஜனேற்றிகள், அமிலத்தன்மை கட்டுப்பாட்டாளர்கள்)
E400-499-Thickeners, Stabiligers, emulsifiers
(தடிப்பான்கள், நிலைப்படுத்தி, குழப்பாக்கிகள்)
E500-599-p4 regulators xanti caking agents (PH கட்டுப்பாட்டாளர்கள்)
E600 - 699 Flavour enhancers (சுவையூட்டிகள்)

இவ்வாறு E1599 அல்லது INS 1599 வரை செயற்கையாக செய்யப்பட்ட பதார்த்தங்கள் எமது உணவுகளில் சேர்க்கப்படுகிறது. இவற்றை குழந்தைகள் அதிகம் சாப்பிட்டால் தோல் நோய்கள், மூச்சு கஷ்டம், ஒவ்வாமை போன்ற பல நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. சில வெளிநாடுகளில் ஒரு சில E எண்கள் கொண்ட உணவுப் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. உங்கள் வீட்டிலிருக்கும் பிஸ்கட் பெட்டியினுள் E எண்ணை இணையத்தில் தேடிப்பார்த்தால், அவ் எண்ணுக்கு பக்க விளைவுகள் சம்மந்தமான ஆய்வுகள் செய்யப்பட்டிருப்பின், அவற்றை நீங்களே காணலாம். இதுமட்டுமல்ல, பொதி செய்யப்பட்ட பக்கெட்டின் மேலுறையில் Serving size என்று குறிப்பிட்டிருக்கும். இது எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த அளவை மடடுமே ஒரு நாளைக்கு உங்கள் குழந்தைக்கு அவசியம் ஏற்பட்டால் மட்டும் கொடுக்கலாம். அதைவிட அதிகம் கொடுக்க வேண்டாம். “அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு” என்ற முதுமொழியை நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.

கடைகளில் கிடைக்கும் நிறமான இனிப்பு பதார்த்தங்களை, மென்பானங்கள் இவற்றை தவிர்ப்பது நல்லது. இவற்றில் நிச்சயமாக அதிகளவு E/INS எண்கள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இதற்கு பதிலாக வீட்டில் தயாரித்த உணவுகளை குழந்தைகளுக்கு கொடுங்கள். மென்பானங்களுக்கு பதிலாக, பால், மோர், தேசிக்காய் தண்ணீர் (Juice) பழச்சாறுகள், செவ்வரத்தம் பூ ஜூஸ், கற்றாளை ஜூஸ் போன்றவற்றை வீட்டில் தயாரித்து கொடுக்கலாம்.

குழந்தைகளுக்கு நாம் எந்த உணவை வழங்குகிறோமோ அதற்கேற்றபடிதான், அக் குழந்தையின் நாவின் சுவையரும்புகள் விருத்தியடையும். எனவே கடையுணவுகளுக்கு பழக்கப்படுத்தினால், வளர்ந்த பிறகும் அதனையே நாடுவார்கள். இதனால் தான் மிகச் சிறு வயதிலேயே அநேகமான தொற்றாத நோய்கள் ஏற்பட்டு, ஆரோக்கியமின்றி, எதிர்கால

சந்ததியினரின் ஆயுள் குறைகிறது. குழந்தைகளுக்கு அன்றாட உணவில் கீரை சேர்க்க வேண்டும். பழங்கள், காய்கறிகள் அதிகம் கொடுக்க வேண்டும். பழங்களில் வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்படும் விலை கூடிய பழங்கள் தேவையில்லை. நமது உள்நாட்டில் விளைவிக்கப்படும் விலை குறைந்த பழங்களான வாழைப்பழம், மாதுளை, பப்பாசி, திராட்சை, கொய்யா, நெல்லிக்கனி, மா, பலா போன்ற பழங்களை தினமும் கொடுக்கலாம். உங்கள் குழந்தைகளுக்கு ஏதேனும் ஒரு இயற்கை உணவுப் பொருளால் ஒவ்வாமை இருப்பின் அதனை மட்டும் தவிர்ப்பது நல்லது.

குழந்தைகளுக்கு ஒரே உணவை அன்றாடம் கொடுத்தால் சாப்பிடமாட்டார்கள். எனவே பிட்டு செய்தால், இலைபிட்டு, காய்பிட்டு, மரக்கறி பிட்டு, ஒடியற்பிட்டு இவ்வாறாக செய்து கொடுக்கலாம். தானிய ரொட்டி, குரக்கன் களி, மொசுமொசுக்கை அடை, எள்ளுப்பாகு, உழுத்தம் களி, வரகரிசி கஞ்சி, இலைக்கஞ்சி இவ்வாறாக எம் முன்னோர்களைப் போல் மாறி மாறி இயற்கை உணவுகளை பரிமாற வேண்டும். எம் முன்னோர்கள் கூறிய பாரம்பரிய உணவு முறைகளை இன்று நாம் நவீன நாகரிகம் என்ற பெயரில் மறந்து விட்டோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் இம் முதுமொழியை எம் வாழ்வாக்க விரும்பினால் பாரம்பரிய முறைகளை பின்பற்றி வாழ வேண்டும்.

ஆரோக்கிய வாழ்வின் இரகசியம் இயற்கையான, எளிமையான வாழ்வியல் முறையாகும். இதை உணர்ந்து குழந்தைகளிடம் இதை உணர்த்தினால், ஆரோக்கியமான எதிர்கால சமூகத்தை எம்மால் உருவாக்க முடியும்.



# இன்றைய சமுதாயத்தின் நிலை



திரு. சி.ருகுணாஸ்
கிராம அலுவர்
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.

கண்ணுக்கு மையழகு கழுத்துக்கு பொன் அழகு
வியத்தகு உலகினிலே வாழ்வதற்கு எது அழகு
யுத்தத்தின் வடுக்கள் உடலிலே ஆனாலும் ஊனமில்லை மனதிலே
கையிலே போதைப் பாக்கு கால்களுக்கு இடையிலே மோட்டார் பைக்கு
இன்றைய இளைஞரின் வெளிப்பாடு இது தானே

அறுபதுடன் இருபதும் இருபதுடன் அறுபதும்
சேர்ந்திருந்து அறுவடை செய்யும் காலம் இது
சிந்திக்க நேரமில்லை எட்டிப்பார்க்க தூரமும் இல்லை
ஆனாலும் அயலவன் யாரென்று தெரியவில்லை – முந்தநாள்
வந்த முகப்புத்தகத்தில் மூவாயிரம் நண்பர்கள்

கண்டறியா நோய்கலெல்லாம் வந்திங்கு சேர்ந்திடவே
குளிசை டப்பா தான் தலைமாட்டில் தஞ்சம்
சுகருக்கு மருமகன் கொலஸ்ரோலாம்
அப்படி என்றால் – டாக்டருக்கு சம்மந்தி பணம்தானே
சமுதாய நிலை இதுதானே கண்டீர்

முதிர் கன்னி நான் என்பர் வியாபார மாப்பிள்ளைகள்
சீதனம் வேண்டாமல் கட்டுவார் யார் உண்டு
காலம் போற போக்கிலே எந்த பெண்ணுக்கும் நிலை இதுதான்
பார்ப்போர் எல்லாம் வந்து போக எத்தனை பேருக்கு தான்
தேனீர் விருந்து நான் கொடுப்பது
காலம் மாறிப போதும் பெண்கள் எம் நிலை மாறவில்லை

"இதுவல்லோ நாம் காணும் பிரபஞ்சத்தின்
இன்றைய சமுதாயத்தின் நிலையாகும்"

# சிறுவர்களின் உடல்,உள,அறிவு மற்றும் ஆற்றல் விருத்தி தொடர்பான நோக்கு


**திருமதி துளசி கேதீசன்**
முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
யாழ்ப்பாணம்.



சிறுவர்களே நாட்டின் பெறுமதிமிக்க வளமாக கருதப்படுகின்றனர். ஆகையால் அவர்களது உடல்நலம், உளநலம், சமூக மற்றும் சூழல் பாதுகாப்பு எதிர்காலத்தில் பயனுறுதி வாய்ந்த ஆரோக்கியமான பிரஜையை உருவாக்க உதவும். எனவே சமூகப் பொருளாதார அபிவிருத்தியுடன் வாழ்வதற்கு மிகவும் சிறந்த ஒருநாடாக இலங்கையை கட்டியெழுப்பும் முயற்சியின் ஒருமுக்கிய நடவடிக்கையாக சிறுவர்களுக்கு பாதுகாப்பான ஒருசமூக பின்புலத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது.

அதற்கேற்ப அரசகொள்கைகள், திட்டங்கள், மூலோபாயங்களை வடிவமைப்பதில் சிறுவர்களின் இருப்பு மற்றும் அபிவிருத்திக்கு பாதகமாக அமையும் வீட்டு வன்முறை, பாலியல் துர்நடத்தை, போசாக்கு மற்றும் சுகாதார பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல், விசேட தேவையுடைய சிறுவர்கள், சிறுவர் துஸ்பிரயோகம், துன்புறுத்தல், போதைப்பொருள் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபடுதல், நன்நடத்தை நிலையங்களில் சேர்க்கப்படுதல், குடும்பப் பிரச்சனைகளால் அனாதரவாதல் மற்றும் அங்கவீனமடைதல் போன்ற பல்வேறு விடயங்களால் அவர்களது உரிமைகளை மீறுவதற்கு காரணமாக அமையும் விடயங்களைக் குறைக்கவும் பல்வேறு வழிகளில் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

எந்தவொரு பிள்ளையின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் விரும்பத்தகாத என்பதுடன் அனுபவங்களுக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட முடியும் என்பதனால் அவற்றை தவிர்க்கும் முறைமைகள் பற்றிய அறிவூட்டல் மற்றும் முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும். வாழ்க்கையின் சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு திறன்கள் மற்றும் அறிவின்மூலம் சிறுவர்கள் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே முதலில் குடும்பத்தில் தாயின் வகிபாகத்திற்கு சமானமாக தந்தையின் பங்களிப்பையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் கர்ப்பிணியாகவிருக்கும் சந்தர்ப்பத்திலேயே சுகாதார பணிமனையூடாக முன்னெடுக்கப்படுகின்றன.



இன்றைய காலகட்டத்தில் மாறிவரும் உலகின் சவால்களுக்கு மத்தியில் ஆளுமையுடன் கூடிய பிள்ளைகளை உருவாக்குதல், சிறுவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தல், உளவியல், சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பெற்றோர்களின் திறமைகளை விருத்தி செய்தல், விசேட சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுப்பதற்கான சிறுவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல், விசேட தேவையுடைய

சிறுவர்களின் நலத்தைப் பேணல் போன்றன அரசாங்கத்தால் பலதிட்டங்கள் சிறுவர்கள் தொடர்பில் கவனமீர்க்கப்படும் விடயங்களாகக் காணப்படுகின்றன.

* ஆளுமை விருத்தி தொடர்பாக வேறு நாடுகளுடைய மாதிரி முறைமைகள் அல்லாத இலங்கைக்கு பொருத்தமான ஒரு மாதிரியை உருவாக்குதல்.
* முன்பள்ளிகள், பாடசாலை, சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை அண்மித்த பகுதிகளில் சிறுவர் ஆளுமைவிருத்தி தொடர்பாக விரிவான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை மேற் கொள்ளுதல்.
* சிறுவர்களுக்கான அழகியல் வெளிப்பாடுகளை நடாத்துதல்.
* சிறுவர்களுக்கு யோகா மற்றும் தியானம் பயிற்றுவித்தல்.
* கல்வி கற்பதற்காக அன்றி மனிதத்துவத்தையும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையை வளர்க்கும் விதமாக கற்பித்தல்.
* துஸ்பிரயோகம் தொடர்பாக பிள்ளைகளுக்கு வீட்டிலும் பாடசாலையிலும் அறிவுறுத்தல்.
* சீர்திருத்த பள்ளியிலுள்ள சிறுவர்களுக்கும் சிறைச்சாலையிலுள்ள குற்றவாளிகளுக்கும் உள மருத்துவ புனர்வாழ்வுக்கும் ஆலோசனைக்கும் உட்படுத்தல்.
* சிறுவர்களின் இரசனை வெளிப்பாட்டினை தூண்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
* சிறுவர்களுக்குரிய மகிழ்வக நிலையங்கள் / சிறுவர் நேயச் சூழலினை ஏற்படுத்தல்.

மேற்படி பல்வேறு தளங்களில் முன்னேறியதுடன் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வினூடாக மறைக்கப்பட்ட பிரச்சனைகள் அதிகளவில் வெளிப்படுத்தப்படுகின்றது. இன்றைய சிறுவர்கள் கல்வி உலகில் போட்டி போட வேண்டியுள்ளதனால் தமது சிறுபராயத்தில் அனுபவிக்க வேண்டிய சிறுசிறு சந்தோசங்களையும் இழந்து தனியார் வகுப்புக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதனால் குடும்பத்தை விட்டு தனிமைப்படுத்தப்படுகின்றனர். மேலும் இன்றைய தொழில்நுட்பவியல் உலகில் பெற்றோர் தொழில்நுட்ப சாதனங்களினூடாக குடும்பப் பிரிவுகள் குடும்பப் பிரச்சனைகள் போன்றவற்றிக்கு உட்படுவதனால் இதன் பிரதிபலனாக சிறுவர்களே உளவியல் பிரச்சனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தற்போதைய சிறுவர்களை பெற்றோர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத பொழுது நவீன தொடர்பு சாதனங்களை பிள்ளைகளிடம் கையளித்து பிள்ளைகளை திருப்திப்படுத்த முனைகின்றனர். இதனால் மிக இலகுவாக பிள்ளைகள் பிறழ்வான நடத்தைக்குள் உள்வாங்கப்படுவதுடன் சமூகரீதியிலான ஊடாட்டத்தைக் குறைத்துக் கொள்கின்றனர். மேலும் சிறுவர்கள் பெற்றோரிடம் எதிர்பார்ப்பது பொருட்களை மட்டுமல்ல பெற்றோர் தம்மிடம் கூடுதலான நேரத்தை செலவழிக்க வேண்டுமென்றே விரும்புகின்றனர். ஆனாலும் தற்போதைய சூழலில் சிறுவர்கள் சமூகத்தை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு மறுக்கப்படுவதனால் வளர்ந்து வரும் பருவத்தில் சமூகத்துடன் ஒன்றித்து வாழமுடியாது பல்வேறு விலகல் நடத்தையில் ஈடுபடுவதற்கும் உள ரீதியான தாக்கங்களை நாமே சிறுவர்களுக்குக் கற்பிக்கின்றோம்.

மேற்படி புதிதாக மேற்கிளம்பும் பிரச்சனைகள் பண்பாட்டுக் கையாள்கை இல்லாது மேற்படி இலக்கினை எட்டமுடியாது என்பதே நிதர்சனமான உண்மையாகும். ஏனெனில் எமது

முன்னோர் தமக்கு ஏற்படக்கூடிய உளசமூக நெருக்கீடுகளைக் கையாள்வதற்குப் பல்வேறு விதமான உத்திகளையும் வழி முறைகளையும் அறிந்து அதனூடாகத் தமது உளசமூகப் பிரச்சனைகளிலிருந்து விடுபட்டிருக்கின்றார்கள்.

சமூகப்பண்பாட்டுச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை அவை நம்பிக்கைளை வளர்க்கவும். விழுமியங்களை மதிக்கவும், விட்டுக் கொடுப்புக்களை மேற்கொள்ளவும் வழிசமைக்கின்றன. எனவே பண்பாட்டின் அடியாக வருகின்ற சமூக ஆதரவுக் காரணிகளான சமூக விழாக்கள், பொதுவான சமயச் சடங்குகள் வலுப்படுத்தப்பட வேண்டும். மேலும் அர்த்தமற்ற வேடிக்கைகளுக்கு (குடி மற்றும் போதைப்பொருள் பாவித்தல்) இடமளித்தல் சிறுவர்களை பிழையான பாதைகளில் இட்டுச்செல்லும். அர்த்தமுள்ள விழாக்களும் சடங்குகளும் புதுப்பிக்கப்படுவதால் இனம், சுற்றம், உறவு, நண்பர்கள் சந்திப்புக்கள் நிகழும். இவர்கள் சந்தித்து உறவாடுவதால் கிராம ஒற்றுமையும் உதவி செய்யும் இயல்புகளும் வளர்கின்றன.

எனவே சிறுவர்கள் எமது பாரம்பரியமாக, மரபுரீதியாக வந்த சமாளிப்புத் திறன்களைத் தேடிவிளங்கி, சமூகச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கும், விழுமியங்களை நம்பிக்கை முறைமைகளை பெருக்குவதற்கும், சமூக ஒத்திசைவுத் திறன்களை கூட்டுவதற்கும் அறநெறி மற்றும் மறைக்கல்வி தொடர்பில் மாணவர்களை உள்ளீர்த்தலில் அரும்பாடுபடுதல் என்பது சமூக பொருண்மையாகும்.

சிறார்களுக்கு வாழ ஒரு இல்லத்தினை பெற்றுக்கொடுங்கள். ஆயினும் அவர்களின் ஆன்மாவை அதற்குள் அடைத்துவிடாதீர்கள். ஏனெனில் அவர்களது ஆன்மா உங்களால் அடைய முடியாத எதிர்காலம் எனும் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என கலீல் ஜிப்ரான் எனும் சிந்தனையாளர் நூறு வருடங்களுக்கு முன்னர் குறிப்பிட்டுள்ளார். பெரியவர்கள் இன்று தமது எதிர்பார்ப்புக்களுக்காக சிறார்களின் உலகத்தை சீர் குலைக்கின்றனர் எனும் உண்மை பார்க்கவும், கேட்கவும் கிடைக்கும் அளவிற்கு நாம் துர்ப்பாக்கியசாலிகளாகி இருக்கும் பின்னணியில் அவரது அந்த தத்துவக் கோட்பாடுகளை நினைவு கூர்ந்து அது தொடர்பாக கலந்துரையாட வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது.



ஒரு சமூகத்தில் சிறுவர்களுக்கான சூழலே, அச்சமூகம் பண்பாடு மிக்க சமூகமா? என்பதனை தீர்மானிப்பதற்கான சிறந்த அளவுகோலாகும். வளர்ச்சியடைந்த கலாசார சமூகங்களில் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கு முன்னரே அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான பௌதீக மற்றும் ஆன்மீக சூழலை உருவாக்கிக் கொள்ளப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது.

பிரதேசத்தின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள எமது சிறுவர்களை பாதுகாப்பாகப் பேணி வளர்ப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுடன் அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதுடன் சிறுவர்கள் சுதந்திரமாக கனவு காணவும், செயற்படவும் ஆரோக்கியமான, பாதுகாப்பு மிக்க இல்லங்கள், பெற்றோர்கள், பாடசாலைகள் உள்ளிட்ட ஏனைய சமூக அமைப்புக்களிலும் இயல்பாகவே ஏற்படுத்திக் கொடுத்தல் பெரியவர்களாகிய எமது கடமை மட்டுமின்றி பொறுப்புமாகும்.



# இன்பமொழி

திருமதி. நசீரா அப்துல் அஸீஸ்
கலை இலக்கிய ஜோதி
முஸ்லீம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்



கன்னி நாடாம் இலங்கையதில்
கானம் பாடும் யாழ் மண்ணில்
மனம் கவரும் தமிழ் மொழியதால்
பிரகாசிக்கின்றதே மனித மனங்கள்!

இனமத வேறுபாடு களைந்தவர்களாக
வேற்றுமையில்லா ஒற்றுமையில் உயர்ந்தவர்களாக
யாழ்பாடி நாடி காணும் கதாநாயகர்களாக
கலைதேடி கலாசாரம் பேணுவதும் மொழி வழியே!

அன்பால் அரவணைத்த மொழியதால்
பாசத்தால் படரவைத்த மொழியதால்
நேசத்தையே சுவாசித்து சுகந்தம் வீசி
தேசத்தையே ஒன்றுசேர்த்து வாழ்வித்த மொழியே!

தமிழின் அமுதில் இனிமை சேர்த்து
தமிழ்த்தாயின் நிழலில் குளிர்காய்ந்து
தவறுகள் குறைகள் குதர்க்கங்கள் களைந்து
தவறியும் தவறாது தலைநிமிர்ந்தே நிற்கும் மொழியே!


அருணாவும் கருணாவும் பரீணாவும்
பெருமையுடன் கைகோர்த்து மகிழ்வதும்
கலந்துரையாடி ஒன்று கூடி விளையாடுவதும்
தமிழ் எனும் இனிமை மொழியதால்தானே?

பிரிவினை வாதங்கள் வர்க்க பேதங்கள் போக்கியே
வந்தாரை வாழவைக்கும் புகழது பூத்தே
பூஜ்ஜியமில்லா ராஜ்ஜியத்தை தக்கவைத்து
தடுமாற்றங்களை தவிர்த்திடுவதும் மொழியே

வழிவந்த தாய்மொழியே நீ
வலி தரும் வல்லூறுகளை களைந்தாய்
பழி போடும் பாதகர்களை வெறுத்தாய்
விழிமேல் வழிவைத்தே ஒருமைப்பாடு வளர்த்தாய்!

இதனாலே நாம் இனமத பேதமற்றவராய்
இந்து இஸ்லாம் கிறிஸ்தவ இணைப்பினராய்
யாழ் மண்ணதன் மகிமை போற்றியே
யாழ்பாடிகளாக வளர்வோம் என்றென்றும்!

போற்றுவோம் தமிழ்தாய் மண் வழியதை
ஏற்றுவோம் யாழ்பாடி எனும் சுடர் விளக்கதை
தொடருவோம் தமிழ்மொழி வளர்ப்பதை
வாழட்டும் தமிழ் வளரட்டும் நம் இன்பமொழி!



# நானிலம் போற்றிடும் நல்ல வாழ்வுக்கு.....!

கலாபூஷணம்
தெய்வத் தமிழ்ச்சுடர்
**இராசையா ஸ்ரீதரன்**



"அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார், ஆகவே புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி கிடைத்தற்கரிய ஒரு புண்ணியப் பேறாகும். இந்த மனிதப்பிறவியைப் பெற்றிருக்கும் நாம் அதனை நல்ல முறையிற் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாலு பேர் மதித்து நானிலம் போற்றிடும் நல்ல வாழ்க்கையை நாம் வாழ்ந்து காட்ட வேண்டும்.

நல்ல பழக்க வழக்கங்களையும் நற்பண்புகளையும் நல்ல கல்வியறிவையும் கொண்டவர்களாய் எல்லோரும் நம்மை விரும்பி நிற்கும் அளவுக்கு பெருமிதத்துடன் வாழ்ந்து எல்லோருடைய மனங்களிலும் நிறைந்து விளங்க வேண்டும். எம்முடைய வாழ்க்கையானது முன்னுதாரணமாய் நிற்பதோடு பலரும் விரும்பி வரவேற்கும் தன்மையுள்ளதாகவும் இருக்க வேண்டும். "பெற்றாளே பெற்றாள் பிறர் வாழ்த்தப் பெற்றாள்" என்றிருக்க வேண்டுமேயல்லாமல் "பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாள்" என்று இருக்கக் கூடாது.

இப்பரந்த நிலவுலகின் கண்ணே பரந்த நல்வாழ்க்கையில் உண்மை, நேர்மை, பொறுமை, அன்புடைமை அனைத்துமே நிறைந்திருக்கவேண்டும். பொய், களவு, பித்தலாட்டம், ஏமாற்றம் என்பன துளிகூட இருக்கலாகாது. மனித வாழ்க்கையின் மகத்துவம் மற்றவர்களுக்கு விளங்கத்தக்கதாக வாழுதல் மிகவும் அவசியமாகும்.

சமூகத்திலே நாலுபேர் மதிக்க நாம் வாழுதல் வேண்டும். உண்மை நிறைந்த நல்ல வாழ்க்கையிலே ஆன்மீக நாட்டமும் கடவுள் நம்பிக்கையும் கட்டாயமானது. மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவே கூடாது. பிழை செய்கிறோம் என்பதை நன்கு தெரிந்து கொண்டே வாழக்கூடாது. மற்றவர்களுக்கு நாம் உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமலேனும் தொல்லை கொடுக்காமலேனும் வாழ்தல் வேண்டும்.

"அடடா! மனித உருவிலே இருந்துகொண்டு மிருகமாக வாழ்தல் கூடவே கூடாது. மனுநீதி என்பது கட்டாயமாகப் பேணப்படவேண்டும். அந்த நீதி இம்மியளவும் பிசகக் கூடாது. அநீதி அறவே நீக்கப்படவேண்டும்.

மனித வாழ்விலே மானிடப்பண்பு மிகவும் அவசியமானது. ஒரு மனிதனுடைய இவ்வுலக வாழ்க்கை நேர்மையுடனே மிகவும் உண்மையானதாக இருத்தல் வேண்டும். எவ்வளவு தான் துன்பம் வந்தாலும் எவ்வளவுதான் கஷ்டம் வந்தாலும் பொய் பேசாமல் வாழப்பழக வேண்டும். உண்மையும் நேர்மையும் கட்டாயமானது. மனித நேயம் கவனிக்கப்படல் வேண்டும். மனிதன் மனிதனாக வாழ மானுடம் தானாக மலரும். அரிச்சந்திர மகாராஜன் பொய் பேசாமலே வாழ்ந்து காட்டினான். அவனுடைய வாழ்க்கையிலே அவனுக்கு எத்தனை துன்பம்? நாட்டை

இழந்தான், சொந்த மனைவியை இழந்தான், மகனை இழந்தான், கடைசியில் தன்னையே இழந்தான் மயானம் காக்கும் மன்னவனாக வந்து கஷ்டங்கள் பலவற்றை அனுபவித்தான்.

இவ்வளவு நடந்தும் அவன் சளைக்கவில்லை. தன்னுடைய கொள்கையிலேயிருந்து மாறவேயில்லை. உண்மை ஒன்றையே மதித்து நடந்தான். கஷ்டங்கள் வந்தாலும் காலங்கள் மாறினாலும் கொண்ட கொள்கையை மாத்திரம் விடவில்லை. அதுதான் உண்மையான வாழ்வு.

எமது உடம்பிலே உயிர் இருக்கும் பொழுதே நல்லனவற்றையெல்லாம் செய்து விடவேண்டும். ஏனெனில் எமது வாழ்க்கை நிலையில்லாதது. நீர்க்குமிழிக்கு நிகரானது. உயிர் பிரிந்து விட்டால் உடம்புக்கு மதிப்பேயிராது. ஆகவே உயிரோடு இருக்கும்போதே மற்றவர்க ளுக்கு நல்லவற்றைச் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். மனித வர்க்கம் இவ்வுலகிலே செய்ய வேண்டியது புண்ணியம், செய்யத் தகாதது பாவம்.

"புண்ணியமாம் பாவம் போம் போனநாள் செய்தவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்"

என்பதற்கிணங்க புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் ஒவ்வொரு வரும் பாவம் செய்யக்கூடாது. புண்ணியமே செய்யவேண்டும். மறந்தும் கூட மற்றவர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. உண்மையான உலக வாழ்விலே மகிழ்ச்சியைக் காணுதல் வேண்டும்.

மனித மனங்கள் மென்மையானவை. அந்த மென்மையை நாம் பக்குவமாய் பேணுதல் வேண்டும். வன்மையான சொற்களைப் பிரயோகித்து அந்த மென்மையிலே வடுக்களைத் தோற்றுவிக்கக்கூடாது. மனிதர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் எப்போதும் எந்நேரமும் இன்சொல் பேசுதல் வேண்டும்.

"யாகாவாராரினும் நா காக்க" என்பதை நினைவிற் கொண்டு எங்களுடைய நாக்கினாலே இனிமையான சொற்பிரயோகத்தை மட்டுமே மேற்கொள்ளவேண்டும். மற்றவர் மனம் புண்படும் படி பேசக்கூடாது. இறைவன் தந்த நாக்கினாலே நன்மை பயக்கக் கூடிய இனிய வார்த்தைகளையே பேசுதல் சிறப்பைத் தரும். எக்காரணங்கொண்டும் நாக்கினாலே தீமை ஏற்படத்தக்கதாகவோ மனம் நோவடையத் தக்கதாகவோ பேசுதலாகாது. "ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்பதை நாம் கருத்திற்கொண்டு மற்றவர்களுக்குத் தீராத அதே நேரத்தில் மாறாத துன்பத்தைத் தரக்கூடியதாக வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளக்கூடாது. மறந்துங்கூட வன்சொற் பிரயோகம் ஆகவே ஆகாது.

இறைவன் ஒருவன் இருக்கின்றான். அவனுடைய பார்வையில் நாம் தப்பவே முடியாது. அவனுக்குக் கணக்குக் கொடுத்து நடக்க வேண்டியது தலையாய கடமையாகும். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய இறைவனது படைப்பில் எல்லா ஜீவராசிகளையும் ஒன்றாகவே மதிக்கவேண்டும். எவ்வழியிலும் துன்பங்கள் உருவாக நாம் காரணமாயிருக்கக் கூடாது.

"இருட்டுக்கும் பார்க்கின்ற விழி இருக்கும். சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்." என்பதை நினைவிற்கொண்டு நமது நேரான வாழ்க்கையில் சீரான பாதையைத் தெரிவுசெய்து நேர்வழியிலே நடக்க நாம் நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் வாய்மையிலிருந்து பிறழக்கூடாது. உண்மையாகவே வாழ்ந்து, உண்மைக்காகவே

உழைத்து, உண்மையான வாழ்விலே சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும். மற்றவர்கள் மனம் நோகச் செய்தால் அந்தப்பாவம் பொல்லாததாகும். ஆகவே சிறப்பான வாழ்வுக்கு நம்மை நாமே தயார்படுத்தவேண்டும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", மாதா பிதா குரு தெய்வம்", தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை", தந்தை சொல் மிக்க மந்திரமில்லை", என்றெல்லாம் படித்துவிட்டு எம்மைப் பாடுபட்டுப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய அப்பாவையும் அம்மாவையும் கவனிக்க முடியாதென்று முதியோர் இல்லத்திலே கொண்டு போய் விடுவது முறையாகுமா?

அதைப் போலக் கேடு கெட்ட செய்கை வேறெதுவுமில்லை. பெற்று வளர்த்த தாய் தந்தையரைப் பார்க்க முடியாதென்று விடுவது எவ்வளவு பிழையான செயல்? இறுதி மூச்சு இருக்கும் வரைக்கும் பார்க்க வேண்டியது தலையாய கடமையாகும். அவர்களுடைய மனங்கோணாதபடி நடந்து கொள்ளவேண்டும். சிறிதளவாவது உள்ளம் நோக விடக்கூடாது. சிரித்த முகத்துடன் எந்நேரமும் புன்னகைத்தவாறு இருக்க நாம் அவர்களுக்கு ஒத்துப்போக வேண்டும்.

"அடடா! இது என்ன கரைச்சல்?" என்று சொல்லி மனக்கவலையுடன் வாழும் நிலைக்கு விட்டுவிடக்கூடாது. என்னுடைய பிள்ளைகள். என்னை நன்றாகப் பார்க்கின்றார்கள்; எனக்கு ஒரு குறையும் இல்லை என்று அவர்கள் கூறுமளவுக்கு நாம் நல்லவர்களாக நடந்து கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் மனிதப்பிறவி எடுத்த பயனைப் பெறமுடியும். மனித உருவில் உலாவருகின்ற நாம் எல்லோரும் உண்மையிலேயே மனிதர்களாக வாழ்ந்தால்தான் பயன் உண்டு. இல்லையேல் அது வீண்தான்.

இப்பரந்த நிலவுலகின் கண்ணே வாழ்கின்ற மனிதர்களுக்கு "பண்பாடு" என்பது மிகவும் அவசியமானதாகும். ஆலயத்துக்குச் செல்லும் போது முறைப்படி கலாசார உடையணிந்து செல்லுதல் வேண்டும். உத்தியோகத்துக்குப் போகும் போது நீளக்காற்சட்டையும் மேல் சட்டையும் அணிந்து போகுமாப்போலக் கோயிலுக்குப் போகும் போதும் காற்சட்டை, சேட்டுடன் போகக்கூடாது. எங்கள் தமிழ் கலாசாரப்படி ஆண்கள் வேட்டி சால்வையுடனும் பெண்கள் சேலையுடனும் போவதே முறையாகும். அதை விடுத்து எங்களுடைய வசதிக்கு ஏற்றாற்போல ஆடையுடுத்திச் செல்லக்கூடாது. எமது சம்பிரதாயப்படி பாரம்பரிய கலாசார உடை கட்டாயமானதாகும். இதை நாம் கட்டாயம் கவனத்திற் கொள்ளவேண்டும்.

நாட்டைக்காவல் செய்யும் பொலீஸ்காரர் தமது கடமை நேரத்திலே சீருடைய ணிந்தே பணியாற்றுகின்றார்கள். அப்போது தான் அவர்கள் பொலீஸ்காரர்கள் என்று தெரியும். இல்லையேல் பொது மக்களுக்கு விளக்கம் சொல்ல முடியாது. அதே மாதிரித்தான் எங்களுடைய ஆலய வழிபாடும் என்பதை நன்றாக மனத்திலே ஊன்றிப் பதித்து கொள்ளவேண்டும்.

ஆலய வழிபாட்டுக்குச் செல்லும்போது ஆடம்பரம் தேவையில்லை. ஆன்மா லயப்படும் இடம் தான் ஆலயம். அந்த வகையில் ஆலயத்திலே அமைதியும் சுத்தமும் கட்டாயமாகப் பேணப்படவேண்டும். ஒருவரை ஒருவர் பார்த்து சுகம் கேட்பதும் வீட்டு நடப்புகளை அலசி ஆராய்வதும் வருமானம் பற்றிக் கலந்துரையாடுவதும் கோயிலிலே செய்யத்தகாத குற்றங்களாகும். கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்று நம் மன்னோர் சொல்லி வைத்ததை நாங்கள் தவறாக விளங்கிக்கொண்டு பிழையான நெறிமுறையிலேயே வாழ்ந்து

கொண்டிருக்கின்றோம். இது எவ்வளவு தூரம் தவறானது என்பதை நாம் புரிந்துகொள்ள மறுக்கின்றோம். தவறு இழைப்பது மனிதனுக்குச் சகஜம் தான். அதற்காகச் செய்வது எல்லாவற்றையுமே "சரி" என்று ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வுலக வாழ்க்கையிலே "இப்படித்தான் வாழவேண்டும்" என்று நமது மூதாதையர்கள் வாழ்ந்து காட்டிப் போயிருக்கின்றார்கள். அவர்கள் காட்டிய பாதை நேரான சீரான நல்ல பாதையே. அதை மட்டுமே நாங்கள் மறந்து விடுகின்றோம். எப்படியும் வாழலாம் என்று வாழத்தொடங்கி விட்டோம். இதை எந்தப் பட்டியலில் சேர்ப்பது? "கந்தபுராண கலாசாரம்" என்று வாயளவில் சொல்லிக் கொள்கின்றோமே தவிர எம்முடைய வாழ்க்கையில் கைக் கொள்வது கிடையவே கிடையாது. எவ்வளவும் இல்லை என்றும் சொல்லலாம்.

இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் என்று இருக்கின்ற எல்லாமே மனித வாழ்க்கைக்கு வழிகாட்டிகளே! மனிதன் என்று சொன்னால் அவன் மனிதனாக இருக்க வேண்டும். மனுதர்ம நீதியிலிருந்து இம்மியளவும் பிசகக்கூடாது. மனுநீதி தவறி வாழ்ந்தால் அது வாழ்க்கையல்ல. "சைவம் சைவம்" என்று சொல்லிக்கொள்கின்றோமே! நாங்கள் எல்லோரும் உண்மையில் சைவர்களாக வாழ்கின்றோமோ? சிந்தித்துப் பாருங்கள். சீ வெட்கக்கேடு, வெளியில் சைவசமயம் என்று சொல்லிக்கொண்டு நாள் தவறாமல் நேரந்தவறாமல் மச்சம், மாமிசம், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழிஇறைச்சி, மீன், நண்டு என்று ஒன்று விடாமல் எல்லாவற்றையும் ருசி பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

"நல்லூர் கந்தசுவாமி கோயில் கொடியேறியிருக்கின்றது அந்த உற்வச காலத்தில் நாம் மாமிசம் புசிக்கமாட்டோம்" என்று இறைச்சி காய்ச்சுகின்ற கறிச்சட்டி எல்லாவற்றையும் கவிழ்த்து மூடி வைத்து விட்டு, "எப்படா கொடி இறங்கும்?" என்று காவல் இருக்கும் நம்மவர் மத்தியிலேதான் நாங்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எமது சைவசமய சின்னமாகிய விபூதியை எங்களில் எத்தனை பேர் விரும்பிப் பூசுகின்றனர்? விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு வீட்டிலே இருப்பவர்களைப் பிரித்து விடலாம்.

"வி" என்றால் மேலான "பூதி" என்றால் செல்வம் என்று கருத்து ஆகவே மேலான செல்வமாகிய விபூதியை நாங்கள் நெற்றியிலே அணிவதற்கு தயங்குகின்றோம். "நீறில்லாத நெற்றி பாழ்" என்பது ஔவையின் திருவாக்கு. ஆகவே நாங்கள் படித்திருக்கின்றோமே தவிர செயலில் இல்லை. "படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோயில்" என்பது சரியாகத் தான் இருக்கின்றது.

உண்மையான மானிட நேயமுள்ள பண்பு நிறைந்த வாழ்க்கையிலே இவற்றை யெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லோரும் செய்கின்றார்கள் என்று நாங்களும் செய்தால் அதில் அர்த்தமேயில்லை. ஒருவன் கழுதையின் மயிரைப்பிடுங்கிப் போட்டுக் கும்பிட்டானாம். பாவம் கழுதையில் மயிரே இல்லாமற் போய் விட்டது. காரணத்தைச் சிந்திக்காது வெளிப்பூச்சிலே மயங்குவது இனியாவது விட்டுவிட வேண்டும். எமக்கென்று ஒரு கொள்கை இருக்க வேண்டும். ஓர் இலட்சியம் இருக்க வேண்டும். ஒரு நோக்கம் இருக்க வேண்டும். அதைப் பின்பற்றியே நமது வாழ்க்கைப் பணயம் தொடரவேண்டும்.

ஈழமணித் திருநாட்டில் இன்று நடைபெறுகின்ற எத்தனையோ விடயங்கள் நீதிக்குப் புறம்பானவையாகவே காணப்படுகின்றன. இதற்கு என்ன காரணம்? பெற்றோரின் வளர்ப்புத்தான். நல்ல முறையிலே நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்து நீதி, நியாயம், உண்மை, நேர்மை என்பவற்றைப் போதித்து வளர்க்காமையே இந்நிலைக்கு மூல காரணமாக அமைந்துள்ளது.

நாம் செய்கின்ற காரியம் பிழையானது என்று உணர்ந்து விட்டால் அதைச் செய்யக்கூடாது. வாள் வெட்டுக் கும்பல்கள் தலையெடுத்து வன்முறைகள் அதிகரிக்கப் பெற்றோர்களின் கவனக்குறைவே முன்னிற்கின்றது.

எங்களுடைய பிள்ளைகளுக்கு, "இது சரி, இது பிழை" என்று பிரித்தறியும் பகுத்தறிவை நாம் தான் வளர்க்கவேண்டும். உண்மைக்குப் புறம்பான விடயங்களை நாம் செய்யலாகாது என்ற உணர்வை ஏற்படுத்துவதே பெற்றோரின் கடமை. புடோல் கொடி நட்டால் புடலங்காய்தான் கிடைக்கும். வேறு எதுவும் கிடைக்கமாட்டாது. நாம் எதை விதைக்கின்றோமோ அதுதான் எமக்குப் பயனாகக் கிடைக்கும். தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான். இதில் எள்ளளவும் மாற்றம் வர வாய்ப்பில்லை.

எமது வாழ்நாளில் மனச்சாட்சிக்குப் பயந்து நடக்கவேண்டும். அதற்கு விரோதமாக நடக்கவே கூடாது. உலகத்தில் நீதி நியாயம் பார்க்காது எதையுமே செய்யலாகாது. நாமம் சந்தோஷமாக வாழவேண்டும். அதே நேரத்தில் மற்றவர்களும் மகிழ்ச்சியோட இருக்கவேண்டும். இதுதான் வாழ்க்கையின் நடைமுறை. இதனைப் பசுமரத்தாணிபோல மனதிலே பதித்துக் கொள்ள வேண்டும்.

மனிதனாகப் பிறந்தவன் எதையாவது சாதிக்கவேண்டும். மனித உடம்பு அழிவதற்கு முன்னதாக நல்லது எதையாவது செய்து விடவேண்டும். நாயும்தான் வயிறு வளர்க்கின்றது. அது போன்று நாமும் இருந்தால் அதற்கும் எமக்கும் என்ன வித்தியாசம்? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒவ்வொருநாளும் பொழுது மறைந்து இரவு விடிகின்றது. எமது வாழ்நாள் வீணே கழிகின்றது. போன நாள் மீண்டு வரப்போவதில்லை. கலண்டரில் திகதி மாறமாற எமது வாழ்நாளும் குறைந்து கொண்டே போகும்.

இவ்விடயத்தை நாங்கள் சிந்தித்துப் பார்ப்பது கிடையாது. ஒவ்வொரு நாளும் இரவு வந்து மறுநாள் கிழமை மாறுகின்றது. இப்படியே நிகழ நிகழ எம்முடைய வாழ்க்கையும் மாறிக் கொண்டே போகிறது. ஏதோ இருக்க வரம் பெற்று வந்தது போல எமது நடத்தைகள். சீ! வெட்கம் வெட்கம். சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணங்களே கிடையாது. மற்றவர்களை எப்படியும் ஏமாற்றிப் பணம் பறிக்கலாம் என்று சிந்திக்கும் தீய எண்ணம் முதலில் விலக வேண்டும். மனித மனம் பண்பாடுடன் நல்லதாக மாறவேண்டும். நான் மாத்திரம் வாழ்ந்தால் போதும் என்று எண்ணாமல் எல்லோரும் வாழ்தல் வேண்டும் என்ற பரந்த எண்ணம் எமக்கு வரவேண்டும். உள்ளம் பண்பட்டால்தான் உதடு பண்படும். நல்ல வார்த்தை வரும். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" இந்த வாக்கியத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்தனைய உயர்வு"

என்ற குறளுக்கமைய நாம் வாழ்தல் வேண்டும். ஒரு தாமரைத் தடாகத்திலே தாமரைப்பூக்கள் பூத்திருக்கின்றன. அந்தப் பூக்களின் தண்டானது அந்த தடாகத்திலுள்ள தண்ணீரின் அளவாகவே உயர்ந்து நீண்டு காணப்படும். அதே போலத்தான் ஒரு மனிதனின் உள்ளம் எப்படியிருக்கிறதோ அதுமாதிரியே அவனுடைய வாழ்க்கையும் இருக்கும்.

இந்த விடயத்தையும் புனிதப்பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்தவர்கள் மனதிலே பதித்துக்கொள்ள வேண்டும். இவ்வுலகத்திலே நாம் உயிர் வாழுங்காலம் மிகவும் குறைவானதே. அதற்குள் செய்யவேண்டிய நல்ல காரியங்களை எல்லாம் நாம் செவ்வனவே செய்து விடவேண்டும். நாம் வாழ்ந்ததற்கு அடையாளமாக எதையாவது ஆவணப்படுத்த வேண்டும். சும்மா வெறுமனே பிறந்து வளர்ந்து இறந்து போவதில் எந்தவித அர்த்தமுமில்லை. நாங்கள் இங்கு வாழ்ந்ததால் நன்மைகள் கிடைத்தன என்று நாலுபேர் புகழ்ந்து பேசுதல் வேண்டும். அப்படிப் பேசினால்தான் நாம் பூமியில் வாழ்ந்ததற்கு ஓர் அர்த்தம் இருக்கும். உண்மையான நிலைப்பாட்டால் உத்தமப் பண்புகள் வெளிப்படும். அதன் பலாபலனும் பயனுள்ளதாக அமையும்.

மனித மனதைக் குரங்கு மனம் என்று சொல்வார்கள். குரங்கு மரத்துக்கு மரம் தாவித் தாவிப் பாய்ந்து கொண்டேதான் இருக்கும். ஒரு நிலையிலிருக்காது. குரங்கு பாய்வது போல மனித மனமும் அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டேயிருக்கும். “அலை பாயுதே என்மனம் அலை பாயுதே” என்று பாடலும் இருக்கின்றது. மகாத்மா காந்திஜியின் மேசையிலே மூன்று குரங்குப் பொம்மைகள் இருக்குமாம். அவற்றில் கண்களை ஒன்று கரங்களால் மூடிய வண்ணம் இருக்கும். இன்னுமொன்று காதுகளைத் தன் கரங்களால் மூடிய வண்ணம் இருக்கும். மற்றொன்று வாயை மூடியபடி இருக்கும். இதன் தாற்பரியம் என்னவென்றால் தீயவற்றைக் கண்களால் பார்க்காதே! தீயவற்றைக் காதுகளால் கேட்காதே! தீயவற்றையெல்லாம் வாயினால் பேசாதே என்பதாகும்.

மானுட வாழ்க்கையில் மங்களம் பொங்கிடவும் சுபீட்சம் மலர்ந்திடவும் மகிழ்ச்சி ஓங்கிடவும் நாங்கள் தான் வழி சமைக்க வேண்டும். தீய கொடூர எண்ணங்கள் மறைந்து நல்ல தூய எண்ணங்கள் வளர்வதற்கு எங்களை நாங்களே தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். உள்ளத்திலே கள்ளங்கபடம் அறவே நீங்கி உண்மையும் நேர்மையும் துளிர்விடவேண்டம். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாமல் வாழப் பழக வேண்டும். உத்தம நண்பர்கள் பக்குவமாய்ப் பழகக் கிடைக்க வேண்டும். பிறர் மனை நோக்காத நல்லெண்ணம் வரவேண்டும். நேர்மை நிறைந்த சீரான வாழ்க்கையை நாம் வாழவேண்டும் என உறுதியான சபதம் எடுத்துக்கொள்ளவேண்டும். பிரதிக்ஞை மாறாமல் எந்நேரமும் உண்மையே பேசவேண்டும்.

இத்தனையும் எமக்குக் கிடைத்து விட்டால் வேறு எதுவுமே தேவையில்லை. மானுடம் வென்றுவிடும். மதி நுட்பம் வளர்ந்து ஒளிவீசிப் பிரகாசிக்கத் தொடங்கிவிடும். சமூக நலமும் உத்தமப் பண்பும் தானாகவே பிறந்துவிடும். மனித சமுதாயம் நல்லதாகவே உருவாகி நாலுபேர் மதிக்கின்ற நல்ல வாழ்க்கையும் கிடைத்துவிடும். இது எப்போது நிறைவுபெறும். பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்



# தாய் நாடு

**திரு. பெ. ஸ்ரீகந்தநேசன்**
எழுத்தாளர் - ஆய்வாளர்

தாய்க்கு நிகர் தாய் நாடு தாய்மைக்கு நிகர் தாய்
தரணியில் தாய்க்கும் தாய் நாட்டுக்கும் கீர்த்தி ஏராளம்
சிங்கள, தமிழ், முஸ்லிம் – மக்களின் வாழ்விடம்
இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவத்தின் – உறைவிடம்
தமிழ், சிங்கள மொழிகளின் – பண்பாட்டு உறவிடம்
மகாவலியின் மகிமை பேசும் நீர் வளத்தின் ஊற்றிடம்
தணியாத மூவின கலாசாரத்தின் உறங்கிடம்
சோதனையில் சாதனை செய்பவனை படைக்கும்
பூமித்தாயின் புனிதம் தாய் நாடு
சிந்தனையாளர்களை உருவாக்கும் கல்வித்தாயின்
சுவர்ணம் தாய் நாடு
செல்வத்தைக் கொழிக்க வைக்கும் செல்வத்தாயின்
நித்திலம் தாய் நாடு
வீரனையும் வீராங்கனையையும் உருவாக்கும் வீரத்தாயின்
முத்து தாய் நாடு

கருவில் சிசுவிற்குக் கூட தாய் நாட்டின் மகிமை ஊட்டப்படுதால்
தாம் பிறந்த நாட்டை எல்லோரும் தாயின் உயிராக்குவர்
தாய் நாட்டையும் தாய் மொழியையும் தரக் குறைவாக
உணர்பவர்கள் வாழ்வில் நிதமும் நித்திய துன்பத்தில் உழமுவர்
ஆண்டான் – அடிமை என்று தர வேறுபாட்டுடன்
தாய் நாடு, மனிதர்களை நோக்காது
எல்லோரையும் தன்னுடைய சொந்த
குழந்தைகளாகவே கருதுவாள்
தாய் நாட்டில் எவ்வளவோ அநீதி படர்ந்தாலும் – அவள்
பொறுமைத்தாயாக – பூமித்தாயாக வளர்வாள்
இல்வாழ்வோர் அறத்தில் இன்பம் காண்பித்த
தாய் நாடே! – அந்த
ஆண்மையையும் பெண்மையையும் இணைத்த புனித நதி நீயே!
காதலருக்கு ஒழுக்கமும் வீரத்திற்குத் தர்மமும் கற்பித்த

தாய் நாடே! – அந்த
அழகையும் ஆளுமையையும் காத்த தமிழ்த் தாய் நீயே!
முப்பத்து மூன்று வருடங்கள் மனிதர்கள்
மரணங்களை மலிவாக வாங்கிய போது
நிதானம் தவறாமல் நீதியாக கலியுகத்தின்
தத்துவங்களை இயற்கை தாயின் துணையுடன்
மனிதர்களுக்குக் கற்பித்தாய் தாய் நாடே!
அன்று நீ புகட்டிய தத்துவங்கள்
இன்று நிஜத்தில் நீந்துகின்றது தாய் நாடே!
மூத்தோரையும் இளையோரையும் நீ சுமந்தாய்!
தாயையும் தந்தையையும் நீ சுமந்தாய்!
சிசுவையும் சுகத்தையும் நீ சுமந்தாய்!
துன்பத்தையும் இன்பத்தையும் நீ சுமந்தாய்!
பிணியையும் பிணத்தையும் நீ சுமந்தாய்!
நல்லவரையும் கெட்டவரையும் நீ சுமந்தாய்!
ஆதியையும் அந்தத்தையும் நீ சுமந்தாய்! – ஆதலால்
இறப்புக்கும் பிறப்புக்கும் தாய் – தாய் நாடே!
பாட்டன், பாட்டி விளையாண்ட தாய் நாடே!
பாவலர், பாமரர் விவாதித்த தாய் நாடே!
அமைதியாக உறங்கும் ஜீவன்களைத்
துயில் எழுப்பும் அரக்கர்களுக்குத் தகுந்த பாடம்
புகட்டும் தாய் நாடே!
சின்னஞ் சிறார்கள் சிறகடித்து,
சின்ன மொழி பேசி, சின்ன பூக்களை
சின்ன விரல்களால், பறித்து
சந்தோஷமாக, சூடி,
வாழும் தாய் நாடு இது
சினமில்லாமல் சிறுவர்களை
சிந்தனையாளராக்கிய சின்னத் தாய் நாடே! – என்று
சிந்து பாடுவோம் சிந்து பாடுவோம்

கிராமம் நகரமாகி நரகமாகினாலும்
பண்பாட்டின் அடையாளம் நீயே!
சூரிய, சந்திர ஸ்பரிசம் உன்னில்
பட்டாலும் ஸ்வரங்களாக வெப்பத்திற்கும்
குளிருக்கும் மௌன கீதம் பாடினாய் – தாய் நாடே!
உன் மேனி வியர்வை துளிகள் உழைப்பின்
உயர்வை உலகிற்கு உரைத்திடும்
பிரசவ வேதனை, மரண வேதனை வறுமை வேதனை –

வழிகாட்டும் தாய்க்குத் தாய் நீயே! தாய் நாடும் நீயே!
இயற்கை தந்த நானிலம் நான்கு திக்கும்
இலங்கையில் நிறைவாக இருந்த போதும்
அதில் மனித உழைப்பின் மகிமையை மலர வைத்த
மங்கல மங்கை நீயே!
தாய்ப் பத்திரம் கொண்ட பல குலத்தவர்
எமது நாட்டில் வாழ்ந்தாலும்
தாய் மொழி மூலம் அவர்களுக்குத்
தாய்மை அன்பு புகட்டும் – தாயகத்தின்
தாய் நாட்டின் – பாராட்டு, ஊட்டு, முலை,
கை, செவிலி – தாய் நீயே!
பேதையர் தொடக்கம் பேரிளம் பெண் வரையும்
காப்பு தொடக்கம் சிறு தேருருட்டல் வரையும்
அரசன் தொடக்கம் மூத்தோன் வரையும்
அரசன் தேவி தொடக்கம் தன்னை ஈன்றாள் வரையும்
அரசர் தொடக்கம் தூதுவர் வரையும்
புகழ் முதல் வாழ்நாள் வரையான
பதினாறு செல்வங்களைக் கொடுக்கும்
தாய் நாடே! உனக்கு முதல் வந்தனம்
மனிதா நீ இந்த மண்ணில் பிறந்தாலும் உனது பெற்றோர்
இந்த மண்ணில் பிறந்தாலும்
உனது வரலாற்றை எழுதுவது தாய் நாடே!
தோல்வி வந்த போது துவண்டு போகாமல் தாங்கியவள்
தாய் நாடே!
வெற்றி வந்த போது தலைக்கனம் வராமல் தடுத்தவள்
தாய் நாடே!
இயற்கையையும் உன்னையும் எதிர்த்தவர்களை
நீ சங்காரம் செய்தாய்.
அவை இரண்டையும் நேசிப்பவர்களை வாழ வைத்து
நீ கவசம் செய்தாய்
பூமியில் ஒவ்வொரு பொழுதும் புலரும் போது
என் நா உன் புகழ் பாடும்
பூமியில் ஒவ்வொரு பூவும் பூக்கும் போதும்
உதிரும் போதும் தாய் நாடே! உனக்கு தலை வணங்கும்
வணக்கம் தாய் நாடே !
வணக்கம் தாய் நாடே!
வணக்கம் தாய் நாடே! என்று

# விழுதுகள்



**திரு. பெ. ஸ்ரீகந்தநேசன்**
எழுத்தாளர் - ஆய்வாளர்

காயத்திரி மகப்பேற்று விடுதியில் அனுமதி பெற்று பதினைந்து நாட்கள் கழிந்துவிட்டன. வைத்தியர் இன்று பிரசவம் நாளை பிரசவம் – தினமும் ஒவ்வொரு காலையும் மனப்பாடம் செய்வார். அந்த வார்த்தைகள் மட்டுமே அவளுக்கு மகிழ்ச்சியை அள்ளி வீசின. பாக்கியம் தினமும் அங்குச் சென்று, மகளுக்கு ஆறுதல் மொழி மொழிவாள். காயத்திரிக்கு திருமணமாகி ஆறு மாதங்கள் உருண்டோடின.

வேலையின் நிமிர்த்தம் வவுனியா பிரதேசத்திற்குத் தனிக்குடித்தனம் சென்றன அந்த பறவைகள். முப்பத்து மூனறு வருடங்களாக அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்த அவளுக்கு உலகில் நடமாடும் தெய்வமாகவும் புனித வாசகமாக தாயின் வார்த்தையும் இருந்ததே ஒழிய இந்த உலகில் எதுவும் பெரிய விடயமாக தோன்றவில்லை. தாயும் மகளும் பரஸ்பரம் அதிக அன்பும், பாசமும் கொண்டு வாழ்ந்தமையால், காயத்திரிக்கும் கணவனுக்கும் இடைவெளி அதிகரித்தது. இதை தாயும் சேயும் நன்கு உணர்ந்தாலும் அவர்களின் அன்பும் பாசமும் கண்களை மறைத்தன. மூன்று பெண் பிள்ளைகளை இந்த உலகத்தில் விருட்சத்தின் விழுதுகளாக படர விட்டுவிட்டு ஐம்பது வயதில் விதவைக்கோலம் பூண்டாள், காயத்திரியின் தாய் பாக்கியம். அன்று தொடங்கி தனது வாழ்வைக் குழந்தைகளுக்காக அர்ப்பணிப்புச் செய்தாள். ஆண் துணை இல்லாத குடுப்பத்தில் பாக்கியம் தனது பெண் குழந்தைகளுக்கு எந்த குறையுமில்லாமல் கண்ணியம், கட்டுப்பாடு, கடமை தவறாமல் வளர்த்து கல்வி, செல்வம், வீரம் முப்பொருளுக்கு முத்தேவிகளாக உள்ளூரிலும் வெளியூரிலும் வலம் வர வைத்தாள். பாக்கியம் திருமணம் நிறைவேறிய நாளிலிருந்து கணவனது வேண்டுகோளுக்கு ஏற்ப தாதியர் சேவைக்குத் தற்காலிகமாக ஒரு வருடத்திற்கு ஓய்வு கொடுத்த போதும் வாழ்க்கைச் செலவு அதிகரித்து குடும்ப பொருளாதாரத்தில் நெருக்கடி நெருங்கியமையால், மீண்டும் கணவனது வேண்டுகோளுக்கு ஏற்ப அந்த ஓய்வு நொருங்கியது. தன்னுடைய கணவன் மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தாலும் அவர்களின் தொழில் தொடர்ச்சியாக ஒன்றாக இணைந்து வாழ்வதற்கு பாதை சமைக்கவில்லை. அவர் தூரப்பிரதேசத்தில் தொழில் புரிந்தமையால், மது அரக்கன் மயக்கி மாயம் செய்தான்.

மூத்தவள் வினோதாவிற்கும் நடுப்பட்டவள் வினிதாவிற்கும் தாயின் விருப்பத்துடன் திருமணமாகி நோர்வேயில் வாழ்ந்தாலும், ஒரு நாழிகை மகள்மாருடன் தொலைபேசியில் உரையாடவில்லை என்றால், அன்றைய நிசியில் நட்சத்திரமாக போராடி விடிவெள்ளியாகி ஒளி மங்கி வாடி வதங்கியிருப்பாள். மகள்மாரும் நட்சத்திரத்தை எரி நட்சத்திரமாக விழுவதற்கு விடவில்லை. காயத்திரியுடன் இணைந்து வாழ்ந்த காலந்தான் பாக்கியத்தின் வாழ் நாளில் அதிகம். தாய் தாதியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் பிள்ளைகளுக்கான வாழ்க்கை பாதையைச் செதுக்கும் சிற்பியாக சேவை குளத்தில் நீந்திய

வண்ணம் உள்ளாள். காயத்திரி முப்பத்தி மூன்று வயது முதிர் கன்னி பருவத்தை அடைந்த போதுதான், அவளுக்கு வவுனியா மாவட்டத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. 2008 ஆம் ஆண்டில் உள்ளூர் மோதல் ஆரம்பம், வளர்ச்சி – படிகளைத் தாண்டிய நிலையில் உச்சகட்டத்தைத் தொட்டிருந்தது. இது மக்களின் வாழ்க்கையில் பல அசௌகாரியங்களை உண்டு பண்ணின. வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தரை வழி போக்குவரத்துத் தடைப்பட்டு, கடல் வழியும் வான் வழியுமே போக்குவரத்து நடைபெற்றது. பாக்கியம் தனது மகளை வெளிமாவட்டத்திற்கு வேலைக்கு அனுப்புவதற்கு ஆரம்பத்தில் விருப்பம் இல்லாத போதும், மகளின் எதிர் கால வாழ்விலும் தான் மரணித்த பின்னரும் அவள் யாருக்கும் அடிமையில்லாத புதுமைப்பெண்ணாக வையகத்தில் சிறப்பாக வாழ வேண்டும் என்பதற்காக பொய்கை விழிகளில் நீர் நிரம்பி வழிய, ஏக்கவுணர்வுடன் விடைகொடுத்தாள். காயத்திரி ஆசிரிய நியமனம் கிடைத்த இடத்தில் கேசவனின் தொடர்பு அரும்பாக அரும்பி, நட்பு மொட்டாக முகிழ்ந்து, காதல் பூவாக பூத்து, உறவு பிஞ்சாக படர்ந்து, இரு வீட்டார் பேச்சு வார்த்தை காயாக முதிர்ந்து, திருமணம் கனியாக கனிந்து, இரண்டு சேய்கள் வித்துக்கள் என்னும் விழுதுகளாக பூமியைப் பற்றினர். சேய்கள் விழுதுகளாக படர்வதற்கு இங்கு பெண்மையும் ஆண்மையும் தாய்மையும் ஏதோவொரு வகையில் வெற்றி கண்டுள்ளன.

வட இலங்கையில் 2009 களின் இறுதியில் உள்நாட்டு ஆயுத யுத்தம் தணிந்து முடிந்தது. யுத்த வடுக்களிலிருந்து மீண்டு வரும் காலப்பகுதியில் பாக்கியம் தன்னுடைய வாழ்வில் மூன்றாவது விபத்தைச் சந்திக்கின்றாள். அந்த விபத்தே அவளை மீள முடியாத நேயாளியாக்கியதுடன், இறுதி விபத்தும் அதுவே.

அன்புத்தாயாரின் வேண்டுகோளுக்கேற்ப, 1967 ஆம் ஆண்டு சிவலிங்கத்தை வாழ்க்கை துணைவராக இணைத்துக்கொண்டு சிலகாலங்கள் வாழ்கின்ற போது இரண்டாவதாக பிறந்த ஆண் சிசு மண்ணைத் தொட்டாலும் உடல் ஆரோக்கியம் இன்மையால் அந்த மொட்டு முப்பத்தொரு நாட்களில் மலராமல் கருகி விட்டது. பாக்கியத்திற்கு இது முதலாவது விபத்து.

முதலாவது விபத்து நடந்து முடிந்த போதும் தம்பதியினர் தாம்பத்திய உறவில் ஈடுபடாமல் இருக்கவில்லை என்று கூறமுடியாது. எவ்வளவுதான் மனிதனுடைய வாழ்வில் இன்னல் நடந்தாலும் மரபை எதிர்த்து வாழ்ந்தாலும் இயற்கையை எதிர்த்து வாழ்வதற்கு பெண்ணிற்கு பெண்மையும் தாய்மையும், ஆணிற்கு ஆண்மையும் ஆளுமையும் இடம் கொடுக்காது. இயற்கையை எதிர்த்து சோகத்தில் இந்த தம்பதியினர் தங்களின் வாழ்வை வாழ்ந்திருந்தால், அஜந்தனுக்குப் பிறகு வினிதாவும் காயத்திரியும் பூவுலகில் அவதிரித்திருக்கமாட்டார்கள். பெண்மை வாழ்வில் திருப்திப் பெறவில்லை ஆண்மை வாழ்வில் திருப்தி பெறவில்லை என்றால், வாழக்கை விருட்சத்தில் அடுத்த சந்ததி விழுதுகள் நிலத்தில் படர்ந்து தனது பரம்பரையைச் சுமப்பது கேள்விக்குறியாகவே இருக்கும். பாக்கியம் குடும்ப வாழ்வில் சரியான மைற்கல் இட்டமையால்தான், மூன்று பிள்ளைகளின் மூன்று பேரப்பிள்ளைகளைப் பார்க்கக் கூடிய சந்தர்ப்பமும் பிறப்பின் பயனை எட்டக் கூடிய நிலையும் கை கூடின.

முதலாவது விபத்திலிருந்து மீண்டு வரும் வேளையில் இரண்டாவது விபத்து சில வருடங்களில் அவளுக்குத் திட்டமிட்டு வந்ததைப் போல நடந்தது. கணவர் நோய்வாய்ப்பட்டு படுக்கையோடு போராடிய போது, பாக்கியம் யாழ்ப்பாணத்திலிருந்து தனியாக கொழும்புக்குச் சென்று, அவரைப் பராமரித்த

போதிலும் அவளால் அவரது உயிரை பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. ஆண் துணையின்றி கணவனின் பூதவுடலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவர அவள் பட்ட கஷ்ட துன்பங்களும் சொல்லிலடங்காதவை. இலங்கையில் 1995 களில் உள்நாட்டுப் போர் உக்கிரம் பெற்றிருந்தமையால், இது மேலும் பாக்கித்திற்குச் சங்கட நிலையை உண்டு பண்ணியது. ஆண் பிள்ளைச் செல்வம் இல்லை என்ற குறையைக் கணவர் நீக்கிய போதும் அவர் இறந்ததும் முதல் விபத்தின் வடுக்கள் ஆழ் மனத்திலிருந்து வெளிவர, இரண்டு விபத்துக்களும் வாழ்வில் பொன் விழா காண வேண்டிய பூவை வாட்டின. காயத்திரி முதற் தடவையாக கருவுற்றாள். இக் காலத்தில் காயத்திரிக்கும் கேசவனுக்கும் இடையில் கருத்து முரண்பாபடு நாளுக்கு நாள் அதிகரித்து பெரும் சண்டையாக மாறி மாப்பிள்ளை விட்டாருக்கும் பெண் வீட்டாருக்கும் இடையில் நிரந்திர பிளவை உண்டு பண்ணியது. காயத்திரி எந்த விடயத்தைத் தொட்டாலும் தன்னுடைய தாயைச் சம்பந்தபடுத்தாமல் விடமாட்டாள். அதைப் போல தாய் பாக்கியமும் எந்த விடயத்தைத் தொட்டாலும் தன்னுடைய மகளைச் சம்பந்தபடுத்தாமல் விடமாட்டாள். சோஷலிச போக்கு உடைய கேசவனின் மனநிலையில் கணவன் – மனைவி உறவும் மாமி – மருமகள் உறவும் மச்சான் – மச்சான் உறவும் மச்சாள் – மச்சான் உறவும் திருமணமாகி ஒரு வருடத்திற்கு இனித்தாலும் சிறுக சிறுக இந்த உறவுகளில் விரிசல் விழுந்தது. கணவன் – மனைவி, மாமி – மருமகன் உறவுகளில் ஒன்று மாறி ஒன்று தடம் புரள ஆரம்பித்தபோது, வைத்திய சோதனை சொன்னது, 'காயத்திரி அம்மாவாக போகிறாள்' – இதனால், தடம் புரண்ட உறவுகள் தற்காலிகமாக நிம்மதியடைந்தன. கேசவனின் மது பழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்தது. திருமணம் முடித்த ஆரம்பத்தில் மாமியை அம்மா என்றே அழைத்து வந்த கேசவன், கோயில் குளம், வைத்தியசாலை, கொண்டாட்ட மரண நிகழ்வுகள் – பல்வேறு இடங்களுக்கு மாமியை தன்னுடைய மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றான். பாக்கியத்திற்கு கண் சத்திர சிகிச்சை செய்த போது கேசவனே, அவளது கண்ணுக்கு மருந்துவிட்டு பராமரித்தான். இப்படியாக ஆசையில்லாத அன்பு கொண்ட உறவுகளில் விரிசல் விழுந்தது ஏன்?

பாக்கியம், மகள் வாழ்வில் கொண்ட பயத்தாலும் கேசவனின் இடைவிடாத குடியாலும் மனமுடைந்தாள். தாய்மை உற்றிருந்த மகளை எண்ணி பாக்கியத்தின் தாய்மை குணம் தவித்தது. மனிதனுடைய வாழ்வில் திருமணம் நடப்பதும், முதல் இரவு நடப்பதும் ஒரு சம்பிரதாய சம்பவமே தவிர கட்டாயம் இல்லை. கேசவன் நன்கு உணர்ந்தவன். காதல், ஆசை, அன்பு பற்று, பாசம், மிருகத்தனம், உணர்ச்சி, அறிவு என பல குணங்கள் மனிதருக்குள் இருந்தாலும் அவை ஒவ்வொருவருடைய காம இச்சையைப் பொறுத்து வேறாடும், மாறாடும், தடுமாறும், கொந்தளிக்கும், சூடுகொள்ளும். ஆண் இயற்கையான காமமாகிய பாலியல் உறவில் திருப்த்தியில்லையாயின் வேறு பல வழிகளை நாடுகின்றான் அமைக்கின்றான். இதில் மதுவும் ஒரு வழி. மதுவை அளவோடு பாவித்தவன் குடும்ப வாழ்வில் மனைவியோடு பயணிக்கின்றான் அளவுக்கு அதிகமாக பாவித்தவன் பல பெண்களின் வாழ்வை சீரழிக்கின்றான் தானும் அழிகின்றான். கேசவன் இவற்றில் இருந்து மாறுபட்டவன் எல்லாவற்றிலும் திருப்தியைக் காண எண்ணுபவன் தாம்பத்திய உறவில் திருப்தியில்லை அவனது வாழ்வில் தடுமாற்றம். மூவரினதும் வாதம் அவர் அவர் பார்வைகளில் சரியே.

என்னதான் பெண்மையும் தாய்மையும் உலகத்தில் மதித்துப் போற்றப்பட்டாலும் அது தனது வயதுக்குரிய செயற்பாட்டை சரியாக செய்யாவிட்டால், தனி நபரிலும் குடும்பத்திலும் நாட்டிலும் உலகத்திலும் சிக்கலை உண்டு பண்ணுவதுடன், அவர்களின் தாம்பத்திய வாழ்வில் தோல்வியே. என்பதை இக் கதையில் வரும் குடும்பங்கள் உணர்த்தியுள்ளன. காயத்திரிக்கு மூன்று மாதத்திற்குள் கருச்சிதைவு ஏற்பட்டமையால், தாம்பத்தியத்தில் திருப்தி இல்லாது தடுமாற்றத்துடன் அலைந்த கேசவனின் உறவு தேவைப்படுகின்றது ஒரு வம்ச விழுதுக்கு மட்டுமே.

பேதை, பெதுமை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் – பெண்களின் ஏழு பருவங்களில் தெரிவை பருவத்துக்குள் பெண்கள் திருமணம் செய்தால்தான், தாம்பத்திய உறவில் திருப்தி அடையவும் ஏற்படுத்தவும் முடியும். காயத்திரி கணவனின் மனநிலையைப் புறந்தள்ளிவிட்டு சந்ததியின் விழுது ஒன்றைச் சமூகத்திற்குப் பயந்து உற்பவிப்பது மட்டுமே அவளின் குறிக்கோள். இது நவீன பெண்ணியத்தின் தலையாய பண்பு. காயத்திரி இதற்கு விதிவிலக்கல்ல. பசியோடு இருப்பவனுக்கு சில மாதங்கள் நல்ல உணவு. காயத்திரி மீண்டும் கருவுற்றாள். கணவன் – மனைவி, மாமி மருமகன் உறவு மீண்டும் தெறித்து தெறித்து பொருந்தியது.

பாக்கியத்திற்கு, குடிகார மருமகனை எண்ணி மகள் மீது பரிவும் இரக்கமும் ஏற்பட்டன. காயத்திரி, தூர பிரதேசத்திற்கு பேரூந்தில் அதிகாலை ஐந்து மணிக்கு வேலைக்குச் செல்வதும் மாலை ஐந்து மணிக்கு வீடு திரும்புவதும் சில வருடங்கள் வழக்கம். பாக்கியம் 1944 ஆம் ஆண்டில் பிறந்து பன்னிரண்டு வயதில் தந்தையை இழந்தாலும் தாய் பூரணத்தின் பராமரிப்பில் வளர்ந்து உலக சவால்களை எதிர்கொள்ளும் சாணக்கியம் பெற்றிருந்தாள். ஆண்மையைப் பூரணமாக வெல்லும் பெண்கள் இவர்களின் பரம்பரையில் குறைவே. பாக்கியம் குழந்தையைச் சுமக்கும் தாயைப் பராமரிக்கும் சகல வித்தைகளையும் கற்றிருந்தாள். தனி மரமாக நின்று உணவு சமைத்து, காயத்திரியின் கடமைகளைச் செய்து, அவளைப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பாள். இங்கு தாய்மைக்கு இணையான பாசம் எதுவும் இல்லை என்பதையும் தாய்மையின் மேன்மையையும் காணலாம்.

தாய் பாக்கியமும் மகள் காயத்திரியும் 2014 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தின் முற்பகுதியில் ஓர் இராப் பொழுதில் பத்து மணியளவில் படுக்கைக்கு வேண்டிய அடுக்குகளைச் செய்த வண்ணம் உள்ளனர். வெளிச் சூழலில் மழைத்துளிகள் மெது மெதுவாக தூறுகின்றன. அன்றைய இரவு வித்தியாசமாக வீட்டு முற்றத்து மாமரத்தில் கோட்டான் அலறுகின்றது. அந்த சப்தத்தினால், பழுத்திருந்த மாங்கனிகள் நிலத்தில் விழ, மரத்தில் உள்ள வௌவால் கூட்டங்கள் எழுந்து பறக்கின்றன. ஓர் இரவும் இல்லாத அளவுக்கு அன்று இரவு கருகருவென கருமையாக இருந்தது. அரியாலை, இலந்தைக்குளம் வீதியில் சில ஜீவன்கள் இவற்றைப் பொருட்படுத்தாமல் நடமாடுகின்றன. பாக்கியம் பகல் முழுவதும் ஓடி ஓடி வீட்டு பணிளைச் செய்தமையால், கட்டிலில் சிறிது கண்ணயர்ந்தாள். சாமி அறையின் சாளரங்களினூடாக சில்லென்று குளிர்க் காற்று வீசுகின்றது. முதிர்ந்த மேனியில் பட்டுத் திரும்பும் அந்த குளிர்க்காற்று பாக்கியத்திடம் என்னவோ சொல்ல நினைப்பதைப் போல சாளர கதவுளை அடித்து மூடி திறக்கின்றது. தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையே போராடிக்கொண்டிருந்த அவளின் விழிகள் மூன்று பெண்களுக்கு மணம் செய்து வைத்ததை எண்ணி நிம்மதி கொண்டாலும் மூன்றாவது மகளின் வாழ்க்கை குழப்பத்தைக்

கொடுத்தது. ஏதோ அபாயம் நடக்கப் போவதைப் போல மழைத்துறலில் நனைந்தவாறு வீட்டுக்காவல் ஆண் நாய் குரைக்கின்றது பெட்டை நாய் குரைத்து குரைத்து இடையிடையே ஊளையிடுகின்றது. காயத்திரி மெதுவாக படலையை உற்று நோக்கினாள்.
படலையின் வெளிப்புறத்தில் ஓர் இளைஞன்.

"அக்கா–அக்கா– உங்கட அண்ணன் றோட்டில விழுந்து ரெத்தத்தில கிடக்கிறாறு ஓடியாங்க–" காயத்திரி ஒரு கணம் திகைத்துப்போனாள் வயிற்றைத் தடவுகின்றாள். அவள், அப்படி நடந்திருக்காது என்ற நம்பிக்கையில் 'தன்னுடைய கணவன் குடிகாரன்தான், அதற்காக வீதியில் விழுந்து கிடக்கும் அளவுக்கு பெரிய குடிகாரன் இல்லை' மனம் எண்ணிய போதும் அந்த வார்த்தைகளை வெளியில் சொல்லவில்லை சற்று சந்தேகம், வேதனை, இவளுக்குச் சந்ததி வேண்டும் அவனுக்கு இரணடும் வேண்டும். இரண்டில் ஒன்று இல்லாததால் அவனுக்கு இந்நிலை. எப்படியும் இயற்கையை வெறுக்க முடியாது. பாக்கியம் அறைக்குள் இருந்து செவிமடுத்துக்கொண்டே பதற்றத்துடன் வெளியில் வந்து, "வா– வா– தம்பி போவம் எங்க விழுந்து கிடக்கிறார். யாரும் பக்கத்தில இருக்கங்களா?" மனம் பதைபதைக்க தள்ளாத வயதில் பாக்கியம், அந்த இளைஞனின் 'சைக்கிளில்' பயணிக்கின்றாள். "பிரப்பங்குளம் அம்மன் ஆலயத்திற்குப் பக்கத்தில்– யாரும் இல்லை–"

காயத்திரி ஏதோவொரு பிடிப்பில் பின் தொடர்கின்றாள் வயிறு இடம் கொடுக்க மறுக்கின்றது. முதல் நாள் குடித்த மதுவின் மயக்கம். தவறுதலாக ஒரு விபத்து இரண்டு பெண்கள் காயம் ஐந்தாயிரம் ரூபாய் இழப்பீடு. அந்த விபத்தை சீர் செய்ய பொலிஸ் நண்பர்களுடன் 'பாட்டி.' கேசவன், தலைகீழ் வெறியில் சிஞ்சி அக்காவின் வீட்டைக்காட்ட, பொலிஷார் அவனை அங்கு பாதுகாப்பாக விட்டுச்சென்றனர். இவ்வாறு பல இளைஞர்கள் திசை......

கபட குணம் இல்லாத கேசவன், சிஞ்சி அக்காவின் வீட்டைக்காட்டியதற்கு, தனது வீட்டுக்கு பயந்தோ, தடுமாற்றத்திலோ, வெறி முறியட்டும் என்றோ, பொழுதுப்போக்கிற்காகவோ, சிஞ்சி அக்கா அவன் மீது தாயைப் போல கடந்த மாதங்களில் பாசம் செலுத்தியதாலோ, திட்டமிட்ட சதியாலோ, மணம் முடித்த புதுசில் தம்பதிகளுக்கு வீட்டில் விருந்து கொடுத்ததாலோ, விருந்தில் சிஞ்சி அக்கா கேசவனின் கரங்களில் இரண்டாயிரம் ரூபாய் பணத்தை திணித்தமையாலோ – என்ன என்னவோ கூறினாலும்? பொலிஸ் நண்பர்களை எதிர்த்து சிஞ்சி அக்காவின் வீட்டுக்குள் நுழைந்தமைக்கு 'மதுவை மண்டி மதி மயங்கி ஏதோவொரு தடுமாற்றம்தான்' காரணம். கனவுலகில் கானம் பாடும் காகம் தன்னைக் குயிலாக பாவம் பண்ணுவதைப் போல மது அருந்துபவனும் கனவுலகில் சுயமற்று ஓடும் இயந்திரம்'.

கேசனின் தாய் அவனைப் பாராட்டுத் தாயாக, ஊட்டுத் தாயாக, முலைத் தாயாக, கைத் தாயாக, செவிலித் தாயாக பிறப்பிலிருந்து முப்பது வயது வரை கவனித்தாள். இந்த ஆளுமையுள்ள இளைஞனைச் சமூகம் சரியாக வழி நடத்தனால், இவனது தீர்க்கமான சிந்னையால் எதிர் கால சமூகம் நல்வழி பெறும். இப்போது கேசவன் சரியான தலைமைத்துவமின்மையாலும் சரியான வழி நடத்தல் இன்மையாலும் சிஞ்சி அக்காவின் வீட்டில் நிதானம் இல்லாமல் மடா தண்ணியில் நீந்துகின்றான். அவன் திருமணமாகி இரண்டு வருடங்களில் மனைவியின் உறவினர்களின் கபட மனநிலையை அறந்து

கொள்வதற்கு வளரவும் இல்லை வளர்க்கப்படவும் இல்லை. பல மனிதருடைய வாழ்வைப் பணந்தான் தீர்மானிக்கின்றது. பண்பற்ற மனிதரும் உண்டு. பொறாமை மனிதரும் வாழ்கின்றனர். உறவுகளுடன் பணத்திற்காக பகட்டுக்காக பழகுபவர்களும் சீவிக்கின்றனர். உறவுகளைப் பணத்திற்காக அந்தரிக்க விடுபவர்களும் வலம் வருகின்றனர். இவ்வாறு பல வடிவங்களைக் கொண்டது, சிஞ்சி அக்காவின் குடும்பம். தாயும் மகளும் பணத்திற்காகவும் பகட்டுக்காகவும் உறவுகளுக்கு முகமன் பாடிக்கொண்டு வாழ்பவர்கள். தாம்பத்திய உறவில் திருப்தி காணாத சிஞ்சி அக்கா தனது கணவனுக்குக் குடிகாரன் பட்டம் சூட்டி துரத்தி விட்டாள். அதற்கு சிஞ்சி அக்காவின் தாயும் உடன்பாடு. தன்னுடைய மகளுக்குச் சிசு இன்மையாலும் கணவனுடன் இணைந்து வாழாமையும் ஊர் மத்தியில் தப்பாக கதைக்கப்பட்டமையால், ஆத்திரம் அடைந்திருந்த தாயும் மகளும் பாக்கியம் குடும்பத்திற்கு ஊர் மத்தியில் கெட்ட பெயர் உண்டு பண்ணவும் காயத்திரியின் கருவைச் சிதைக்கவும் மதுபோதையில் சென்ற கேசவனை பயன்படுத்தினர்.

அன்று இரவு சிஞ்சி அக்காவின் வீட்டுக்கு வந்திருந்த இரகசிய மனிதனுடன் இணைந்து அவர்களின் சதித்திட்டத்தை நிறைவேற்றினர். போதையில் உள்ள கேசவனுக்குப் போதைக்கு மேல் போதை ஏற்றி படலைக்கு வெளியில் அநாதரவாக நாய் போல துரத்திவிட்டனர். வெளிச்சம் இல்லாத 'லேன்சர் பைக்' நிதானம் இல்லாத கேசவனுடன் தடுமாறி தடுமாறி A9 வீதியைக் கடந்து இலந்தைக்குளம் வீதியில் இறங்கி 'கும்' நிசிக்குள் மறைகின்றது. அணைந்த தெரு விளக்குகள் ஒளிர்கின்றன. ஓர் இளைஞன் 'சைக்கிளில்' ஓடுகின்றான்.

இந்த குடும்பத்தில் பெண்மையும் தாய்மையும் விருட்சத்தின் விழுதையும் விழுதுகளையும் விரும்பவில்லை. பெண்மை தாய்மை அடைந்தாலும் வாழ்வியலின் யதார்த்தத்தை உணரவில்லை என்றால், எந்த பயனும் இல்லை. தாய்மை அடையாத பெண்மையை இங்கு முதுமை அடைந்த பெண்மையும் தாய்மையும் உடையவள் முழுமையான சுய நலத்துடன் செயற்படுவதைக் காணலாம். சிஞ்சி அக்கா, தனது கணவனை வெறுத்தது பெண்ணியம் வேண்டியா, பெண்மை காமத்திலா, பணத்திற்காகவா, தாய்ப்பாசத்திற்காகவா – எதுவாக இருந்தாலும் இங்கு பெண்மையும தாய்மையும் தோற்றுவிட்டன கரடுமுரடான பாதையானாலும் பாக்கியம் குடும்பத்தில் வென்று விட்டன. நவீன உலகத்தில் விதவிதமான தொலைபேசிகள் வந்து பல விபத்துக்கள் நடந்தாலும் சில விபத்துக்கள் தடுக்கப்பட்டும் இருக்கின்றன. அந்த நிசியில் இரகசிய மனிதனுக்கும் ஊர்க்குருவிகளுக்கும் தொலைபேசியில் இலக்கங்களை அமுத்திய தாயும் மகளும் நெருங்கிய உறவு பாக்கியம் குடும்பத்திற்கு அழுத்தியிருந்தால், பெண்மையும் தாய்மையும் வெற்றி பெற்றிருப்பதுடன், கேசவனின் விபத்தும் தடுக்கப்பட்டிருக்கும்.

அந்த இளைஞனது 'சைக்கிளில்' இருந்து பாக்கியம் திடீரென இறங்கினாள். மருமகன் தனிமையில் உயிருக்குப் போராடுவதையும் வாயிலும் மூக்கிலும் இரத்தம் குபுகுபு என வெளியேறுவதையும் பார்த்து மயங்கும் நிலை வந்தாலும் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, யாழ் – வைத்தியசாலை 'அம்புலன்ஸை' வரவழைத்து தனி மரமாக ஏற்றிச் சென்று வைத்தியசாலையில் அனுமதித்தாள். இந்த விபத்து பாக்கியத்தை மூன்றாவது விபத்தாக காவு கொணடு பயம், கோபம், கவலை – உண்டு பண்ணி மீள முடியாது. அறியமுடியாத புற்று நோய்க்கு உள்ளாகின்றாள்.

அதிகாலையில் செய்தி பரவுகின்றது:– 'மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டிருந்தாலும் கேசவன் உயிர் தப்பிவிட்டான். ஒரு கையும் ஒரு காலும் இயங்காததுடன், பேசவும் முடியாது' – . 'ஐயோ– எனது மகள் விதவையாகவில்லை மருமகனையும் என்னைப் போல ஒரு தாய்தானே பெற்றிருப்பாள். அவன் உயிர் தப்பியதே போதும்' – பெருமூச்சு விட்டாள், பாக்கியம். இங்கு முதிர்ந்த பெண்மை – தாய்மை குடும்ப வாழ்வில் முழுமை பெற்றுவிட்டது சாதித்து விட்டது.

நண்பகல் பிரசவ அறைக்குள் அனுமதிக்கப்பட்ட காயத்திரிக்கு இயற்கையாக குழந்தை பிறக்க அவளது உடல் இடம் கொடுக்கவில்லை. மாலை ஐந்து மணிக்கு 'சீசேரியன்' மூலம் வெளியில் எடுக்கப்பட்டது. ஊழியர், காயத்திரியைத் தள்ளு வண்டியில் வெளியில் கொண்டு வருகின்றனர். ஒரு தாதிப் பெண், குழந்தையைத் தூக்கி வந்து தாயிடம் காட்டுகின்றாள். 'மகள் பாவம் தாங்க மாட்டாள். எனக்காக இவ்வளவு காலமும் தன்னை அர்ப்பணித்தவள். ஆண் பிள்ளை இல்லாத குறையைத் தீர்த்தவள். உறவுகளுக்காக உழைத்தவள். கோபக்காரிதான் இருந்தாலும் நல்லவள்' – தாய்மை தனக்குள் முனங்க தாயினதும் மகளினதும் கண்ணீர்த்துளிகள் ஒன்றாக சிசுவின் மீது சிந்துகின்றன. பாக்கியத்தை மூன்று விபத்துக்களும் படிப்படியாக கொன்றொழித்துவிட்டன. இன்னும் ஐந்து வருடங்களாவது வாழ வேண்டியவள். 26.10.2017 இல் கடைசி மகளும் கடைசி மருமகனும் வைத்தியசாலையில் கட்டில் அருகில் கண்ணீர் மல்க நிற்க, உயிர் உடம்பை விட்டுப் பிரிந்தது. அவளது முகத்தில் பெண்மையையும் தாய்மையையும் வெற்றி கொண்ட திருப்தியும் ஆண்மையைத் முழுமையாக திருப்திப்படுத்த முடியாத ஏக்கமும் தெரிந்தன.

காயத்திரிக்கு இயற்கையை வெல்ல முடியாத நிலையில், விருட்சத்தின் இன்னுமொரு விழுதாக 07–10–2018 இல் காலைப் பொழுதில் ஆண் சிசு ஒன்று அவதரிக்கின்றது. பாக்கியத்தின் மரணம் காயத்திரியின் மூலம் பெண்ணியமும் பெண்மையும் ஆண்மையை வெற்றி கொள்ள எத்தனித்ததின் விளைவுதான் ஆண் சிசு. தாய்மை, மரணத்திலும் மகள் – மருமகனை இணைத்தது.

காயத்திரியின் தாய்மை திருப்தியடைந்தது பெண்மை தொடர்ந்து ஆண்மையைத் திருப்திப்படுத்துமா, விபத்துக்களை உண்டு பண்ணுமா, விருட்சத்தின் விழுதுகளை இன்னும் இன்னும் படர விடுமா?

"அம்மம்மா சாமிக்கிட்ட போயிட்டா நாளைக்கு வருவா' நான்கு வயது பேத்தி தினமும் பாக்கியத்தின் படத்தைப் பார்த்து புலம்புவாள். நேற்று பெண்மைக்குத் திருப்தி, ஆண்மைக்கு அதிருப்தி தாய்மைக்கு ஆரவாரம் சமூகத்திறகுக் கொண்டாட்டம், இளையோருக்கு அசதி, சிந்தனைக்குச் சிறை".

இன்று பெண்மைக்கு வாழ்வு ஆண்மைக்குச் சிதைவு, தாய்மைக்குப் பாராட்டு சமூகத்திற்கு சுயநலம், இளையோருக்கு மடமை, சிந்தனைக்குச் சிறகு. நாளை பெண்மைக்கு விடுதலை, ஆண்மைக்குச் சிந்தனை தாய்தைக்குப் புகழ், சமூகத்திற்கு தலைமைத்துவம், இளையோருக்கு பாதை வகுத்தல், சிந்தனைக்குச் சுதந்திரம்.

# குத்தாட்டமாக உருமாறிவரும் கூத்துக் கலைகள்

திரு. த. றொபேட் அருட்சேகரன்
முதுநிலை விரிவுரையாளர்
இசைத்துறை
யாழ் பல்கலைக்கழகம்



ஈழத் தமிழர்களின் மரபுவழியான கலைகளுள் கூத்துவடிவங்கள் முதன்மையானவை ஆகும். இக் கூத்துவடிவங்கள் பலவிதமான பணிகளைக் கொண்டதாக உள்ளன. குறிப்பாக ஈழத்தின் கிராமங்களில் கூத்துக் கலைகள் வரன்முறை தவறாமல் நிகழ்த்தப்பட்டு வந்தாலும் நகர்ப்புறங்களில் கூத்துக்கள் உருவம் மாற்றப்பட்டு வருகின்றன. நகரங்களில் கூத்துக்களை நிகழ்த்துவோர் அண்ணாவிமார் அல்லாதோராக இருப்பதால் தமது வசதிக்கும் இரசனைக்கும் ஏற்ப கூத்துக் கலைகளைக் கலவைத் தன்மை கொண்டதாக மாற்றி வருகின்றனர். மரபுவழிக் கலையான கூத்தினை நவீன அரங்கு பயின்றோர் சீரழித்துவரும் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஈழத்தமிழர்களின் அனைத்து ஆற்றுகைக் கலைகளுமே அண்மைக்காலமாக மாற்றமடைந்து வருகின்றன. 2009 இற்குப் பின்னரான அரசியல் மாற்றமும் இவ்விடயத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தத் தவறவில்லை. இறுவட்டின் துணையோடு பரதநடனமாடி அரசியல் தலைவர்களையும் அரசஅதிகாரிகளையும் வரவேற்கும் வரவேற்பு நடனங்களை நடனஆசிரியர்கள் இன்றுவரை நிகழ்த்தி வருகின்றமையை இதற்கோர் சான்றாகக் கூற முடியும். இதேபோன்று அண்ணாவியார் இல்லாத கூத்துப் பண்பாடு நகர்ப்புறங்களில் தோன்றியுள்ளமையால் கூத்துக்கலையானது தென்னிந்தியத் திரைத்துறையின் தாக்கம் கொண்டதாக உரு மாற்றப்பட்டுவிட்டது என்றே கூறலாம். கூத்துக்களை நிகழ்த்துவோரும் நிகழ்வை இரசிப்போரும் நடந்து கொள்ளும் முறைகள் கூத்துக் கலைகளின் உயிர்ப்பைக் கேள்விக் குறியாக்கி வருகின்றன. கூத்து நடைபெறும் இடம் திரைஅரங்கு போல் மாற்றப்படுகின்றது. கூத்துக்களின் புனிதம் இவர்களால் துளியளவும் பேணப்படவில்லை. கிராமங்களில் இருக்கும் அண்ணாவிமார்கள் இவ்வாறான கூத்துக்களைக் கண்டு திகைத்துப் போயுள்ளனர். அந்த அண்ணாவிமார்கள் சாதாரண மனிதர்களாகவும் தம்மை அதிகாரம் அற்றவர்களாகவும் தம்முள் நினைத்துக் கொள்வதால் தமது கருத்துக்களை வெளிப்படுத்தத் தயக்கம் காட்டி வருகின்றனர். தனிப்பட்ட முறையில் அண்ணாவிமார்களை அணுகும் பட்சத்தில் அவர்களின் உள்ளக் குமுறல்களை அறிய முடிகிறது.

"பட்டிணத்தில் படித்தவர்கள் கூத்தைப் பழுதாக்கி விட்டனர்" என்பது அவர்களது பெரும் கவலையாக உள்ளதை அறியமுடிகின்றது. அவர்களது எண்ணங்களும் கவலைகளும் கலைத்துறையின் ஆர்வலர்களால் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தென்மோடி, வடமோடி, மன்னார் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு, சிந்துநடை போன்ற முதன்மையான கூத்துவடிவங்கள் பலதரப்பினரால் சீரழிக்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தென்மோடிக் கூத்தினைத் தனியாக நிகழ்த்துதல் அல்லது வடமோடியைத் தனியாக நிகழ்த்துதல் என்னும்

முறையை மாற்றி எல்லாவகையான கூத்துக்களையும் கலந்து ஒரு கதையை கூத்துப் பாணியில் நிகழ்த்தி வருவதால் "பன்மோடிப் பாணி" ஒன்று புதிதாக உருவாகிவிட்டது. தென்மோடி அழிந்துவிட்டது. இவ்வாறான பன்மோடிப் பாணியானது அண்மைக்காலத்தில் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் பயிற்றப்பட்டு வருகின்றமை கிராமங்களில் இருக்கும் அண்ணாவிமார்கள், கூத்து இரசிகர்கள், பண்பாட்டை நேசிப்போர் போன்ற அனைத்து நிலையினரையும் தீராத வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

வெறும் மத்தளத்தோடு நிகழ்த்தப்பட்ட கூத்துக்கலை நாளடைவில் ஆர்மோனியத்தை இணைத்துக் கொண்டது. ஆர்மோனியத்தின் தன்மையும் அதை அக்காலத்தில் கையாண்டோரின் ஆற்றலும் தென்மோடிக் கூத்தினைச் செழுமைபெறச் செய்தது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் தற்காலத்தில் "கீபோட்"எனப்படும் மேலைத்தேசக் கருவியைக் கூத்துக்கான பக்கவாத்தியமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதனால் கூத்து இசையானது திரையிசையாக மாறிக் குத்தாட்டப் பாடல்கள் போன்ற உருமாற்றத்தைப் பெற்று விட்டது. தற்காலத்தில் ஆர்மோனியத்தை இசைப்போரும் கூத்துமெட்டுக்கள் தெரிந்து இசைப்பதில்லை. மெல்லிசைப் பாணியிலேயே தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். குறிப்பாக நிறுவனமயப்பட்டு இயங்கும் கல்வித் துறைசார்ந்தவர்களே கூத்துக் கலைக்குச் சாவுமணி அடித்துவிட்டனர். அவர்களின் சப்பாத்துக் கால்களுக்குள் தமிழினத்தின் மரபுக் கலைகள் அனைத்தும் நசிபட்டுவருகின்றன. விருதுகளையும் பதவிஉயர்வுகளையும் எதிர்பார்த்துச் செயற்பட்டுவரும் இளையோர் எமது மரபுகளைத் தகர்த்தெறிந்துவிட்டனர். கிராமங்களும் தற்காலத்தில் திரையிசை, மெல்லிசை என்பதுடன் பலவிதமான ஊடகங்களின் தாக்கத்தால் நலிவடைந்து போயுள்ளமை யாவரும் அறிந்ததே. கையடக்கத் தொலைபேசிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனிதனுக்குமுரிய போதுமான பொழுதுபோக்குச் சாதனமாக விளங்குகின்றது. வெளியே சென்று கலைகளை இரசிக்க வேண்டிய தேவை தற்காலத்தில் இல்லை என்றே ஒவ்வொரு மனிதனும் எண்ணுகிறான். இதனால் கலை வளர்ச்சி என்பது பல போராட்டங்களைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

குறிப்பாகத் தென்னிந்தியத் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் என்பன எமது மக்களை முற்றிலுமாக வீட்டிற்குள் முடக்கிவிட்டன. ஆற்றுகைக் கலைகளின் வளர்ச்சியில் பலவழிகளிலும் இதுவே பெரும் தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது. திரைப்பட நடிகர்களே எமது இளையோரின் முன்னுதாரண புருசர்களாக விளங்குகின்றனர். எமது மக்களின் தென்னிந்திய மோகமும் இவைகளுக்கான காரணங்கள் ஆகும். ஈழத்தின் தொலைக்காட்சிச் சேவைகளும் ஈழத்தமிழர்களின் மரபுக் கலைகளில் அக்கறையற்றே செயற்பட்டு வருகின்றன. தென்னிந்தியப் பாணியில் தமிழ் பேசும் அறிவிப்பாளர்கள், தொகுப்பாளர்கள் போன்றவர்களின் துணையோடு தென்னிந்தியத் தொலைக்காட்சி நிகழ்வுகளை மீளளிக்கை செய்யும் பணியையே ஈழத்துத் தொலைக்காட்சி சேவைகள் புரிந்து வருகின்றன. கூத்துக் கலைகளோ வேறு மரபுக் கலைகளோ ஈழத்தின் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுவதில்லை. கடந்த காலத்தில் ஈழத்தில் நிகழ்ந்த கொடிய போர் பல கூத்துக் கிராமங்களை அழித்தது. கூத்துக் கலைஞர்களும் அண்ணாவிமார்களும் இடம்பெயர்ந்தனர். அவர்களால் உருவாக்கப்பட்டிருந்த அரங்கம், அரங்கப் பொருட்கள் போன்றவையும் அழிக்கப்பட்டன. கால ஓட்டத்தில் பல அண்ணாவிமார்கள் மறைந்தும் போயினர். போரில் இருந்து மீண்ட தமிழ்ச் சமூகம் தனது மரபுக் கலைகளை மீட்டெடுக்க வேண்டும் அல்லவா. போரல் அழிக்கப்பட்டதை விடத் தற்காலத்தில் கல்வி கற்ற

நகர்ப் புறத்தாரால் கூத்துக்கலை மிகமோசமாக அழிக்கப்பட்டுவிட்டது. கூத்துருவ நாடகம் என்னும் பெயரில் தமிழர் கூத்துக்கள் உருமாற்றப்பட்டு விட்டமை வரலாற்றில் மன்னிக்க முடியாத ஒன்றாகவே பலராலும் பேசப்படுகின்றது. கூத்து வேறாகவும் நாடகம் வேறாகவும் நிகழ்த்தப்பட வேண்டும். இரண்டையும் கலந்தால் இரண்டும் இல்லாமல் போய் விடும். "வேட்டைப் பாடலை மட்டும் வைத்துத் தற்காலத்தில் கூத்துப் போடுகிறார்கள்" என்று அண்மைக் காலத்தில் முதுநிலைத் தென்மோடி அண்ணாவியார் ஒருவர் ஊடகமொன்றில் கருத்துத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எமது கலைகளைப் பாதுகாப்பதும் அதனை உரியமுறையில் அடுத்த சந்ததிக்குக் கையளிக்க வேண்டியதும் எமது தலையாய கடமையாகும். கிராமங்களில் தூய்மையோடு வளர்க்கப்பட்ட கூத்துக் கலைகள் நகரத்தில் அழிக்கப்பட்டு வருகின்றமை நிறுத்தப்பட வேண்டும். தொடர்ச்சியான கூத்துவிழாக்களை நிகழ்த்துவதன் ஊடாக தமிழர் கூத்துக்களை மீட்டெடுக்க முடியும். கூத்துருவ நாடக முறைகள் தொடர்ந்தால் தென்மோடிக் கூத்தினைத் தேடி அலைய வேண்டிய நிலை ஈழத்தமிழருக்கு ஏற்படும்.



# தமிழர் இசைக்கருவிகளும் தற்கால பயன்பாடும்

**செல்வி. தர்சினி ஞானேந்திரன்**
கம்சப்பிரியா இசைக்கல்லூரி
ஈச்சமோட்டை



ஆரம்ப காலத்தில் வாழ்ந்தவர்கள் இசை நிகழ்வுகளின் போதோ சமய நிகழ்வுகளின் போதோ பல்வேறு விதமான இசைக் கருவிகளை பயன்படுத்தி வந்தனர். ஆனால் இந்த இசைக் கருவிகளின் நாதம், தாளம் ஆகிய அனைத்துமே வித்தியாசமாக இருந்தது. இதனை தமிழர் இசைக் கருவிகள் என்று அழைக்கின்றோம். இசைக் கருவிகள் அன்றாடப் பொருட்களை கொண்டே ஆக்கி உள்ளனர். வீட்டில் காணப்படும் மரங்கள், சூழலில் இருந்து பெறக்கூடிய மரங்களை கொண்டே இசைக்கருவிகளை ஆக்கி உள்ளனர்.

இசைக்கருவிகளை இரு கூறாகப் பிரிக்கலாம். பண்களை இசைக்கத் தகுந்த வற்றைப் பண்ணிசைக் கருவிகள் என்றும் தாளத்தைப் பொருத்தமாகக் குறித்துச் சுவையுடன் ஒலிக்கும் கருவிகளைத் தாளக் கருவிகள் என்றும் குறிப்பிடலாம். மேலும் இசையெழுப்பும் வாயில்களைக் கொண்டு அவற்றை நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, கஞ்சக் கருவி எனப் பிரிக்கலாம். அவை மரம், மூங்கில், நரம்பு, கயிறு, தோல் முதலியவற்றால் பல உருவில் செய்யப்பட்டுள்ளன.

## ஆகுளி:-

இது தாளவிசைக் கருவியாகும். இது முழவுக்கு இணையாகவும் துணையாகவும் அமையும் கருவியாகத் தோன்றுகின்றது. இசைக் கச்சேரிகளில் ஆரம்ப காலத்தில் தாள இசைக் கருவியாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

## எல்லரி :-

இது வலிய வாயைவுடையது. அகலமானதாக இருந்திருக்க வேண்டும். கடிகவர் பொலிக்கும் வல்லாய் எல்லரி (மலைபடுகடாம் 10) என்ற ஒரு இடத்தில் மட்டும் இதனைப் பற்றிய குறிப்பு உள்ளது. "கடிகவர்பு ஒலிக்கும்" என்று கூறியிருப்பதனால் அதன் ஒலி மிகுதியான கவர்ச்சியுடன் எழுந்திருக்கும் எனக் கருதலாம்.

## குளிர்:-

தட்டைகளைப் போன்று பறவைகளை ஒட்டத் தினைப்புனத்தில் பயன்பட்டதாகும். பின்னர் இது இசைக்கருவியாக விளங்கியது. "பாடுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே இசையின் இசையா இன்பாணித்தே" குறுந்தொகை என்கிறது. குளிர் என்பதற்கு குடமுழவு என்று கழகத்தமிழ் அகராதி கூறுகின்றது. மண்குடங்களில் வாயில் தோலைக்கட்டி அடித்து ஒலி உண்டாக்கி விலங்குகளையும் பறவைகளையும் விரட்டியுள்ளனர்.

## முழவு :–

இது தண்ணுமையைப் போன்ற கருவியாகக் கருதப்படுகின்றது. முழக்கம் என்ற சொல்லின் பொருளைக் கொண்டு முழவுக்குப் பெயர் அமைத்திருக்கலாம். பனைமரத்தடி, பலாப்பழம் போன்றவை இதற்கு உவமையாக சுட்டப்பட்டுள்ளன. இது குறுங்கம்பு கொண்டும் கைவிரலைக் கொண்டும் அடித்துத்தாளவிசை எழுப்பிச் சுவைக்கும் கருவியாகும்.

## முரசு:–

முரசு என்பது பெரிய உருவில் அமைந்த கொட்டாகும். குடைவுடைய மரத்தாலும் பரந்த கண்ணை மூடியுள்ள தோலாலும் இறுக்கிக் கட்டப்பெற்று தோல் வாராலும் துரசு செய்யப்பட்டு இருக்கும். முரசு பலவகைப்படும். இதில் முக்கியமானது அரசவை முரசு ஆகும். இது பகை மன்னனின் காவல் மரத்தால் செய்திருப்பர் எனக் கூறப்பட்டுள்ளது. காளையின் தோலை மயிர் உரிக்காமல் இதற்குப் பயன்படுத்தியுள்ளதைப் புறநானூற்றுப் பாடல் பதிவு செய்திருக்கின்றது.

## கடம்:–

கடம் கருநாடக இசையுடன் தொடர்புடைய தென்னிந்தியத் தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றாகும். இது மிக எளிமையான ஓர் இசைக்கருவி ஆகும். இது ஒரு பெரிய மண்பானையில் தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக்கருவியாகும். கட இசைக் கலைஞர்கள் அமர்ந்த நிலையில் கடத்தின் வாயைத் தன் வயிற்றோடு ஒட்டவைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் அடித்து வாசிப்பார். கர்நாடக இசைக்கச்சேரிகளைப் பொறுத்தவரை மிருதங்கத்தைப் போல இன்றியமையாத ஓர் இசைக்கருவியாக இல்லாவிட்டாலும் பல இசை நிகழ்ச்சிகளில் கடம் பயன்படுத்தப்படுகின்றது.

## கஞ்சிரா:–

கஞ்சிரா சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். பஜனைகளிலும் கிராமிய மக்களாலும் பயன்படுத்தப்படும் வாத்தியம் இதுவாகும்.

## கொக்கறை :–

கொக்கறை என அறியப்படும் நெருக்கமான இரு இசைக்கருவிகள் உள்ளன. ஒன்று மாட்டின் கொம்பால் செய்யப்படுவது. மற்றையது இரும்புக்குழல். முதலாவது கோயிலிலும் இரண்டாவது சாற்றுப்பாடலின் போதும் பயன்படுத்தப்பட்டது.

## கொடுகொட்டி (இசைக்கருவி)

கொடுகொட்டி என்பது தோற்கருவி வகை சார்ந்த தமிழர் இசைக்கருவிகளுள் ஒன்று. இது ஒரு வகைப்பறை எனும் முழவுகருவியாகும். இதனைப் பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்திலும் தேவாரத்திலும் உள்ளன. இக் கருவி தற்காலத்தில் கிடுகிட்டி என்றழைக்கப்படுகிறது. நாகசுரக் கச்சேரிகளிலும் இடம்பெறுகிறது.

## உடுக்கை :-

உடுக்கை என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தும் கிராமிய இசைக் கருவிகளில் ஒன்றாகும். கிராமப் புறகோயில்களிலும் முக்கியமாக மாரியம்மன் கோவில் சமயச் சடங்குகளிலும் இது ஒலிக்கப்படும். தோல் இசைக் கருவியான இதைத் கைகளைக் கொண்டு இசைக்கலாம். உலோகத்தால் அல்லது மரத்தால் செய்யப்பட்ட இரு பக்கங்களும் விரிந்து இடை சிறுத்துப் பருத்திருப்பதால் இதை இடை சுருங்கு பறை என்றும் துடி என்றும் அழைப்பர். கரகம் ஆடும் போதும் பஜனைகளின் போதும் பூசாரியை உருவேற்றுவதற்காகவும் இது முழக்கப்படுவதுண்டு.

## தவண்டை :-

தவண்டை என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக்கருவிகளில் ஒன்றாகும். உடுக்கை ரூபத்தில் உள்ள பெரிய தாளக்கருவியே தவண்டை ஆகும். வழக்கமாக மாரியம்மன் கோவில்களில் இந்த இசைக்கருவி வாசிக்கப்படுவதைக் காணலாம். துவண்டை குச்சியால் அடித்து வாசிக்கப்படுகின்றது.

## சேகண்டி அலல்து சேமக்கலம்

மேலும் இதனைச் சவுண்டி, செகண்டை, செயகண்டி, செயகண்டிகை என்றும் அழைக்கப்படுகின்றது. சேமகலத்தை வெண்கலத்தால் வட்டவடிவமாக உருவாக்கப்படுகிறது. வெண்சங்கொலியுடன் சேகண்டி அல்லது சேமக்கலத்தை, கனத்த தேக்கு குச்சியால் அடித்து ஒலி எழுப்பப்படுகிறது.

திருச்சங்கு திருமாலுக்கு உரியது. சேமக்கலம் சிவனுக்கு உரியது. சிவனும் திருமாலும் ஒன்றே என்ற உயர்ந்த தத்துவத்தை விளக்கும் பொருட்டு சேமக்கலத்தை சங்கொலியுடன் இணைத்து இசைக்கப்படுகின்றன.

சிவன் கோயில்களில் சுவாமி புறப்பாட்டின் போது சேமக்கலம் எனும் சேகண்டி இசை ஒலி எழுப்பப்படுகின்றது. பிற்காலத்தில் மனித இறப்புக்களில் சேகண்டியுடன் சங்கு ஒலிப்பது நடைமுறைக்கு வந்துள்ளது. இறப்புக்களில் வாசிக்கப்படும் பித்தளையால் ஆன சேமக்கலத்தை சேகண்டி அல்லது சவுண்டி அல்லது சேகண்டி என்பர். மேற்கு வங்காள மாநிலத்தில் திருமண விழாவின் போது சேமக்கல ஒலியுடன் சங்கொலி மற்றும் குலவை ஒலி பெண்களால் எழுப்பப்படுகிறது.

## பறை :-

பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். தோலால் ஆன மேளமாகும். பறை என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். "பேசு" எனப் பொருள்படும். "அறை" என்ற சொல்லினின்று "பறை" தோன்றியது. (நன்னூல் : 458) பேசுவதை இசைக்கவல்ல தாளக்கருவி பறை எனப்பட்டது. பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை ஓர் இசைக்கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக்கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். தமிழர் வாழ்வியலின்

முகம் என வருணிக்கப்படுகிறது. "பறை" என்பது ஓடும் இசையை ஒழுங்கு பெற நிறுத்தி ஓர் அளவோடு சீரோடு, ஒத்த அழகோடு நடக்க இசைக்கு நடை கற்பிக்கும் கருவி என முனைவர் வளர்மதி தன்னுடைய பறை ஆய்வு நூலில் விளக்குகிறார்.

## தம்பட்டம் :–

தம்பட்டம் என்பது சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக்கருவிகளில் ஒன்றாகும். இதன் ஒரு பக்கம் தோலால் மூடப்பட்டிருக்கும். டண்டண்டண்டணக்கு என்று கேட்கும் படியாக கிராம தேவதைகளின் திருவிழாக்களில் ஓர் இனத்தார் தம்பட்டங்களை வாசிப்பதைக் காணலாம்.

## கொடுகொட்டி

கொடுகொட்டி என்பது தோற்கருவி வகை சார்ந்த தமிழர் இசைக் கருவிகளுள் ஒன்றாகும். இது ஒருவகைப் பறை எனும் முழவுக்கருவியாகும். இதனைப் பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்திலும் தேவாரத்திலும் உள்ளன.

இவ்வாறு பல்வேறு வகையான இசைக்கருவிகள் ஆரம்பகாலத்தில் பயன்படுத்தப்பட்ட போதும் தற்காலத்தில் இந்த இசைக்கருவிகள் மிக அரிதாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனுடைய பாவனை குறைந்து தற்சமயம் ஓர்கன், வயலின், வீணை, புல்லாங்குழல் போன்ற நவீன இசைக்கருவிகளையே பயன்படுத்துகின்றனர். பாரம்பரிய இசைக்கருவிகள் கற்கின்ற மாணவர்களும் குறைவாகவே காணப்படுகின்றனர்.



# அன்பால் அணைப்போம்

திருமதி செ. பவானி
யாழ் இந்து மகளிர் கல்லூரி.



அன்னைமடியில் தவழ்ந்திடும் பிள்ளை
அழகு மொழியில் வளர்ந்திடும் பிள்ளை
சின்னக் கால்கள் பூமியில் பதிந்தே
சிறகை விரிக்கும் வேளையில் நல்ல
முன்னோர் வகுத்த நல்வழி யாவும்
மூத்தோர் இதமாய்ச் சொல்லி வளர்த்தால்
தன்னை நன்றாய் அறிந்திட முயல்வான்
தரணி போற்றிட வாழ்வில் உயர்வாள்

காலச் சூழலில் கைகள் கோர்த்துக்
கலந்திடும் உறவுகள் நல்வழிகாட்ட
சாலச் சிறந்த கல்வியின் அறிவால்
சமய சன்மார்க்க சமரச நெறியால்
கோலம் மாறா ஒழுக்க வழியால்
கொள்கை மிக்க நேரிய வாழ்வால்
ஆலமரமாய் அவனியில் வாழ
அன்பால் அணைத்தே வழிகாட்டிடுவோம்

வன்முறை கொண்ட வார்த்தைகளாலே
வதைப்புறும் பார்வை வீச்சுக்களாலே
சின்ன மனங்களைச் சிதைத்தே அடக்கிச்
சினமும் விரக்தியும் சேர்ந்தே வளர்த்து
பென்னம் பெரிய சுமைகளைச் சுமத்தி
பேசும் வாய்களை மூடியடக்கி
தன்னைத் தாழ்த்திடும் தடைகளை வளர்க்கும்
தரக் குறைவான செயல்களை நீக்குவோம்.

கொள்ளையடிக்க கொலைகள் புரிய
குலைத்து வாழ்வைக் குதறிடச் செய்ய
கள்ளை அபினைக் கஞ்சாவைக் குடித்து
களித்துப் போதையிலாடி மகிழ தமிழர்
பிள்ளைகளானவர் எப்படி மாறினார்
பிழைகள் விட்டவர் யாரோ யாரோ?
முள்ளை மெல்ல எடுப்பது போல
முயற்சி செய்தால் முடியாததல்ல.

தாழ்ந்து கல்வியில் தலைசாயலாமோ?
தரமற்ற மனிதராய் வளர்ந்திடலாமோ?
சூழ்ந்த துயர் என்றும் தொடர்கதையாமோ?
சொல்லிச் சொல்லியே காலங்கள் போமோ?
வாழ்ந்த பெருமைகள் அழிந்திடலாமோ?
வழிகள் இருந்தும் தவித்திடலாமோ?
யாழ்மண் என்றும் வீழ்வதுமில்லை
விண் தொடும் சாதனை ஓய்வதுமில்லை.



# உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்தல்

சைவப் புலவர்
**சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்**
B.A, MA, MED, PGDE, PGDEM , SLEAS II
ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர்



நாம் வாழும் சூழல் எம்மை வளமாக வாழக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது. மனித வாழ்க்கை மேலும் வளம் பெறவேண்டுமென பலவிதமான அபிவிருத்திச் செயற்பாடுகள் பலராலும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் சமூக விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப் பட்டு வளமான சமூக வாழ்க்கை முறை அமையுமானால் அது மிகவும் ஆரோக்கியமானதாக அமையும். மனித வாழ்க்கை வட்டத்தில் பல்வேறு தடைகளைத் தாண்டி வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் எதிர் நீச்சலடிக்க வேண்டிய நிலைமைகளும் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளில் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறுவது ஒற்றுமையாக வாழ்வது உளவியல் ரீதியான ஆறுதலைத் தரும்.

சிறுகுழந்தைகள் முதல் முதியவர்கள் வரை எல்லா வயதுப் பிரிவினரிடையேயும் அன்றாட வாழ்க்கையில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவற்றைத் தமக்குள்ளேயே வைத்துக் கொண்டு துன்ப நிலைக்காளாகாமல் தமது நெருங்கியவர்களிடம் கதைத்தால் ஆறுதல் ஏற்படுகிறது. ஒருவரை ஒருவர் காணும்போது சுகநலம் விசாரித்தல் மனக் கஷ்டத்தைக் குறைக்கும் முதலாவது படியாகிறது. துன்ப துயரத்திலிருப்பவர்கள் தமது மனக் கஷ்டத்தை தமக்கு நெருங்கியவர்களிடம் கூறும்போது அவர்கள் கூறும் ஆறதல் வார்த்தைகள் மன அமைதியை ஏற்படுத்துகிறது. ஆலய வழிபாடு ஆலயத்திற்கு சென்று வருதல் விழுமியப் பண்புகளை மேம்படுத்தி மனநிறைவைத் தருகிறது. மனதிலுள்ள கஷ்டங்களைக் குறைத்து மன அமைதி பெற வழி வகுக்கிறது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனும் பழமொழி இதனை உறுதிப்படுத்துகிறது. ஆலய வழிபாட்டிற்குச் சென்று மன அமைதியைப் பலர் பெற்றுக் கொள்கின்றனர்.

குழு விளையாட்டுக்களில் பங்குபற்றி விளையாடும் போது ஒற்றுமை, உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபடக் கூடிய நிலை என்பவற்றை ஏற்படுத்துகின்றது. விளையாட்டுக்கள் மனிதரை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பாரதியாரின் பாடலில் மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா எனக் கூறப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்திலேயே விளையாட்டுக்களைப் பழகினால் அது உள ஆரோக்கியத்துடன் வாழ வழி வகுக்கும் என்பதில் உறுதியாகிறது.

பாரதியார் பாடல்கள் பல சிறுவர்களைக் குழந்தைகளை விழித்துப் பாடுவதாக அமைந்துள்ளது. விழுமியப் பண்புகள் சிறுவயது முதலே கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவம் அறிந்து அவர் அவ்வாறு பாடியுள்ளார். பல திரைப்படங்களில் அவரது பாடல்கள் மக்களை வழிப்படுத்தும் வகையில் கையாளப்பட்டுள்ளன. திரைப்படங்களில் பல உளவியல்

தாக்கங்களைக் குணப்படுத்தக் கூடிய வகையிலமைந்துள்ளன. பாடசாலைகளில் மாணவர்களின் உளவியல் தாக்கங்களை குணப்படுத்துவதற்கு மகிழகம் என அறை ஒன்று அமைக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்புகளிலும் உளவியல் ரீதியான தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு உளவளத் துணை வழங்கப்படுகிறது. பாடசாலையில் கற்கும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் வீட்டுச் சூழல் மற்றும் காரணங்களால் கற்பதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உளவளத் துணை வழங்கப்படுகிறது. இதற்கெனப் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் அல்லது இருவர் ஒவ்வொரு பாடசாலைகளிலும் தமது கற்பித்தல் பணிகளுடன் இப் பணியையும் செய்து பல மாணவர்கள் உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபட வழி செய்துள்ளனர்.

குறித்த ஆசிரியர் என்று பார்க்காமல் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களின் கல்வி, உடல் நலங்களில் கவனம் செலுத்துவதுடன் உள நலத்திலும் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் நிலைமைகள் காணப்படுகின்றன. வகுப்பறைச் சூழல் மற்றும் சக மாணவர்களினுடைய செயற்பாடுகள் கல்வி கற்பதிலும் மனப் பிரச்சினையின்றித் தமது செயற்பாடுகளைச் செய்வதிலும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

மாணவர்களின் உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்துவதற்கு வீட்டில் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் பெரியோர்களும் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களும் கவனம் செலுத்தி வழிகாட்ட வேண்டும். மன நிலைகளில் பிரச்சினைகள் இன்றி இருந்தால் மாணவர்கள் கல்வியில் பாடவிதான இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மிகவும் சிறந்த முறையில் துலங்குவர்.

சாதாரணமாக வகுப்பறைக் கற்றல் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் தவணைப் பரீட்சைகள் மாணவர்கள் இலகுவாக எதிர் கொள்வார்கள். அதில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை என்பவற்றை மனத் துணிவுடன் எழுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் நல்ல ஆலோசனைகளையும் வழி காட்டல்களையும் வழங்க வேண்டும். பரீட்சை நெருங்கும்போது கஷ்டப்படாமல் பொதுப் பரீட்சைக்கு முன்கூட்டியே பாடங்களை நன்றாகப் படித்தல், மனனம் செய்ய வேண்டியவற்றை மனனம் செய்தல், கடந்த கால வினாக்களுக்கு விடை எழுதிப் பழகுதல் தம்மைத் தாமே தயார்படுத்திப் பரீட்சை எழுதுவதற்குரிய மன நம்பிக்கையை ஏற்படுத்துதல் மூலம் எந்தப் பரீட்சையையும் எதிர்கொள்ளலாம். பரீட்சைப் பெறுபேறு திருப்தி என்றால் உளத் தாக்கங்கள் குறையும்.

சமூக சீர்திருத்த நாடகங்கள் மூலமாகவும் உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்தலாம். மக்கள் மனதைப் பக்குவப்படுத்தக் கூடிய ஊடகங்களில் நாடகங்களும் முக்கிய இடம்பெறுகின்றன. முற்காலத்தில் நாடகங்கள் அதனையே கருப்பொருளாகக் கொண்டு எழுதி நடிக்கப்பட்டன. அதனைப் பார்த்து எத்தனையோ பேர் ஆறுதல் அடைந்துள்ளனர். தமது உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபட்டுள்ளனர். அவ்வாறான நாடகங்கள் மேலும் தற்கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப எழுதி நடித்தால் உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்தும். ஆனால் இன்றைய தொலைக்காட்சி நாடகங்கள் இதற்குச் சாதகமான முறையிலமையாதிருப்பது

துரதிஷ்டம் போல் தெரிகிறது. மக்களை சரியான வழியில் வழிகாட்டி உளவியல் தாக்கங்களை குணப்படுத்தி உளவளத்துணை செய்யக் கூடிய வகையில் மேடை நாடகங்கள் தொலைக்காட்சி நாடகங்கள் அமைந்தால் அது மிகப் பெரும் நன்மையாக அமைந்து விடும்.

தற்போதைய வாழ்க்கை முறையில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்லுதல் தனிக் குடும்பமாக வாழ்வதால் பிள்ளைகளைப் பராமரித்தல் பாடசாலைக்கு அனுப்புதல் போன்றவற்றில் பல பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் சிறந்த ஒழுங்கமைப்பு திட்டமிட்ட வாழ்க்கை முறை எல்லோராலும் பின்பற்றப்படுவதில்லை. இதனாலும் பல உளவியல் தாக்கங்கள் ஏற்படுகின்றன. இதற்குச் சரியான முறையில் கணவன் மனைவி புரிந்துணர்வுடன் நல்ல திட்டமிடலைச் செய்து அதனடிப்படையில் இருவரும் வேலைகளைப் பகிர்ந்து தாமே முன்வந்து ஒருவருக்கொருவர் சாதகமான முறையில் செய்வதாக இருந்தால் உளவியல் தாக்கங்கள் மிக இலகுவாகக் குணப்படுத்தலாம். பல வேலைகள் முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்வது விரும்பத்தக்கது.

வீட்டில் மட்டுமல்ல வேலைசெய்யுமிடங்களிலும் ஒருவருக்கொருவர் உதவியாகவும் நிலைமைகளைச் சரியாகப் புரிந்து வேலைகளை ஒழுங்குபடுத்திச் செய்வதனூடாகப் பிரச்சினைகளைக் குறைக்கலாம். உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபடலாம்.

வீடாக இருந்தாலும் வேலை செய்யும் இடமாக இருந்தாலும் ஏனைய இடங்களில் ஒருவருக்கொருவர் சாதகமான செயற்பாடுகளை செய்வதன் மூலம் பல நன்மைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. ஒருவரை ஒருவர் குறையாகக் கதைப்பதைவிட இருக்கும் நிறைகளைக் கண்டு அவற்றைப் பாராட்டி எந்த இடத்திலும் நல்லதையே செய்து முன்மாதிரியாக நடக்கும்போது பெருமாற்றத்தினை காண முடியும். இதனால் பலருடைய மனங்களிலிருக்கும் உளவியல் தாக்கங்கள் குணப்படுத்தப்பட்டு சிறந்த உளவளத்துணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

உளவளத்துணையாளர்கள் உளவியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு (counselling) செய்வதன் மூலம் உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்துகின்றனர். எனினும் இன்று எல்லோரும் உளவளத் துணையை எதிர் பார்க்கின்ற நிலைமை காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறுவதாகவும் ஒருவரது நெருக்கடி மனக்கஷ்டங்களைக் கேட்டு அதற்கு உளவளத் துணை வழங்குபவர்களாகவும் எம்மை நாமே தயார் செய்து பல்வேறு நிலைகளிலும் உளவளப் பிரச்சினைகளோடு இருப்பவர்களுக்கு உளவியல் தாக்கங்களைக் குணப்படுத்தும் வகையில் உளவளத் துணையாளர்களாகச் செயற்படுவோமாக இருந்தால் கூட்டுறவு முறையில் நாமெல்லோரும் நன்மை பெற்று மேம்பட்ட சமூக விழுமியங்களைப் பின்பற்றி வளமான சமூகமாக வாழலாம்.

# நாவலும் நாணலும்

திரு. ச. முருகையா
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



கடந்த இரண்டு நாளாகக்
கரை கடந்து அலை எறிந்து
பொங்கிப் பெருகி ஓடிய
இக்காட்டாற்றின்
பெருக்கும் வேகமும்
இரண்டு நாட்களின் பின்
இன்றுதான் தணிந்துள்ளது!
ஆற்றோரம் நின்ற நாணல் - ஓடும்
நீரின் வேகமும் குறையவே
நிமிர்ந்து நிற்கிறது!
ஆற்றோரம் நிமிர்ந்து
நின்றதொரு நாவல் மரம்
சாய்ந்து கிடக்கிறது
நீரின் வேகத்திற்கும்
நீரின் பெருக்கத்திற்கும்
ஈடு கொடுக்க முடியாததால்!!
இதனைக் கண்டதும்
நாணல் - ஏளனமாக
"உன்னைப் பார்க்கப்
பரிதாபமாக உள்ளது"
என்றுரைத்தது
கூப்பிடு தொலைவினுள்
சாய்ந்து கிடந்த
நாவலைப் பார்த்து!
"ஏன்" என்று கேட்டது
அலட்சியமாக நாவல்!
"விழுந்து விட்டாய்
உனது வாழ்க்கையும்
முடிந்து விட்டது
என்றது நாணல்
பரிகாசமானதோர்
சிரிப்பொன்று நெளிய
அதற்கென்ன இப்போது
அதுபற்றி நானே
கவலைப்படவில்லை
கவலை உனக்கேனோ?
என்றது நாவல்
சாய்ந்தமை பற்றிக்
கிஞ்சித்தாகிலும்
சஞ்சலம் இன்றியே!
"என்னைப் போல் நீயும் "
இருந்திருந்தால்
என்னைப் போல் நீயும்
"வாழ்ந்திருக்கலாம்"!
மாபெரும் தவறை நீ
விட்டு விட்டாய்
என்றது நாணல்
ஏக்கத் தொனியில்!
தவறென்ன விட்டேன் ?
சொல்லு பார்க்கலாம்
என்றது நாவல்
ஏளனக் குரலினில்!
சாய வேண்டிய நேரத்தில்
சாய்ந்து நிற்கிறேன்!

நிமிர வேண்டிய நேரத்தில்
நிமிர்ந்து நிற்கிறேன்!
இப்படி வாழ்வதால்தான்
இப்படி நெடுங்காலம்
வாழ்கின்றேன் பாராய்
என்றது நாணல்
பேருண்மையொன்றை
உரைப்பது போல!
இது கேட்ட நாவல்
இலேசாக நகைத்தது!
என் பேச்சு உனக்கு
நகைப்பாக உள்ளதா?
என்றது நாணல்
சினம் கொண்டதாக!
சின்னத்தனம் மிக்க உன்
பேச்சைக் கேட்டதும்
வியப்பா தோன்றும்!
என்னையும் மறந்து
சிரித்து விட்டேன்
சிரித்து விட்டேன் என்று
சினம் கொள்ளாதே
என்றது நாவல்
சமாளிக்கும் நோக்கில்
நர் சொன்னதிலே
என்னதான் பிழை - சொல்
என்றது நாணல்
சினம் கொண்டதாக
ஏறிட்டுப் பார்த்து - பின்
ஏளனக் குரலில்
ஆற்றுக்கும்
காற்றுக்கும்
வளைந்து கொடுத்து
வாழும் உன்னறிவைப்
பாழும் உன் நிலையைப்
பார்க்கும் போது
சிரிப்பும் வரும்!
சினமும் வரும்!
சிரித்து விட்டேன்!
என்றது நாவல்
அப்படியென்றால் - உன்
கருத்தினைச் சொல்லு
அதனையும் கேட்போம்!
என்றது நாணல் !
"நான் சொல்லுவதனை
நன்றாகக் கேட்டுக் கொள்
உயர்ந்த இலட்சியம்
உள்ளத்தில் வேண்டும்!
இலட்சியம் காக்கும் - மன
உறுதியும் வேண்டும்
தலைதான் போகும்
நிலை வந்தாலும்
எது வந்தாலும்
எவர் சொன்னாலும்
இலட்சியம் காப்பான்
இலட்சியவாதி!
சாய்ந்து கொடுத்தலும்
தளர்ந்து நிற்றலும்
இலட்சியவாதியிடம்
இருக்கவே மாட்டாது
இருக்கவும் கூடாது"
என்றது நாவல்!
விழித்தது நாணல்
"புரியவில்லையே - உன்
புதிர்ப்பேச்சு"
என்றது நாணல் ஏக்கத் தொணியில்
தான் சொல்லியதை
விளக்கும் நோக்கில்
என்னைப் பார்!

எவருக்கும் சாயாது
எதற்கும் தளராது
நிமிர்ந்து நின்றேன்
நிற்கும் வரை நின்றேன்
நிற்க முடியாத நிலை
வந்து விட்டால்
சாய்ந்து கிடக்கிறேன்
நிற்கும் வரையினில் - என்னை
நினைக்கும் வகையினில்
பலபேருக்கும்
பலவாறு உதவினேன்!
குளிர் நிழல் தந்தேன்!
இனிய பழம் தந்தேன்!
விறகு தந்தேன்!
மருந்தானது எனது பட்டை!
உணவானது எனது இலைகள்!
இன்னும் பலவாறும்
பலருக்கு உதவினேன்
இப்போது நான்
பெருக்குக் காரணமாக
விழுந்து விட்டேன்
நிற்க இயலாததோர்
நிலை ஏற்பட்டதால்
அதற்காக நானென்றும்
அழவும் மாட்டேன்
என்னைக் காப்பாற்று
என்று பிறரைத்
தொழவும் மாட்டேன்
என்றுரைத்த நாவல்
உற்றுப் பார்த்தது நாணலை
நாவல் கூறியதை
விளங்கிக் கொள்ள
முடியாததால் - நாணல்
விழிபிதுங்கி நிற்பதனை
விளங்கிக் கொண்ட நாவல்
"உனக்கும் பயனின்றி
உலகுக்கும் பயனின்றி
உன்னைப் போன்றோர்
சீர்சிறப்புடனே நூறாண்டு காலம்
வாழும் போதிலும்
பயனில்லை
வாழ்வின் போதும்
வாழ்வின் பின்னும்
பயனில்லை
பிறருக்கு உதவுபவன்
இலட்சியவாதி!
இவ்விடத்தினிலே
பெரியதோர் நாவல்
நிமிர்ந்து நின்றது!
படர்ந்து நின்றது!
நல்ல பழம்
நல்ல நிழல்
விறகுக்கென்றும்
விலங்குக்கென்றும்
தழைக்கத் தழைக்க
வெட்டினார்கள்
வெட்ட வெட்டத்
தழைத்து நின்றது
இன்று என்னை - நாளை
இவ்விடத்தை யாரும்
கடக்கும் போது
நினைத்து மகிழ்வார்!
வியந்து பேசுவார்!
இன்று என் இல்லாமையை
எண்ணி மனதில்
ஒரு கணமேனும்
நினைந்தும் வருந்துவார்!
நீயில்லாக் காலத்தில்

நினைப்பாரோ உன்னை?
உனது இருப்பைப் பற்றி
உனது இல்லாமை பற்றி
துயர்ப்படுவோரோ?
இடர்ப்படுவாரோ?
உயிர் வாழும் போது
எதனை நீ செய்துள்ளாய்?
உன் இருப்பைப் பற்றி
நினைத்துப் பார்ப்பதற்கென
நீயென்ன பதிவை
விட்டுச் செல்லுவாய்?
உன்னை நினைத்து
உன் இல்லாமையை எண்ணி
உள்ளம் நோவதற்கு?
உள்ளம் நெகிழ்வதற்கு?
நாணலைப் பார்த்து
நாவல் கேட்டது!
அவ்வேளையில்தான்
அவ்விடம் நோக்கி
வண்டியொன்றுடனே
விரைந்து வந்தனர்
ஆயத்தங்களுடன்
ஆயுதங்களுடன் சிலபேர்
வீழ்ந்து கிடக்கும்
நாவலை வெட்டிட!
புரிந்து கொண்ட
நாணல் இது கண்டு
மௌனமாகியது!
இதனை அறியாத நாவல்
"என்ன எதனையும் நீ"
சொல்லவில்லையே?
என்று கேட்டது!
"அதோ பார்" என்று
நாணல் சுட்டிக் காட்டிய
திசையினைப் பார்த்த
நாவல் - அவர்கள்
தன்னை நோக்கியே
வருகிறார்கள் எனத்
தெரிந்து கொண்டது?
தெளிந்து கொண்டது?
தனது வாழ்க்கையின்
கடைசி நிமிடம்
கடுகி விட்டதென
நெருங்கி விட்டதென
அறிந்து கொண்ட நாவல்
அமைதி கொண்டது -
"நடப்பது நடக்கட்டும்" -
என்னெண்ணிக் கொண்டே!
விரைந்து வந்தவர்கள்
இறங்கினர் செயலில்!
வீழ்ந்த நாவலின்
செழுமையை வியந்தபடி
இலைகளை வேறாக்கினர்!
கிளைகளை வேறாக்கினார்!
வெட்டினர்!
கட்டினர்!
வண்டியில் ஏற்றினர்!
வந்தவழி திரும்பினர்!
நடந்தவற்றைப் பார்த்து
வியந்து நின்றது
அதிர்ந்து நின்றது
நாணல் தொலைவில்!
திரும்பியவர்களில் ஒருவன்
போகும் வழியிலே
தன்னைத் தடை செய்த
நாணல் ஒன்றினை
"கண்டறியாத நாணல்" -
எனக் கூறியபடி

பிடுங்கி எறிந்து சென்றான்!
நாவலுடன் இதுவரையில்
உரையாடிய நாணல் -
"நாவல் இதுவரையில்
உரையாடிய நாணல் -
"நாவல் இதுவரை
சொல்லிய எதுவுமே
விளங்கவேயில்லை" எனத்
தனக்குத் தானே
கூறிக் கொண்டது!
நாவல் சொன்னவைகள்
நாணலுக்குப் புரியவில்லை!
நாணலுக்குப் புரிய வைக்க
நம்மாலும் முடியாது!
நிற்க - உலகில் நாம்
நாவல் போல்
வாழ்வோமா?
இல்லையேல் -
நாணல் போல்
வாழ்வோமோ?
நாவல் வாழ்க்கை வாழ்பவர்கள்
நம்மிடையே உள்ளார்கள்!
அது போல
நாணல் வாழ்க்கை வாழ்பவரும்
நம்மிடையே உள்ளார்கள்!
உங்கள் வாழ்க்கை?
நாவலா?
நாணலா?
நாவல் போல் வாழவும்
எல்லோர்க்கும் இயலாது!
நாணல் போல் வாழவும்
எல்லார்க்கும் இயலாது!
சிந்தித்துப் பதில் தருவீர்!
உண்மையைச் சொல்லுவீர்!
உண்மையாய்ச் சொல்லுவீர்!

"முருகு"





# கூட்டுக் குடும்பம் குதூகலமானது

திரு. க. மயில்வாகனம்
J/82, வண்ணார்பண்ணை,
முதியோர் சங்க உறுப்பினர்.



குழந்தை பிறந்ததென அறிந்து ஆவலுடன் திரும்பி வந்தேன். காலையில் வேலைக்கு நான் சென்ற போது இயல்பாக இருந்து வழமையான வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தவள், லேசாக இடுப்புவலி ஆரம்பித்து கடுமையாகி வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்று சுகமாக குழந்தை பெற்றெடுத்து வீட்டுக்குத் திரும்பியுள்ளனர். ஒரு பகல் பொழுதுக்குள் இவ்வளவும் நடந்தேறியதா என ஆவலுடன் வீடு திரும்பினேன். டேய் எனக்கொரு பூட்டன் பிறந்துள்ளானடி என மகிழ்வு பொங்க அம்மம்மாவும், எனக்கு ஒரு பேரனைக் கடவுள் தந்துள்ளார் என அம்மாவும் குதூகலிக்க பிள்ளையையும் மனைவியையும் பார்க்கும் ஆவலுடன் உடல் கழுவிக் கடவுள் வணங்கி அறையுள் வந்தேன். பிள்ளை பெற்ற களைப்பு போல் அவள் அயர்ந்திருந்தாள். அருகில் புத்தம் புதிய ரோசாப்போல ஒரு ராசாக்குட்டி தூங்கிக் கொண்டிருந்தான். என்ன மாயமோ நான் வந்துள்ளதை எவ்வாறு அறிந்து கொண்டதோ தெரியவில்லை. கண்விழித்துப் பார்த்துக் குறுமுறுவல் பூத்தான். இவனது களங்கமற்ற இக் குறுமுறுவலால் தான் எமது குடும்பத்தை இணைத்து வைத்திருக்கிறான். எப்படி சுகமா இருக்கிறீர்களா என்றேன்.

எனக்கொரு ஆண்மகனைக் கடவுள் தந்துள்ளார் என்றாள் மகிழ்ச்சி பொங்க. முதலில் நான்கும் பெண் குழந்தைகளாகப் பிறந்த ஏக்கம் குரலில் தெரிந்தது. மனப்பூரிப்புடனும் சந்தோசமாகவும் இருப்பது தெரிந்தது.

எனக்கொரு பூட்டன் பிறந்திருக்கிறான் என அம்மம்மாவும் எனக்கொரு பேரன் கிடைத்திருக்கிறான் என அம்மாவும் எனக்கொரு ஆண் மகனைத் கடவுள் தந்திருக்கிறார் என மனைவியும் மகிழ்ந்து கொண்டாட இதில் ஒன்றுமேயில்லை என நான் விளங்கிக் கொண்டேன். ஆணாதிக்க தடைகளையெல்லாம் தகர்த்து நொருக்கி எனது பெண் குழந்தைகளும் இக் காலத்துப் பெண் பிள்ளைகளும் தங்கள் தங்களைப் பல்வேறு துறைகளிலும் மேம்படுத்திப் பரிணாமித்து வருகின்ற சூழலில் ஆண் குழந்தை என்றதும் மகிழ்ந்து கொண்டாட என்ன இருக்கின்றது என மயங்கி நின்றேன். எங்கள் பெண் பிள்ளைகள் அனைவரும் கல்வியிலும் சரி, வெளிக்கள நிலைகளிலும் சரி, ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதிலும் முன்னிலை வகித்தாலும் கூட ஆண் குழந்தை என்றதும் அதற்கான குதூகலமும் மகிழ்வும் வீட்டில் நிலவவே நானும் இணைந்து கொண்டேன்.

பொதுவாக மார்கழி மாதந்தான் மாதங்களில் சிறந்ததென கொள்ளப்பட்டாலும் ஐப்பசி மாதமும் அதற்கான சிறப்புகளுடனும் பெருமைகளுடனும்தான் திகழ்கின்றது.

முதல்நாளே சிறுவர்களுக்கும் மூத்தவர்களுக்குமான வாழ்த்துக்கள் பாராட்டுக்களுடன் ஆரம்பிக்கிறது. குழந்தை பிறந்தால் முதுமையும் நிச்சயம் எனக்கருதி இவ்வாறு அமைத்தார்களோ தெரியவில்லை. 1ம் திகதி சிறுவர் தினம் கொண்டாடப்பட அந்த வாரம் முழுவதும் மூத்தோர்களுக்கான வாரமாக கருதிக் கொண்டாடி அவர்களை ஆற்றுப்படுத்து கின்றோம். இடையில் 6ம் திகதி ஆசிரியர் தினம் (உலகெங்கும் 5ம் திகதி) கொண்டாடி மகிழ அந்த மாதம் முழுவதுமே வாசிப்பு மாதமாகக் கொண்டாடுகிறோம். ஒரு பிள்ளை பிறந்து வளர்ந்து கற்று வாசிக்கத் தெரிந்து முதுமையடைந்து மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால் இவ்வாறு அமைந்திருக்கவும் கூடும். கார் பொழிந்து காடு கரம்பை மேடெல்லாம் மரகதப் போர்வையால் போர்த்தப்பட்டு பூமித்தாயானவள் பூரித்துக் காணப்படுகின்ற காலத்தில் எடுக்கப்படுகின்ற இவ்விழா உலகம் பூராகவும் கொண்டாடப் பெறுகின்றது.

ஒரு குழந்தையானது கர்ப்பத்திலிருக்கும் போதே கற்றுக்கொள்ள ஆரம்பித்தாலும் தினம் தினம் புதிது புதிதாகக் கற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் தன்னைத் தாங்கித் தேற்றித் தூக்கி வைத்துக் கொண்டாட வேண்டுமென அவாவுற்றே அழுகின்றது அல்லது சிரிக்கின்றது. எல்லா அழுகை நேரமும் உணவுக்காகவல்ல என்பதை தாய் நன்றாக அறிவாள். ஆதலால் அம்மம்மாவிடமோ பூட்டாச்சியிடமோ எடுத்துக் கொடுத்துவிட்டு தனது வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். தளராத உடலமைப்புக் கொண்டிருக்கும் அம்மம்மாக்கள் வேலைகளில் உதவினாலும் பாட்டியின் அரவணைப்பிலும் அறநெறிக் கதைகளையும் கேட்டு வளரும் குழந்தைகள் மிகவும் ஆரோக்கியமாகவும் ஒழுக்கமுள்ளதாகவும் வளர்கின்றன. நிலாக் காட்டிச் சோறூட்டும் போது கூறுகின்ற நீதிக் கதைகள் பிள்ளையின் அடிமனதில் குடியேறி எப்போதும் அவனை நல்வழிப்படுத்தும்.

பொதுவாகவே வீட்டிலுள்ள ஆண்கள் அனைவரும் உழைப்பாளிகளாகவும் வருமான மீட்டுவதற்காகவும் வெளிச்செல்ல தாத்தாவும் வீட்டில் சிறுபயிர் வளர்த்தும் ஆடு, கோழி போன்றன வளர்த்தும் பராமரித்து வருவதைக் காணும் குழந்தைக்குப் பிற உயிர்கள் பேண வேண்டும் என்ற சிந்தனையும் அவற்றிற்கு உணவிட வேண்டும் என்ற உணர்வும் அவற்றின்பால் அன்பும் வளர்த்துவிடும் அன்பு, கருணை, நேசம், அயலவர்களை மதித்தல், விடாமுயற்சி, சுறுசுறுப்பு, பயிர் வளர்த்து உண்ண வேண்டும் போன்ற உயர் குணாம்சங்களை வளர்த்து விடவே அவன் ஒரு முழு மனிதனாக மாறிவிடுவான். இரந்தோ அல்லது ஏமாற்றியோ தட்டிப் பறித்தோ உண்ணாமல் தனதுணவைத் தானே வளர்க்க வேண்டுமென வளர்வான்.

தாத்தாவும் பூட்டப்பாவும் வயசான காலத்திலும் கண்ணாடி அணிந்து கொண்டும் புராணக் கதைகளையும் தான் படித்து சுவைத்த நாவல்களையும் வாசிப்பது கண்டு இவனும் வாசிக்கப்பழகுவான். மூத்தவர்கள் கற்றுத்தரும் இறைவணக்கப் பாடல்களையும் தோத்திரங்களையும் இள வயதிலேயே கற்றுக் கொள்ளப் பழகுவான். வாசிப்பதால் இவன் ஏன், எதற்கு, எவ்வாறு, எப்படி எனக் கேள்விகள் கேட்டுத் தெளிவும் பெறுவான். முதியவர்கள் அறிவுடனும் ஓய்வாகவும் இருப்பதால் இவனது கேள்விகளுக்குப் பொறுமையாக விடைகளை விளக்கங்களுடன் கூறுவதால் இவன் தன்னை மென்மேலும் மெருகேற்றிக் கொள்வான்.

வீட்டிலோ ஊரிலோ நடைபெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தும் மூத்தவர்களின் ஆலோசனைப்படியும் அறிவுறுத்தல்படியும் நடப்பதால் அவை நல்ல பயன்தருவது கண்டு அறிவை வணங்கத் தொடங்குவான். அறிவுடையோரை மதித்து நாடி சந்தேகங்கள் நீக்கப்பெறவும் இயலுமானவனாகின்றான். எமது கலாசாரம், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் அனைத்தும் போதனை மூலமாக அன்றிப் பார்த்துப் பின்பற்றப்பட்டு வருபவையாதலால் மூத்தவர்களின் அறிவுரை ஆலோசனைகளைக் கேட்டு கட்டுப்பட்டு பணிந்து அடங்கி நடக்கும் பிள்ளைகள் வளரும் குடும்பங்கள் என்றும் குதூகலமாகவே திகழும். மூத்தோர் அறிவும் அனுபவமும் தான் ஒருவன் பெற்றுக் கொள்ளக் கூடிய முதுசம் ஆகும். ஆதலால் இணைந்து வாழ்வோம். இசைந்து வாழ்வோம். இணைத்தும் வாழ்வோம்.



# பெண்ணியம் காத்திடு



**திரு. சின்னராசா ருகுணாஸ்**
B.A (hons)
கிராம அலுவலர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

பெண்களை நாமிரு கண்கள் என்கின்றோம்
கண்களை நாமே காயமும் செய்கின்றோம்
போற்றுவார் மேடையில் பொக்கிஷம் தானென்று
தூற்றுவார் மறுநொடி பாரினில் தானே

தாயெனத் தாரமாய் தங்கையாய் அக்காவாய்
சேயெனத் தானவள் தரணியில் வாழ்கிறாள்
தீயெனத் தான் சிலர் சிந்தையில் கொள்ளாது
பெண்ணியம் சிதைப்பாரோ ஏன்? கூறு

"மங்கையாய் பிறந்திட மாதவம் செய்ய வேண்டும்"
இங்குளோர் இதையறிந்து செயலாற்ற மாட்டாரோ
பெறுமதி கொண்ட எம் பெண்ணினம் சிதைத்தல்
சிறுமதி கொண்டவர் செயல் தானே

அன்னையும் பெண்ணே சகோதரியும் பெண்ணே
உன்னையும் தாங்கியுன் மகவையும் தன்னுளே
தாங்கிய பெண்ணியம் சிதைத்தல் பாவம்
தூங்கும்முன் புகழிதை உணர்ந்திடல் வேண்டும்

"இன்றைய சிறுவரே நாளைய தலைவராம்"
மேடையில் புகழுவோம் பேச்சினில் தானே
பேச்சினில் பயனில்லை வாழ்வினில் கடைப்பிடிப்பதை
மூச்செனக்கொள் முதலில் நீயும்

சிறுவரை பெண்களை காத்திடு உறுதியாய்
அவர் நலம் போற்றிடு இறுதியாய் - பெண்களும்
சிறுவரும் நம்மிரு கண்ணென போற்றியே
உண்மையாய் முடிவெடு இன்றே பெண்ணியம் காத்திட.

## கலாசார விழா - 2018 வரவேற்பு நடனம்
## நடன ஆசிரியர் திருமதி. சுதர்சினி கரன்சன் மாணவிகள்



## கலாசார விழா - 2018 இஸ்லாமிய கசீதா நிகழ்வு
## யாழ். ஒஸ்மானியக் கல்லூரி



# கலாசார விழா - 2018



# கலை இலக்கியப் போட்டி சான்றிதழ் வழங்கல் - 2018



**கலாசார விழா - 2018**
**யாழ்பாடி - 2 கலாசார மலர் வெளியீடு, முதற்பிரதி வழங்கல்.**



**கலாசார விழா - 2018**
**யாழ்பாடி - 2 கலாசார மலர் அட்டைப்பட வடிவமைப்பு**
**திரு. பரமன் ஸ்ரீதரன் அவர்களை கௌரவித்தல்**



## கலாசார விழா - 2018 கூத்து பண் இசை நிகழ்ச்சி
## யாழ். திருமறைக் கலா மன்றம்



## கலாசார விழா - 2018 குருசபதம் நாட்டுக்கூத்து
## குருநகர் இளைஞர் கலைக்கழகம்.



## யாழ் ரத்னா விருது - 2018



## இளம் கலைஞர் கலைத்துறை சான்றிதழ் - 2018






Guru Printers - Thirunelvely.
021 222 8266, 021 222 4777